TC LIBRARY
9658
C31·K
1931

No. 231:K/L493.1
Author பரஞ்சோதி -னந்தை (அ)
Title ...

Thiagarajar College

Please do not meddle with this pocket or the card inside.

9658

**Thiagarajar College Library**
Madurai - 625 009.

Acc. No.: 9658 Call No.:

This book should be returned on or before the date last marked below.

A fine of Rs.2 will be charged for each day the Book is kept overtime.

30 OCT 2019
L700362L
1

வேள் பாரி.

(நாடகம்)

அ. மு. பரமசிவானந்தம்,
எம்.ஏ., எல்.டி., எம்.லிட்.
துணைத் தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

The Library
Thiagarajar College
Location No.....................

# வேள் பாரி

## முதல் அங்கம்

### காட்சி 1

**சிங்கன் :** ஏன் அண்ணே இப்படியே உட்கார்ந்திருக்கே. வேட்டைக்குப் போகாமெ? ஏன் இன்னிக்கி இப்படி காலங்காத்தாலே சோர்ந்திருக்கே? புள்ளைங்க எங்க அண்ணே?

**குளுவன் :** சிங்க ! நீ இராத்திரி எப்போ ஊட்டுக்கு வந்தே? உனக்கு ஒண்ணும் சமாச்சாரம் தெரியாது போலிருக்கு.

**சிங்க :** ஏன் அண்ணே ! என்ன சமாச்சாரம் ?

**குளுவ :** ஒன் பெண்டாட்டிகூட ஒண்ணும் சொல்லலியா ?

**சிங்க :** இல்லே அண்ணே. நான் இராத்திரி வரச்சே ரொம்பநாழி ஆயிடுத்து அண்ணே. அவளைக்கூட

எழுப்பாமே கலயத்திலே இருந்ததைக் குடிச்சுட்
அப்படியே படுத்துக்கினேன் அண்ணே.

குளுவ: சரி சரி, இனி நாம் வேட்டைக்குப் போகக்கூடாது
தெரியுமோ?

சிங்க: என்ன அண்ணே? ஏன் அண்ணே போகக்
கூடாது? பின்னே எப்படி அண்ணே வயிறு நிரப்
பறது.

குளுவ: நம்ம ராஜா வந்திருக்கிறாரே புதிசா அவர் பேரு
இன்ன.

சிங்க: புதுசா பட்டத்துக்கு வந்ததே அதுங்களா. ஆமாம்
அதுக்கு என்னமோ பேராச்சே! ஆமாம்! ஆமாம்
பாரி என்று சொல்லுறுங்க.

குளுவ: ஆமாம், அந்த ராசாதான் புதுசா ஒரு சட்டம்
போட்டுருக்கிறார்.

சிங்க: அது என்ன அண்ணே!

குளுவ: அது என்ன எண்ண, இனிமே நாமெல்லாம்
வேட்டைக்குப் போவக் கூடாதாம்.

சிங்க: அப்போ அவரு சோறு போடுவா ராக்கும்?

குளுவ: அடே! அதுக்கல்லப்பா. சோறு நம்ப நாட்டிலே
கிடைக்காமேயா போகப்போறது. அவர் ரொம்ப
நல்லவராச்சே.

சிங்க: அதனாலே வேட்டை ஆடக்கூடாதா என்ன?

குளுவ: டே! அப்போ வேட்டையாடச்சே நம்ம கையிலே
ஆப்பிடுற பறவை மிருகங்களெல்லாம் எப்படித்
துடிக்கிது பார்த்திருக்கிறாயா?

சிங்க: ஆமா அண்ணே! அதைப் பார்ப்பதே ஒரு தனி
ஆனந்தம் அண்ணே!

...ளுவ: இனிமே அந்தமாதிரி யெல்லாம் சொல்லாதே. அதுங்க துடிக்க துடிக்க எனக்குக்கூட நேத்துவரை யிலே ஆனந்தமாத்தான் இருந்தது. ஆனா இராத்தி ரியே புடிச்சி அந்த எண்ண மெல்லாம் மாயமா பூடுது.

...சிங்க: ஏன் அண்ணே அப்படி? அப்ப நீ இனிமே வேட்டைக்கு வரப்போறதில்லேண்ணு சொல்லு.

...ளுவ: சிங்கா! நான் இஷ்டப்பட்டாலும் வர முடியா திங்கரேன். அப்படி நாம்ப தப்பித்தவறி வேட்டைக் குப் போனா, நம்மை வேட்டையாடி புடுவாங்க?

...ங்க: யாரண்ணே அப்படிப்பட்ட சூரனுங்க. ஒருவ... பார்க்கலாம் அண்ணே.

...ளுவ: சிங்கா! நான்கூட முதல்லே அப்... நினேச்சேன். ஆனல் இராத்திரி யெல்... காத்தாயியும் யோசனே பண்ணி பண்ணி... முடிவுக்கு வந்துட்டோம்.

...சிங்க: என்ன முடிவு அண்ணே!

...ளுவ: இனி திருட்டுத்தனமாக்கூட வேட்... போறதில்லேயின்னு.

...ங்க: நல்லாயிருக்கு தண்ணே உங்க நாயம்! நம்ம சாதிப் பொழப்பெ உட்டுட்டு என்னண்ணே பண்றது.

...ளுவ: பயித்தியக்காரா நம்ம நாட்டிலே மலேயிலே இதை விட்டா வேறே வழியில்லே. சொல்லறியே வெக்கமில்லாமே. மத்த நாடுகளேப் போல வறண்டு, ஒண்ணும் கிடைக்காமே திண்டாடற நாடா இது. இப்ப என் பசங்களே எங்கே அனுப்பிச்சிருக்கேன் தெரியுமா? கொம்புத்தேன் ஒடிச்சிக்கினு, அப்படியே சிறியிலே நெல்லு சேர்த்திக்கினு, அந்த வள்ளிக் கிழங்கைத் தோண்டியாரச் சொன்னே.

சிங்க: அண்ணே! இதெல்லாம் நமக்குப் புதுசா இருக்கிறது அண்ணே. நான் வேட்டைக்குப் போறேன் அண்ணே.

குளுவ: சிங்கா, இவ்வளவு சொல்லியும் உனக்கு ஏறலியா? நமது புது மகாராஜா யாரும் வேட்டைக்குப் போகக் கூடாதுன்னு உத்தரவு போட்டிருக்காங்க. நேற்று பறை சாத்தனுங்க. அப்படிப்போனு அவர்களுக்குச் சிறையாம். அந்த வேலை செய்யாதவங்களுக்கெல்லாம் மலையிலே ஒரு காணி கொடுத்து, வள்ளிக்கிழங்கு எல்லாம் பயிரிடவும், தேன்கூடு பண்ணைவைக்கவும் ஏற்பாடாம். இதுபற்றியெல்லாம் இராத்திரிமுழுதும் ...சனை பண்ணினேன். மகாராசன் நல்லவன். அந்த ...ெல்லாம் நாம் கொல்லக்கொல்ல எப்படி அலறும். ...ாக இதோ போய் ஒரு ஏக்ரா நிலமும் வாங்கி ...போறேன் தம்பி!

...படியா அண்ணே, ரொம்ப நல்லதாப் ...ச்சு. இப்படியும் ஒரு ராசா எங்கேயாவது இருப் ...ங்களாண்ணே. மனுசனையே உயிரோடு வரிவரி ...ன்னு போட்டுக் கொல்லற ராசாங்க இருக்கப்போ இப்படி பறவை விலங்கையும்கூடப் பாதுகாக்கிற பாரி ராஜா நமக்குக் கிடைத்தது நல்லதுதான் அண்ணே. சரி அண்ணே, நான்கூட வரேன் அண்ணே. புத்தி வந்திட்டது.

குளுவ: சரி. வா போகலாம். நமக்கு முன்னயே எத்தனையோ பேர் போயிருக்கிறுங்க.

## காட்சி 2

பார்ி பறம்பு மலையின் ஒரு சார் அமைச்சர் சூழ சுற்றி வருகின்ருன். அவைப் புலவரும் அருகிருக்கின்ருர்.

இயற்கையான எழிலே எல்லாம் அவர் பாரிக்கு விளக்கி வருகின்றார்.

**அவைப் புலவர் :** அரசே. நம் நாட்டைப் போன்ற இயற்கை வளனும், எழில் நலனும் பொருந்திய நாடு கிடையாது என்று நம் நாட்டு ஒற்றர் எடுத்துச் சொல்லியதைக் கேட்டீர்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் தங்கள் அன்பு கலந்த ஆணையே என்பதை நாங்கள் அறிவோம். வாழ்க நின் கொற்றம்!

**பாரி :** அறிஞர் பெருமானே, நன்றாயிருக்கிறது. இயற்கையோடு இலங்கும் இவ்வெழில் நலத்துக்கும் என் ஆணைக்கும் என்ன பொருத்தம்?

**அ. புலவர் :** தலைவ! தங்களது ஆணைவழி மலைவாழ் வேடுவர் தற்பொழுது இம்மலைகளிலும், காடுகளிலும் வேட்டையாடப் புகுகின்றார் அல்லர். அவர் தம் தகுதிக்கேற்ற பிற பணிகளை மேற்கொண்டு வாழ்கின்றனர். ஆகவே காட்டிலுள்ள விலங்குகளும் பறவைகளும் பயமின்றி இன்பில் காலத்தைக் கழிக்கின்றன. தவிற, அவர்தம் அடியும் பிறவும் படாததால் புல் பூண்டுகளும் பிறவும் நல்ல முழு நிறைவு பெற்று வளர்கின்றன. இவற்றைக் கண்டு மகிழ்வதே கண்களுக்குப் பெருவிருந்தாக அமைகின்றதே.

**பாரி :** புலவர் பெருமானே, வனவேடுவ மக்கள் எப்படி சட்டத்தினுல் உடன் அடங்கிவிட்டனர். மீறி நடப்பார் ஒருவரும் இல்லையென ஒற்றர்கள் கூறுகின்றார்களே?

**அ. புலவர் :** அரசர் பெருமானே, அதோ அமைச்சர் இருக்கின்றார். அது பற்றி அவரே நன்கு பதிலிறுக்கக் கூடும் என எண்ணுகிறேன்.

**அமைச் :** ஆம் அண்ணல். நானே பல வேடுவர் குடில் களில் மாறு வேடத்துடன் புகுந்து பார்த்தேன். காடுகளில் காவல் வைத்து அறிந்தேன். நமது பறை கேட்ட அந்த நாள் முதல் ஒரு வேடுவர்கூட வேட் டைக்குக் காடு நோக்கி வரவில்லை. அதனால் அவர் தம் வீட்டு வாழ்வும் கெட்டதாகக் காணப்பட வில்லை. முன்னிலும் பன்மடங்கு மகிழ்ந்தே யிருக் கிறார்கள்.

**பாரி :** அது எப்படி அவர்களால் இயல்கின்றது?

**அமைச் :** அரசே! அதில் வியப்பில்லை. பிறக்கும் ஆண் அன்பு வழியில் பிறந்தால் ஆணவரும் அதற்குக் கட்டுப்பட்டுத்தான் அடங்குவர். அடக்கு முறை வழியில் ஆண் பிறந்தால் அதை எதிர்க்கும் மனப் பான்மை ஆண் பிறந்த அதே நேரத்திலே அயலவர் உள்ளத்தே உருவாகி விடுகின்றது. தங்களது அறத்தாறு அமையும் அன்பு ஆணையே அவர்களைக் கட்டுப்படுத்தியது. மற்றும் அவர்கள் அத்துட னில்லாது, ஒருவரையும் வேலையற்றவராகச் செய் யாது தக்க வழிகளும் காட்டியுள்ளோம். வேட்டை யால் வயிறு வளர்த்த எந்தக் குடும்பமும் இன்று வாழ்வுக்காக வாட்டமுறவில்லை. ஆகவே ஆணத்தும் அன்பில் அடங்குகின்றன.

**பாரி :** அறிந்தேன். எனினும் அக்குடிகளது பெருந்தன் மையைப் பாராட்டாது இருக்கமுடியவில்லை.

**அ. புலவர் :** மன்ன! ஆம். அவர்கள் பாராட்டலுக் குரியவர்கள்தான். ஆனால் அந்தப் பாராட்டெல்லாம் இறுதியில் தங்களையே வந்து சேரும். ஆண பிறப் பிக்கும் தலைவர்கள் வழுக்கிவிழும் வாழ்க்கையாளர்

களாயிருந்தால், அவ்வாணையை மேற்கொள்ள நிற்கும் மக்கள் மாறுபடுவர். தாங்கள் உயிர்க் கருணையும், உளப்பண்பும், ஒருங்கே அமையப்பெற்ற காரணத்தால் உங்கள் ஆணைவழி மக்கள் வாழ்வு நடத்துகின்றார்கள். அரசே! அதுதான் அரசியலின் ஆணிவேர்!

பாரி: அறிகிறேன். (வெளியே ஆரவாரம் கேட்கிறது) அது என்ன பேரோசை!

அமைச்: இதோ நான் அறிந்துவருகிறேன். (வெளியே சென்று திரும்பி) அரசர் பெருமானே, தங்களை இதுவரை நேரில் கண்டறியாத இப்பகுதியில் வாழும் வேடுவ குலமக்கள் தங்களைக் காணவேண்டும் என்ற பெரு விருப்புடன் காணிக்கைகளையும் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். பார்க்க அனுமதிக்கலாமா? அன்றி பிறகு—?

பாரி: வேண்டாம். வேண்டாம். உடனே அவர்களை வரச் சொல்லுங்கள். 'காட்சிக்கெளியனை' விளங்கும் தமிழ் மரபில் வந்த மன்னனாகிய பாரி தன் குடிமக்களைக் காண நேரம் தாழ்ந்தான் என்று சொல்ல லாகாது. உடனே அவர்களை உள்ளே வர விடுங்கள்.

அமைச்: காணிக்கைகளில் ஏதேனும் விரும்பாப் பொருள்கள் இருந்தால்——வேடுவராயிற்றே என்று ஐயுறுகின்றேன்.

பாரி: அப்படி ஒன்றும் இருக்காது என எண்ணுகின்றேன். இருப்பின் அதைத் தடுத்துவிடுங்கள்.

அ. புலவர்: என்ன அமைச்சரே! தாங்கள்கூடவா இப்படி ஐயுறவேண்டும். அவர்தம் அன்பு நெறியறிந்த அந்த

வேடுவ மக்களா அவ்வாறு விரும்பத்தகாத வேட்டைப் பொருள்களைக் கொண்டுவருவார்கள்.

**அமைச் :** இல்லை. இதோ உள்ளே அனுப்புகிறேன். (வெளியே செல்கிறார். வேடுவர் உள்ளே வருகின்றனர்.)

**வேடுவர் :** கும்பிடுகிறோம் ஐயா! எங்கள் குலதெய்வமே நீ நீடூழி வாழ்க!

**வேடுவர் தலைவன் :** மன்னர் மன்னு! எங்கள் இடம் நோக்கி வந்த உங்கள் அறக் கருணையை எண்ணி எண்ணி மகிழ்வடைகின்றோம். இதோ இங்கு வந்துள்ள நாங்களும், எங்களைச் சேர்ந்த பிறரும், தங்கள் அன்பு ஆணை, முரசு வழி முழங்கக் கேட்ட அந்த வேளையிலிருந்து, வேட்டை ஆடும் அந்தக் கொடும் தொழிலைவிட்டுவிட்டோம். கிழங்கு தோண்டியும் மூங்கிலரிசிபோன்ற பிற அரிசிவகைகளைச்சேர்த்தும்,தேன் முதலிய இனிய பண்டங்களைக் கொண்டும் எங்கள் வாழ்வை நடத்தி வருகின்றோம். எங்களுக்கு அதனால் ஒரு குறையும் வரவில்லை. உடல் நலனும் கெடவில்லை. எங்கள் இளைஞர்கள் முன்னிலும் அதிக உணர்வோடும், உயர்வோடும் கடமை மறவா நெறியிலே நின்று பணியாற்றுகின்றார்கள். அண்ணல்! இதோ, நாங்கள் உங்களைக் காணும் பேறு பெற்றமைக்கு மகிழ்கின்றோம். நின் கொற்றம் வழிவழி சிறப்பதாக! நாங்கள் அன்புக் காணிக்கையாகக் கொண்டு வந்த பொருள்களை யேற்று எங்களை வாழ்த்தியருளக் கேட்டுக் கொள்கிறோம்.

**பாரி :** நல்லது. அன்பர்களே, வணக்கம். தங்கள் அன்பு கனிந்த வாழ்த்துக்கு நன்றி. தங்கள் பணியால் நாடு

நலமுறுவதாக. இங்கு உங்களைக் கண்டதிலே ஒரு தனி மகிழ்ச்சி பெற்றேன்.

**வே. தலைவன் :** மன்னு ! நாங்கள் இன்று பெற்ற பெரும் பேறு வேறு யார் பெற்ருர் வையகத்துள். ஏ! மாடா காடா, எங்கேடா, அந்தப பொருள்களைக் கொண்டு வந்து வையுங்களடா.

**அமைச் :** ஐயா ! தாங்கள் என்னென்ன கொண்டு வந்துள்ளீர்கள்.

**வே. தலைவன்:** இதோ எடுத்து வைக்கிறேன். ஐயா. இதோ மூங்கிலரிசி கொண்டுவந்திருக்கின்ருேம். அரசர் தம் பெருஞ்சேனைக்கு ஆற்ருதாயினும் எங்கள் அன்பிற்கு அமைந்ததைக் கொண்டுவந்தோம். அதோ, இவை பலாப்பழங்கள். வள்ளிக்கிழங்கு, பெருக்கெடுத்தோடி வரும் தேன், இவைதான் எங்கள் கையுறை. மன்ன ! அவற்றை ஏற்று எங்களை வாழ்த்தி யருளுங்கள்.

**பாரி :** நல்லது அமைச்சரே ! அவற்றை அட்டிற்சாலைப் பக்கம் அனுப்புங்கள். பெரியவரே, நான் ஒரு கலைப்பித்தன் என்பதைத் தாங்கள் அறிவீரா.

**வே. தலைவன் :** ஆம் ! ஆம் ! சொல்லக் கேள்விப்பட்டிருக் கிறேன்

**அ. புலவர் :** ஐயா, தங்களது கலைமணம் கமழும் குரவைக் கூத்தை அரசர் காணவிரும்புகிருர். ஆகவே, அதை நடிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

**பாரி :** புலவரே, நன்கு என்னைப் படித்திருக்கிறீர்கள். பெரியவரே! ஆம், உங்கள் குரவைக் கூத்தைக் காணலாமோ.

**வே. தலைவன்:** ஐயா! அதற்காகத் தானே நாங்கள் வந்திருக் கின்ருேம். தான் கற்ற வித்தைகளைத் தாயிடம் காட்டி

மகிழாத சேயும் உலகில் உண்டோ! கலையுளம் படைத்த தங்கள் நிலையறிந்தே குரவை நடனம் செய்யத்தக்க ஏற்பாடுகளோடு வந்திருக்கின்றோம். (அனைவரையும் அழைத்து குரவைக் கூத்தைத் தொடங்குமாறு ஆணையிடுகின்றான் வேடுவர் தலைவன். குன்றக்குறவர் கூத்தினை இனிய பாட்டுடன் தொடங்குகின்றனர். பாரி அக்கூத்தில் தன்னை மறந்திருக்கின்றான்)

## குரவைப் பாட்டு

1. சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
எரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே.

2. அணிமுகங்க ளோராறும் ஈராறுகையும்
இணையின்றித் தானுடையான் எந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பில் கோன்எத்த மாறட்ட வெள்வேலே.

3. சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுலைப்பா லுண்டான் திருக்கை வேலன்றே
வருதிகிரி சோலவுணர் மார்பம் பிளந்து
குருதி பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேலே.

## வேறு

வேலனார் வந்து வெறியாடும் வெற்பிதுவே
கோல அழகியது கொடுங்குன்று பறம்புமலை
சாலப் பலபொருளும் தண்டாத நல்வினையும்
மேலும் வளம்பெருக்கும் மேன்மைதரு எங்கள்மலை.

பறம்புமலை யிருந்து பாடிப் புகழ்பரவி
சுரும்பும் வளப்பாடும் தூயவளம் நிரம்பும்
அரம்பை கமுகுசென்னெல் அத்தனையும் கண்டிலாம்
நிரம்ப நலம்மணக்கும் நெடுமலையும் வாழியவே

வாழி பறம்புமலை வாழி அதன் கற்றலைவன்
வாழி உயர்வேள்பாரி வாழி அவன் கொடைநலனும்
வாழி இயற்கைநலம் வாழி எழிற் கலைகள்
வாழி தமிழ்மொழியும் வாழியினி தூழியெல்லாம்.

(கூத்து முடிகிறது)

**பாரி :** புலவர் பெருமானே: எப்படி யுள்ளது நம் மக்களது குரவைக்கூத்து.

**அ. புலவர் :** மன்னர் மன்னனே, தங்கள் உளநலனே போன்று அவர்தம் கலை வளனும் உயர்ந்துள்ளது.

**பாரி :** அமைச்சரே, அவர்கட்கு வேண்டிய பணமும் பொன்னும் வாரி வழங்குங்கள்.

**அமைச் :** அப்படியே அண்ணல்.

**வே. தலைவன் :** ஐயா ! நாங்கள் சென்று வருகின்றோம். வாழ்க நின்கொற்றம். (செல்கின்றனர்)

**பாரி :** புலவர் பெருமானே, எனக்கு நெடுநாளைய ஆசை ஒன்று உண்டு. அதை நீங்கள் நிறைவேற்றித் தருவீர்களா !

**அ. புலவர் :** மன்ன! இயலுவதாயின் இயற்றத் தடையில்லை.

**பாரி :** அதுதான் நம் மலை வளத்தையெல்லாம்—காணும் குறிஞ்சி நலத்தையெல்லாம்-தொகுத்துப்பாட்டிசைத்துத் தாங்கள் தர அதைக் காணவேண்டும் என்பது எனது ஆசை.

**அ. புலவர் :** அரசே ! என்னால் இயன்றதைச் செய்வேன். என்றாலும் இந்தக் குறிஞ்சியைப் பாடுவதற்கென்றே ஒரு புலவன் இன்று மண்ணில் பிறந்திருக்கின்றான். எனினும், அவன் பாட்டு நிச்சயம் இனிக்கும்.

**பாரி :** யாரது? நான் அறிவேனோ?

**அ. புலவர் :** அண்ணல் ! அவன் புலவர்க்குப் புலவன்.

அவன் முன் நாங்கள் கதிரவன்முன் மின்மினிகள். அவனது குறிஞ்சிப் பாடல்கள் என்றென்றும் உலகில் வாழும். உங்கள் புகழ்கேட்டு என்றேனும் ஒருநாள் நிச்சயம் உங்களை நாடி வரத்தான் போகிறான்.

**பாரி :** யார் அவன் அந்தப் புலவன்? பேர் சொல்லாது பேசுகிறீர்களே.

**அ. புலவர் :** ஆம், புலனழுக்கற்ற புலவன் கபிலன். செந்நாப்புலவன். செந்தண்மை பூண்டவன். அவன் மலைவளம் பாடக்கேட்பின் பயன் உண்டு.

**பாரி :** புலவரே, நீங்கள் அவரை அறிவீரா? இங்கு அழைப்பீரா?

**அ. புலவர் :** நன்கு ஏற்பாடு செய்கிறேன்.

**பாரி :** நல்லது, உடனே ஏற்பாடு செய்யுங்கள். உணவுக்கு நேரமாகிறது. செல்லலாம் வாருங்கள்.
(போகின்றார்கள்.)

## காட்சி 3

**பாரி:** மக்கள் மன்றத்திலே நான் நடந்துகொள்ள இன்னும் எவ்வளவோ பழகவேண்டும். மன்னனே, தன் நாட்டின் உயிர் என்பதை ஏட்டில் படித்திருக்கிறேன். அதை என் வாழ்வில் செயல் முறையில் கொண்டு வரப் பாடுபடுவேன். என் வாழ் நாள் எனக்காக மட்டும் அமைந்ததன்று. இதோ என் நாட்டில் உள்ள அத்தனை உயிர்களும் என் வாய்ச் சொல் நோக்கித் தானே காத்துக் கிடக்கின்றன. எனவே அவற்றை வாடவிடும்படி பார்த்தல் நீதியாகுமா! என் வாழ்வுத் தரம் குறையினும் மக்கள் வரியின் தரம் உயரலாகாது. என் இன்பத்தின் எடைதேயினும் மக்களின் துன்பத் துளி பெருகலாகாது. உயிர்கள் இன்புற நான் வாழ

கின்றேனே ஒழிய, என் இன்பத்திற்காக உயிர்கள் வாழ்கின்றன என்பது சற்றும் பொருந்தாது. அரசு என்பது ஆணை செலுத்தி வாழ்வது அன்று; அன்பு காட்டி வாழ்வது. ஆரவாரத்தால் ஆள்வதன்று; அமைதியாய் ஆள்வது. உரிமையால் ஆள்வதன்று; கடமையால் ஆள்வது.

கடந்த நாட்கள் இயற்கை காட்டிய கலைநலத்துக்கு இடையே இனிமையாகக் கழிந்தது. இதோ ஊருக்கு அருகில் வந்துவிட்டோம். சேனைகளெல்லாம் இந்நேரம் ஊர் போய்ச் சேர்ந்திருக்கக்கூடும். எனக்கு இந்தத் தனிவழியில் இயற்கை அன்னை வாரி வழங்கும் இன்பங்களைக் கண்டு செல்வதில்தான் இன்பம் பிறக்கிறது. இயற்கையைக்காண தனிமையே தேவை. அதனால்தானே தேரோட்டுபவனையும் வேண்டாம் என்று தனிமையில் வந்தேன். வந்ததும் வீணாகவில்லை. அப்பப்பா, அந்தக் காட்சிகள் எத்தனை வகையில் உளத்துக்கு ஆறுதல் அளிக்கின்றன, (வழியில் விரைந்து செல்லும் தேர்முன் நோக்குகின்றான். ஒரு முல்லைக் கொடி சாலையோரத்தில் சாய்ந்து தேர் செல்லும் வழிக்கு அருகே படர்ந்து வந்துள்ளது. உடனே தேரை நிறுத்திக் கீழே இறங்குகிறான்.)

ஆ! என்ன இது! இந்நேரம் நான் காணாதிருந்தால் இந்த முல்லைக்கொடி என்னவாயிருக்கும்? குதிரைக் குளம்பிலோ, தேர்ச் சக்கரத்திலோ பட்டுச் சிதைந்தன்றோ போயிருக்கும். நல்லவேளை எதிரில் கண்டேனே. உயிர்— இதுவும் உயிர்தானே. தமிழினம் எல்லாவற்றிலும் உயிரைக் கண்டு இன்புற்ற இனமல்லவா? இதோ இதற்கு உயிருந்துதானே துளிர்த்து, தளிர்த்து, படர்ந்து, மணம் கமழும் மலர்களை நமக்குத் தருகின்றது. இது உயிரற்றது என்று பார்க்காது விடுதல் மனிதப் பண்பாகுமா? இது

ஏன் இப்படிச் சாலை ஓரத்தில் சாய்ந்துவிட்டது. (சுற்றிப் பார்க்கிறான்) ஆம், உணர்கின்றேன். இது கொடியல்லவா? பற்றிப் படர்தற்குக் கொழு கொம்பு தேவை தானே. கொழுகொம்பு இன்மையால்தான் இப்படிப் படர்தற்குத் தவிக்கின்றது போலும். உலகில் உயிர்கொண்டு தோன்றும் ஒவ்வொன்றும், ஒவ்வொருவரும் தம் தம் வாழ்க்கை நிலையிலிருந்து, வாழ வேண்டிய வகையிலிருந்து தவறின் இந்தக் கொடுமைதான்போலும். (சுற்றி நோக்கி) என்ன, இதற்குப் பற்றுக்கோடாக வைப்பதற்கு ஒரு கொழு கொம்பையும் சுற்றிலும் எங்கும் காணோமே. ஏன் இப்படி? அதோ அதை எடுக்கலாமா? சீ! என்ன எண்ணம்! பிறகு அதன் மேல்பற்றிப் படரும் கொடிக்கு வழி என்ன? உலகில் மக்கள் இப்படித்தான் ஒருவர் பெறும் இன்பத்தைப் பிடுங்கி மற்றொருவருக்குக் கொடுத்து விடுகிறார்கள். அதனால்தான் உலகில் சிறு சண்டை முதல் பெரும் போர் வரை நடக்கின்றன. நானும் அந்தத் தவற்றைச் செய்ய வேண்டுமா? (சற்றுச் சிந்திக்கிறான்) ஆம், இதோ என் தேரினையே இதற்குப் பற்றுக்கோடாக விட்டுச் செல்லுவேன். (தாண்டிச்சென்று குதிரைகளைத் தட்டிக்கொடுத்து முல்லைக்கொடியின் பக்கம் தேரை விடுகிறான்) ஆகா! என்ன மகிழ்ச்சி உண்டாகிறது. ஒரு கொடி படர வழி செய்தேனே. (மறுபடியும் சிந்திக்கிறான்) என்ன இது? குதிரைகள் ஓடினால் கொடி அறுபடுமே, குதிரைகளை அவிழ்த்து விடவேண்டும். மறந்தேன். (குதிரைகளை அவிழ்த்துவிட அவை ஊர்ப்பக்கம் ஓடுகின்றன. கொடியினை எடுத்து தன் அழகிய தேரின் மேல் விடுத்து மகிழ்கின்றான்.) இதுவன்றோ நான் பிறந்து பெற்ற பயன். ஒரு உயிர் வாடாதிருக்க வழி செய்தேனே. வீட்டுக்கு நடந்தே போகலாம். போனால் என்ன? நானும் மனிதன் தானே.

(நடந்து செல்கிறான்)

## காட்சி 4

**அமைச் :** என்ன, அரசர் இன்னும் வரவில்லையா? அவர் தேர் குறுக்கு வழியாகவன்றோ வந்தது. ஊர் மக்களைக் கேட்கலாம். (சிலர் வருகின்றனர்) ஐயா, அரசர்பிரானது தேர் மாளிகை நோக்கிச் சென்றதா?

**ஊரார் :** இல்லையே அமைச்சர் பிரானே. அவர் உங்களோடு அல்லவா மலைவளம் காண வந்தார்.

**அ. புலவர் :** ஆம். ஆனால் வரும்பொழுது அவர் வேறு வழியாகத் தனிமையில் வருவதாக விட்டுப் பிரிந்தார்.

**அமைச் :** ஏனோ அவர் உடன் துணைக்கு யாராவது வருகிறோம் என்றாலும் வேண்டாம் என்று சொல்லி விட்டார்.

**அ. புலவர் :** காரணம் ஒன்றுமிருக்காது. அவர் இயற்கை நலங்களிலெல்லாம் ஈடுபட்டுத் தன்னை மறந்தவர். அவ்வாறு இயற்கையோடு தன்னை மறந்திருக்கும் அந்தத் தனி வேளையில் வேறு பிறர் ஏன் உடன் இருக்க வேண்டும் என எண்ணியிருப்பார்.

**அமைச் :** இருக்கலாம்.

**ஊரார் :** இருக்கலாம். ஆனால் அவர் இன்னும் இங்கு வரவில்லையே.

**அமைச் :** ஒருவேளை புலவர் சொல்லுவது போன்று ஏதேனும் இயற்கை நலன்களைக் கண்டு அதில் அப்படியே மூழ்கித் தன்னை மறந்து நிற்கின்றாரோ என்னவோ, புலவரே! எதற்கும் நான் ஒரு ஒற்றனை அனுப்பிப் பார்த்துவரச் சொல்கிறேன்.

அ. புலவர் : எதற்கு அமைச்சரே? அரசர் அப்படி ஒன்றும் அங்கேயே நின்றுவிடமாட்டார், வந்து கொண்டே தான் இருப்பார். கவலை எதற்கு?

ஊரார் : அமைச்சர்பிரானே, அவர் அப்படித்தான் சொல்லுவார். நாம் எதற்கும் சென்று பார்க்கலாம். புறப்பட்டு நெடுநேரம் ஆயிற்று என்கிறீர்கள். சுற்றிய நீண்ட வழியிலேயே நீங்கள் வந்துவிட்டீர்கள் அவர் வரவில்லையென்றால்———

அமைச் : அதுதான் நானும் நினைக்கிறேன். இதோ ஒரு ஒற்றனைக் கூப்பிட்டு அனுப்புகிறேன்.

ஊரார் : வேண்டாம், நாங்களே நாலைந்து பேர் சென்று பார்த்துவருகிறோம்.

அமைச் : அது தவறு. நீங்கள் அங்கு வருவதைக் கண்டால் அரசர் எங்கள்மீது சினப்பார். பொதுமக்களை அவ்வாறெல்லாம வேலையிடுவது தவறு. அதுவும் நான் அறிந்து நீங்களெல்லாம் செல்வீர்களானால் பெரும் பிழை.

ஊரார் : நீங்கள் அனுப்பினால்தானே அது தவறு. நாங்களாகத்தானே போகிறோம்.

அமைச் : நீங்கள் சொல்லுவது நல்லதுதான். சரி, நானும் கூடவே வருகிறேன். வாருங்கள் போகலாம். (தூரத்தே அரசனது தேரிலிருந்து விடுவிக்கப்பட்ட குதிரைகள் வருகின்றன.) என்ன அவை? அரசனது தேர்க் குதிரைகளல்லவா? என்ன? ஏன் இப்படித் தனித்து வருகின்றன? தேர் எங்கே? தேரிலிருந்த செல்வ மன்னன் எங்கே? ஐயா! அதோ அதோ அந்தக் குதிரைக்களைப் பாருங்கள்.

அ. புலவர் : ஆம். அரசருடைய தேர்க் குதிரைகள் தான் அப்படியானல் தேரும் அவரும்......

ஊரார் ஒருவர் : யாராவது ஏதாவது செய்திருப்பார்களா ?

மற்றவர் : காட்டு விலங்குகள் வாட்டம் செய்திருக்குமா ?

அமைச் : இல்லை. அப்படி ஒன்றும் இருக்காது. அவரை வெறுப்பவர் நாட்டில் யாருமில்லை. அவரது அன்பு நிலைகண்டு விலங்குகளும் விலகிஓடும் என்பது உறுதி. ஆமாம். பின் ஏன் குதிரைகள் மட்டும் வருகின்றன? (அருகில் குதிரைகள் வந்து நிற்கின்றன. அவற்றின் கண்களில் நீர் சுரக்கின்றது. அமைச்சர் குதிரைகளைத் தட்டிக் கொடுக்கின்றார்.)

அ. புலவர் : அமைச்சரே, இந்தக் குதிரைகள் நிற்கும் நிலை கண்டால் உண்மையில் ஏதோ நடந்திருக்கும் போல் தெரிகிறதே. ஏன் அவைகள் முகவாட்டமாக இருக்கின்றன ?

அமைச் : (அருகில் உள்ள ஒரு பணியாளனிடம்) இக் குதிரைகளை லாயத்துக்குக் கொண்டு செல். (மற்றவரைப் பார்த்து) வாருங்கள், நாம் மேலே செல்வோம். (அனைவரும் செல்கின்றனர். தூரத்தே பாரி நடந்துவருகிருன்: அனைவரும் அருகே ஓடுகின்றனர்.)

ஊரார் : வடுவிலா மன்ன, வாழ்கநின் கொற்றம்! தாங்கள் அடிநோக இப்படி நடந்து வருதல் நீதியா ! தகுமா ! முறையா !

பாரி : அமைச்சரே, இவையெல்லாம் என்ன ? நீங்கள் ஏன் இப்படி வந்தீர்கள் ? இவ்வூர் மக்களுக்கு ஏன் இவ்வளவு தொந்தரவு கொடுத்தீர்கள்.

(அமைச்சர் தலைகுனிந்து நிற்க)

ஊரார் : அவர் வேண்டாமென்றுதான் சொன்னார். நாங்கள் தான் உங்களைக் காணாது போகவே தேடிக் கொண்டு வந்தோம். வழி வழி சிறக்க நின் வளஞ்சால் கொற்றம்! ஆமாம், தாங்கள் இப்படி அடி நிலம் தோய நடக்கலாமா?

பாரி : என்ன! ஏன் நடக்கலாகாது? நான் என்ன குற்றம் செய்தேன் நடக்காதிருப்பதற்கு? நானும் உங்களைப் போல் ஒரு மனிதன்தானே, உயிர்தானே.

அ புலவர் : அரசர் பெரும! இருந்தாலும் மன்னர் மன்னராகிய தாங்கள் நடப்பது தங்கள் மக்களுக்குப் பிடிக்குமா?

ஊரார் : ஆம் அரசே! இங்கே இருங்கள். நாங்கள் போய்த் தேர் கொண்டு வருகிறோம்.

அமைச் : ஆ—மா—ம். தங்—கள் - தேர்—எங்கே?

பாரி : அமைச்சரே, கேள்வி வேண்டாம். தேர் இன்றேல் என்ன கெட்டுவிட்டது? இப்படி மனிதனை அவனினும் மேம்பட்ட ஒன்றாகப் புகழ்ந்து புகழ்ந்து அவனுக்குத் தலைமை வெறி பிடிக்க வழி காட்டவேண்டாம். நாட்டை ஆளும் தலைவனுயினும் அவனும்நம் போன்ற மனிதனே என்ற உணர்வோடு வாழக் கற்றுக் கொள்ளுங்கள். நல்லது புலவரே, நீங்கள் வாருங்கள். நாம் இருவரும் நேரே அரண்மனை செல்லலாம். அமைச்சரே, மக்களையெல்லாம் அழைத்துக்கொண்டு ஊரில் விடுத்து வாரும். (அரசரும் புலவரும் போகின்றனர்.)

அமைச் : அப்பா, நான் அப்போதே சொன்னேனே, கேட்டீர்களா?

ஊரார் : அதுபற்றி என்ன ? ஆமாம். அவர் தேர் என்ன வாயிற்று ?

அமைச் : நான் கேட்டுத்தான் அவர் ஒன்றும் சொல்ல வில்லையே,

ஊரார் : மேலே சென்று பார்க்கலாமா ?

அமைச் : எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது ஆனால் அறிந்தால் அவர் என்ன சொல்வாரோ !

ஊரார் ஒருவர் ; இல்லை எப்படியும் சென்று பார்த்தால்தான் மன அமைதி பெறமுடியும்.

அமைச் : சரி, அப்படியானால் செய்யுங்கள். உங்கள் வழியே வந்து உங்களை எப்படியும் ஊருக்கு அழைத்துச் சென்று விட்டாக வேண்டும்.

(அனைவரும் மேலே சென்று முல்லைக் கொடியின் பக்கத்தில் தேர் நிற்பதைக் காண்கின்றனர்.)

அமைச் : இதோ அழகிய தேர். பொற்றேர். (கூர்ந்து காண்கின்றனர்.) ஏன் இதை அவர் இங்கே விட்டு நடந்து வருகிறார். அதோ ஒரு முல்லைக் கொடி. ஆம், அது படர வழியில்லை. அது படர்வதற்காகவா தன் பொற்றேரை விட்டுவந்தார், ஆ! ஊரில் வந்து என்னிடம் சொல்லி யிருந்தால் பெரும் பந்தலே போட்டிருப்பேனே.

ஊரார் : ஆகா! அவர் கருணையே கருணை. நாங்களெல்லாம் ஓடிவந்து பந்தலிட்டிருக்க மாட்டோமா ?

அமைச் : செய்திருக்கலாம். ஆனால் அரசரது இளகிய உள்ளம் அதுவரைக்கும்கூட இந்தச் செடி ஏன் வருந்தவேண்டும் என எண்ணியிருக்கும். வேறு வழியும் இல்லை. உடனே தன் தேரையே விட்டுச் சென்றார். அதை நாம் தொடவும் கூடாது. என்னே

அரசனது பெருமை! முல்லைக்குத் தேரீந்தமுத்தமிழ்த் துறை வல்ல பாரி மன்னன் புகழ் பாரில் என்றும் நிலவும் என்பது உறுதி.

**ஊரார் :** முல்லைக்குத் தேரீந்த பாரி வாழ்க! அவன் புகழ் பாரில் ஓங்குக!

## இரண்டாம் அங்கம்

### காட்சி 1

**கபிலர் :** ஆ என்ன அழகான இயற்கை வளம் நிறைந்த நாடாகஉள்ளது. நான் என் கற்பனையில் குழைத்துத் தீட்டிய குறிஞ்சி வளம் எல்லாம் இங்கு ஒரு சேரக் காணப்படுகின்றனவே. பறம்பும் அதைச் சார்ந்தவளனும் கண்ணுக்கும் கருத்துக்கும் எவ்வளவு விருந்தாக அமைகின்றன. இம்மலையை ஆளும் மன்னன் புகழே புகழ். இயற்கைகளெல்லாம் கூட இம் மன்னனின் அன்பென வளர்கின்றனவே. ஏன் வளரா? நாத்தழும் பேறப் பாடாதாயினும் முல்லைக்குத் தன் பொற் றேரைத் தந்து நின்ற திறன் வேறு எங்கு காணப் படுவது? மற்றவர் வாழத் தான் வாடினும் தவறில்லை என்கின்றது தலையாய தமிழன் சொள்கை. 'தனக்கு மிஞ்சியதே அற வாழ்வு' என்பது பிறர் கொள்கை. ஆ! இவை இரண்டிற்கும் எவ்வளவு வேறுபாடு? பெற்ற பெருஞ் செல்வத்தை ஏழை எளியவர்களுக்கே ஈந்து ஏற்றமுறும் நம் நாட்டின் நிலையினை யார்தான் வியலார். அத்தகைய அறமாற்றும் தமிழ்க் குடியில் வந்த பாரி, கொடை மடம் பட்டானே. கேட்பவர் தம் நிலையும் பிறவும் நோக்காது கொடுக்கும் நிலையிலன்றோ மடம்பட்டான். பாத்திரமறிந்து பிச்சை

விடும் வழக்கம் நம் தமிழனுடைய கொள்கையன்று. இன்னோர்க்கு என்னது வரையாது வாரி வழங்கும் அறக் குடியன்றோ தமிழ்க்குடி. இந்த நிலையில் பாரி மனித இனத்துக்கும் அப்பால் சென்று அற மாற்றுகின்றான் என்றால் அவனைக் கொடை மடம் பட்டானென்று சொல்லுவதல்லது வேறு என்ன சொல்லுவது? முல்லை வாய்திறந்து தன் வாட்டத்தைப் பேசவில்லை. வாழ்விழந்து வாடுகின்றதாகச் சொல்லவில்லை. குறிப்பினாலும் கூடத் தன் குறையை உணர்த்தவில்லை. அது ஓரறிவுடைய உயிரன்றே! எப்படி உணர்த்தும். ஆனால் பாரி அதை ஓரறிவுயிர் என்றும் எண்ணாது, படர நிலை கண்டும், படரக் கொழுகொம்பு இல்லையே என்ற காரணத்தால் அல்லவா தன் பொற்றேரையும் விட்டுவந்தான். அவன் புகழ் வாழ்வதாக! அதோ யார் வருவது? பெருஞ்செல்வர் போல் காண்கின்றதே. (ஒருவர் அருகே வருகின்றார்.) ஐயா சற்று நில்லுங்கள். தாங்கள் யார்?

**வந்த பாணர்:** (வேடிக்கையாக) ஏன் நான் யார் என்று தெரியவில்லையா? நான் ஓர் அரசன்:

**கபிலர்:** (தமக்குள்) ஒரு வேளை பாரியாக இருக்கலாமா? இத்துணை விருதுகளுடன் வேறு யார் செல்லப் போகிறார்கள் (வெளியே) ஐயா, தாங்கள்தான் இப் பறம்பிற் கோமான் பாரியோ!

**வ. பாணர்:** (சிரித்து) ஐயா! நான் பாரியல்லன். பாரியால் வரிசைப் பெற்றுத் திரும்பும் பாணன்.

**கபிலர்:** என்ன பாண் புலவரா? உங்கள் பாடலுக்கா இப் பரிசு? ஆகா! அவன் கொடைத் திறன் வாழ்வதாக!

**வ. பாணர் :** ஐயா! தங்களைப் பார்த்தாலும் ஒரு புலவர் எனத் தெரிகின்றது. இப் பாரி வள்ளல், படாத முல்லைக்கே தன் பொற்றேரைக் கொடுத்த கொற்றவன், பாடும் புலவர் எதைக் கேட்பினும் தருவன். நாடும் குன்றும் நாவலர்க்கு ஒருங்கு ஈயும் உயர்ந்த கொடையாளி அவன். நீங்கள் அவனை நாடிச் செல்லுங்கள், வேண்டியது பெறலாம்.

**கபிலர் :** வாழ்க! அவன் புகழ். இப்படிப் புலவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளன்மை யிருக்கும்வரையில் நாட்டில் கலைக்கும் கவிக்கும் பஞ்சம் ஏது? ஐயா! புலவர் பெருமானே, தாங்கள் சென்று வாருங்கள்.

**வ. பாணர் :** ஆமாம், தாங்கள் யார்? எங்கு செல்கிறீர்கள்? பாரியினிடம் பரிசுபெற விழைகின்றீரா?

**கபிலர் :** ஐயா, நான் ஒரு புலவன். அந்தணன். பாரியிடம் பரிசுபெற வரவில்லை. அவன் கொடைத் திறன் கேட்டு அவன் குளிர்ந்த முகத்தை நேரில் காணவே வந்தேன்.

**வ. பாணர் :** என்ன இது? பரிசு வேண்டாப் புலவர். வேடிக்கையாக இருக்கிறது. ஐயா, தாங்கள் யார் என்பதை நான் அறியலாமா?

**கபிலர் :** புலவரே, யானும் ஒரு பரிசிற் புலவன்தான். இல்லையென்று சொல்லவில்லை. என்றாலும் இங்கு நான் பரிசில் பெறவரவில்லை. பாரியின் கொடைத் திறம் கேட்டு அவனைப் பார்த்துச் செல்லவே வந்தேன். என்னைக் கபிலன் என்பார்கள்.

**வ. பாணர் :** என்ன! கபிலரா! (வீழ்ந்து வணங்கி எழுந்து) அறியாது கெட்டேன். மன்னிக்க வேண்டும். பொய்யா நாவின் புகழுறு புலவராகிய தங்களை

அறியாது ஏதேதோ பேசினேன். மன்னிக்க வேண்டும்.

**கபிலர் :** ஐயா, அப்படி ஒன்றும் தாங்கள் தவருகச் சொல்லவில்லையே. நன்று. மன்னன்வாழ் மாளிகை எங்கே உள்ளது?

**வ. பாணர் :** ஐயா ! நானே வந்து காட்டுகிறேன்.

**கபிலர் :** வழியைமட்டும் சொல்லுங்கள் போதும். நீங்கள் உங்கள் வழியே சென்று உங்களுக்குரிய கடமையைச் செய்யுங்கள்.

**வ. பாணர் :** ஐய, இப்படி நேரில் சென்று திரும்பின் பெருஞ்சாலை தோன்றும். அதன் ஊடே சென்ருல் ஆயத்தாரின் அழகு வாய்ந்த தெரு விளங்கும். அதன் கோடியில் அரண்மனை உண்டு. அரசர் திருவோலக்கத்தே வீற்றிருக்கின்ருர்.

**கபிலர் :** நல்லது, தாங்கள் சென்று வாருங்கள். (வந்த பாணர் போகிருர். கபிலர் அரச அவை அடைகிருர். பாரி, அமைச்சர், அவைப் புலவர், சில மக்கள் இருக்கின்றனர்.)

**பாரி :** (தூரத்தே கபிலரைக் கண்டு) அமைச்சரே, அவைப் புலவரே, அதோ வருகின்ருரே அவர் யார்? சிறந்த புலவர்போல் தோன்றுகிறதே.

**அ. புலவர் :** ஆம் ! அரசே ! ஆம். அவர்தான் கபிலர்.

**பாரி :** ஆ ! அவரே நம்மை நாடி வந்தாரா? (எழுந்து ஓடுகிருன். இருவரும் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவுகின்றனர்.) புலவர் பெருமானே ! வரவேண்டும், வரவேண்டும்.

**கபிலர் :** கொடை வள்ளால் ! நின் புகழ் வாழ்வதாக ! வளர்க நின் கொற்றம் !

பாரி: ஐயா, தாங்கள் இங்கே அமருங்கள். (அமைச்சரை நோக்கி) அமைச்சரே, இன்றைய ஓலக்க நடவடிக்கைகள் முடிந்தன வன்றோ. சபையைக் கலைத்து விடலாமே.

அமைச்: நல்லது. (அனைவரும் போகின்றனர். பாரி, கபிலர், அமைச்சர், அவைப் புலவர் உள்ளனர்.)

பாரி: புலவர் பெருமானே, இன்றே நான் மனிதனைப் பிறந்த பயனைப் பெற்றேன். தங்களைப் போன்ற தக்காரோடு வாழ்தலன்றே என் போன்றவர் தம் வாழ்வாகும். புலவர் பாடும் புகழுக்கு ஏங்கும் மன்னர் எத்துணையர்? ஐயா தங்களோடு இன்றே போன்று என்றும் இருக்க விரும்புகிறேன். எனது அவைப் புலவர், இதோ இக் கொற்றனர் தங்கள் புகழை அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். தங்களைக் கண்ணால் காணும் பேறு பெறுவிட்டாலும் கருத்தால் கண்டு மகிழ்ந்த நாட்கள் பல. தங்கள் வரவால் என் இல்லம் ஏற்றமுற்றது. என் நாடு நலம் பெற்றது. நாங்கள் வாழ்வு பெற்றோம்.

கபிலர்: மன்னா! உன்னையும் நான் காண வேண்டுமென்று பல நாட்களாக விழைந்தேன். காண வாய்ப்பும் வழியும் பெறவில்லை. எத்தனையோ முறை முயன்றேன். இன்றே என் முயற்சி பலித்தது. உன் அரும்பெருஞ் செயலாகிய, முல்லைக்குத் தேரீந்ததிறன் கேட்ட அந்த நேரத்திலேயே ஓடிவர நினைத்தேன். எதிர்பாராத பல பெரும் பணிகளால் அப்படியே நின்றுவிட்டேன்.

பாரி: புலவர் பெருமானே! என் நல்வினையின் பயன்தான் இன்று தங்களை இங்கு காணப் பெற்றேன். ஐய, தாங்கள் என்றென்றும் இங்கேயே எங்களுடன்

இருக்கவேண்டும். எனக்கு இரு பெண் மக்கள் இருக்கின்றனர். அவர்களும் தங்களது புகழ் கேட்டு, தங்களைக் கண்டு, தங்கள் வழியே கலைபயில விரும்புகின்றனர். ஆகவே, அவர்களுக்காகவும், எனக்காகவும், என் நாட்டுக்கு வரும் நற்புகழுக்காகவும் தாங்கள் என்றென்றும் என்னை விட்டுப் போகலாகாது.

**கபிலர் :** மன்னு ! உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும். ஆகவே நம் உணர்ச்சி என்றோ ஒன்றிவிட்டது. இனி, நம் நட்பு பிரிக்க இயலாதது. எனவே என்றும் உம்மைவிட்டுப் பிரியும் விருப்போ நிலையோ வேண்டாம் என்பதுதான் என் எண்ணம். இயன்றவரை உடனிருந்து என்னாலான பணியைச் செய்கிறேன்.

**பாரி :** நல்லது, புலவர் பெருமானே, நாழியாகிறது. வாருங்கள். உண்டிக்குச் செல்வோம். (அனைவரும் செல்கின்றனர்.)

## காட்சி 2

பாண்டியன் அவைக்களம். தமிழ் நாட்டு மூவேந்தராகிய சேர சோழ பாண்டியர் மூவரும் ஒருங்கே அமர்ந்திருக்கின்றனர். ஔவையார் வருகின்றார். மூவரும் எழுந்து நிற்கின்றனர்.

**ஔவை :** அரசர்களே, வாழ்க ! வழி வழி சிறக்க நும் கொற்றம்.

**மூவரும் :** அம்மையீர் ! வணக்கம்.

**ஔவை :** தமிழ் நாட்டு மும்மணிகளே! உங்களை ஒருசேரக் காணும் பேறே பேறு. நீங்கள் மூவரும் முற்றிய திருவினுடன் இன்றேபோல் என்றும் ஒன்றிய உளத்துடன் கலந்து வாழ்வீர்களாயின், நீங்கள் உலகி

லேயே உயர்வடைவீர்கள். உங்கள் இடையிலே உண்டாகும் சிறுசிறு பூசல்களைப் பெரிதாக்கிப் போர்மூட்டி வேடிக்கை காண நாட்டிலே மக்கள் பலர் இருப்பார்கள். அவர் தம் சொற்களுக்கு செவி கொடுக்காது, நீங்கள் அனைவரும் இதோ இன்று இருப்பது போன்று என்றும் இருப்பீர்களானால், என் போன்ற அறிஞர்களுக்கு இதனினும் வேறு மகிழ்ச்சி யேது. அரசமணிகளே, உங்கள் கொற்றம் சிறக்க.

**பாண்டி :** அம்மையீர் அமருங்கள். (அனைவரும் உட்காருகின்றனர்.) அம்மையே! உங்களைப் போன்ற புலவர் பாடும் புகழ் நலத்தால் நாங்கள் இதோ ஒன்று கூடியுள்ளோம். எனினும் இந்த மூன்று குடிக்குள்ளும் அடிக்கடி போர் நிகழ்வதை நாங்கள் காண்கின்றோம். அதற்குரிய காரணங்களையும் சிறிது அறிவோம். நீக்கவும் வழி காண முயல்வோம். என்றாலும் போர் நின்றபாடில்லை. அறிவு சால் தலைவி! தாங்கள் இன்றேபோல் நாங்கள் என்றும் இருக்க வழிகாட்டி அருளுங்கள்.

**ஔவை :** அறிவுசால் அரசர்குடிச் செல்வங்களே! உங்கள் ஒற்றுமை என்றென்றும் உயர்வதாக. தமிழ் நாட்டு வேந்தர் யாரும் மனத்தால் வேறுபடலாகாது தென்பதே நாட்டு மக்களது உள்ளக் கிடக்கை. நம் நாடு தொன்மை வாய்ந்ததாயினும், அளவிற் சிறியது தான். நமக்கு நாமே என்றென்றும் தலைவர்களாக இருந்து வருகின்றோம். வடநாட்டாளரும் பிறரும் நம்முடன் நட்பாகவும், வாணிப வளனைப் பெருக்கவுமே வருகின்றார்களன்றி போர் கொண்டு வருவதில்லை. எனினும் உள் நாட்டிலுள்ள மூவல்லரசு

களுக்குமிடையே எப்படியோ அடிக்கடி போர் மூண்டு வருவதை நான் காண்கின்றேன். அதற்குரிய காரணங்களை நான் அவ்வப்போது ஆழ்ந்து எண்ணு வதுண்டு. மன்னர்களாகிய உங்கள் மனங்களைப் பிரிக்கச் சூழ்ச்சி நடந்து கொண்டேயிருக்கும் போலும்! பகை மூட்டும் முறையில் பலப்பல கொடு மைகள் ஆங்காங்கே நடப்பதைக் காண்கின்றேன். அறிவுடைப் புலவர் பலர் உங்கள் பேரவைகளை அணி செய்கின்றனர் என்பதும் உண்மைதான். எனினும், அவருள் ஒரு சிலர் தவிர்த்துப் பெரும்பாலோர் இடித் துரைக்க அஞ்சுகின்றனர். உடன் பிறந்த தமிழனை— மற்றொரு தமிழ் மன்னன் மாற்றானைக் கருதும் மனப் பான்மை உங்களிடை விட்டு நீங்கவேண்டும். கருத்து வேறுபாடுகளுக்கு இடம் கொடுக்க வேண்டுவது உங்கள் கடன். சிறுசிறு வேறுபாடுகளைப் பெரிதாக்கி, தாங்கள், தங்கள் திறனும் பிறவும் நினைந்து போர் தொடுக்க எண்ணல் தவறு. பிற நாட்டு மக்கள் நம் நாட்டு மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றைப் பழித் துரைக்கும் போதோ, அன்றி நாட்டின் மேல் படை யெடுக்கும்போதோ நீவிர் மூவரும் ஒன்றி எதிர் நிற்பின் அதனினும் மிக்கதொன்றில்லை. நாட்டை யும், மொழியையும், கலையையும் காப்பது உங்கள் கடன். நாட்டு மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் தேடித்தருதல் உங்கள் கடன். அத்துறையிலும் மூவரும் ஒன்றினீர் களானால், நல்ல பயன் உண்டாகும். பிறர் சொல் லுக்குச் செவி சாய்க்காது, அறிவு வழி ஆணை செலுத்தி, அன்பு வழி அனைவரையும் ஒத்து நோக்கி,

நாம் ஒரே இனத்தவர் என்ற எண்ணத்தில் உங்கள் ஒற்றுமை சிறப்பதாக! வாழ்க உங்கள் கொற்றம்!

**மூவரும் :** அம்மையே! தங்கள் வாய் மொழி அறிந்தோம். உங்கள் வாய் மொழிப்படியே இனியேனும் ஒழுகித் தமிழர் ஒற்றுமை மிக்கவர் என்பதைக் காட்டமுற் படுகிறோம். தாங்களும் சில காலம் எங்களோடு தங்கியிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

**ஔவை :** மன்னர்களே! தற்போது நான் வேறு ஓரிடத் திற்குச் செல்கின்றேன். ஆகவே பிறிதொருகால் வாய்ப்பு நேருமேல் தங்கள் விருப்பப்படி இங்கே தங்குகிறேன்.

**பாண்டி :** அன்னையீர், இங்கு என் குடிலில் இருக்கும் பேறு பெற்றேன் என மகிழும் இந்த வேளையில் உங்களை வர வேற்க இருக்குமிடம் யாதோ?

**ஔவை :** மன்னு, இன்று தமிழ் நாட்டில் முடிசூடிய உங்கள் மூவர் புகழைக் காட்டிலும் மிக அதிகமான புகழ் கொண்டு விளங்கும் பாரியை நீங்கள் அறிவீர்கள். அவன் கொடைத்திறன் உலகம் புகழும் ஒன்றாகி விட்டது. ஓரறி வுயிர் பாடாதாயினும் தான் ஏறிவந்த பெருந்தேரை அது ஏறிப் படர்தற் பொருட்டு விட்டு வந்த பெருமை அந்தப் பாரிக்கே உண்டு. இதுவரை உலகில் அறமாற்றிய அத்துணைபேரையும் ஒருங்கு வைத்து எண்ணினும் அவர்கள் பாரிக்கு இணையாக மாட்டார்கள். ஏன்? என்ன எண்ணுகிறீர்கள்? நான் உள்ளதை மறைக்காது கூறும் புலவர் கூட்டத்தில் பிறந்தவள். நீங்கள் மூவரும் பெற்ற புகழைக் காட்டிலும் அவன் புகழ் பெரிது.

**மூவரும்** (புழுங்கிய மனத்துடன்) ஆம். ஆம், உண்மை.

ஔவை : அவன் நாட்டு வளமும் பிற வளங்களும் கேள்விப் பட்டிருக்கிறேன். தற்போதும் புலனழுக்கற்ற அந்தணனாகிய கபிலன் என்னும் பெரும் புலவரும் அங்கே தான் தங்கியிருக்கின்றார். ஆகவே அவரையும் பார்க்கவேண்டும். மற்றும், அப்பாரிக்கு அங்கவை, சங்கவை என்று இரண்டு பெண் மக்கள் உள்ளனராம். அவர்கள் கபிலரிடத்தே கல்வி பயில்கின்றார்களாம். அவர்கள் திறனும், அழகும், குணமும், பிற நலன்களும் மிகச் சிறந்தனவாகப் பேசப்படுகின்றன. எங்கள் பெண்ணினத்தில் அத்துணைச் சிறந்த செல்வியரைக் காணல் எளிதல்லவே. ஆகவே அவர்களையும் காண வேண்டும்.

பாண்டி : நல்லது அம்மையே. இரண்டொரு நாளாவது தங்கி விருந்துண்டு செல்லவேண்டும்.

ஔவை : நல்லது அப்படியே செய்வோம். ஊற்றுக்குச் சென்று நீராடி வருகிறேன். (ஔவை செல்கின்றாள்.)

பாண்டி : சோழரே! சேரரே! என்ன ? கேட்டீர்களா? நம் கண் முன்னேயே நமக்கு என்ன குறை வந்துள்ளது. மூவர் புகழும் அவன் ஒருவனது புகழ் முன் நிற்காவாமே. ஒரு சிறு குறும்பன். பறம்புமலையும் பக்கத்தூர்களையும் உடைய ஒரு சிறியன். ஏதோ பயித்தியத்தால் முல்லைக்குத் தேர் கொடுத்தால் அதைப் பெரிதாகப் போற்றும் இப்புலவர் அப்பப்பா! இப் புலவர் கூட்டம் தான் ஏன் இப்படிக் கெட்டொழிந்ததோ !

சோழ : அது கிடக்கட்டும். இப்படியே அவன் புகழை வளர விட்டுக் கொண்டே போனால் நம் நிலை என்னவது ?

**சேரன் :** ஆம். அதைத்தான் முதலில் எண்ணவேண்டும். கபிலர், ஔவை என்ற இரண்டு புலவரும் அங்கு சேர்ந்து விட்டால் பிறகு புலவர் கூட்டமே அங்கு தான் இருக்கும். பிறகு நாட்டில் அவன் புகழ் தான் பரவும்.

**பாண்டி :** ஆம், அது உண்மை தான். அதற்கொல்லாம் தக்க வழி காணவேண்டும்.

**சேரன் :** எனக்கு ஒன்று படுகிறது. நானும் சோழனும் சற்று வயதானவர்கள். பாண்டி மன்னரே, உமக்கு மணமாகி விட்டாலும் நீங்கள் வயதில் இளையவர் தான். ஆகவே அப் பாரியின் மக்களை உங்களுக்கு மணம் பேச அனுப்புங்கள். பெரும்பாலும் கொடுக்க ஒருப்படுவான். பிறகு உம் கீழ் அவன் புகழ் ஒடுங் கும். கொடுக்க மறுப்பின் அதையே காரணமாக வைத்து மூவருமே போர் தொடுப்போம்.

**சோழ :** ஆம். அது நல்ல வழியாகத்தான் தெரிகிறது. அப்படியே செய்தால் என்ன? ஔவை சொல்வதைக் கேட்டால் அவன் மக்கள் இருவரும் அழகிலும், அறி விலும் மிக்கவர் என்று தான் தெரிகிறது. உங் களுக்கு ஏற்றவர்களாகத்தான் இருப்பார்கள். உடனே அதற்கு வழி காணுங்கள். மறுத்தால் நாங் கள் இருக்கிறோம் ; போர் இருக்கிறது.

**பாண்டி:** (சற்று ஆழ்ந்து கருதிப் பின்) நல்லது, அப்படியே செய்யலாம். யாரங்கே?

**சேவகன் :** அரசே! வாழ்க நின் கொற்றம்.

**பாண்டி :** நீ உடனே சென்று நமது அறிவரை அழைத்து வருவாய்.

**சேவகன் :** ஆணை வழியே அண்ணல்!

பாண்டி: நண்பர்களே. இதோ அறிவர் வந்தவுடனே அவர்களை நாளையே அனுப்பி மணம் பேசச் சொல்லு கிறேன். பிறகு நடப்பதைப் பார்க்கலாம்.

சேரனும் சோழனும்: நல்லது. நாங்கள் எங்கள் விடுதிகளுக்குப் போகிறோம். மற்றவற்றைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

பாண்டி: வணக்கம் வாருங்கள்.

## காட்சி 3

(பாரி பேரவையில் வீற்றிருக்கின்றான். கபிலர் அமைச்சர், அவைப் புலவர் ஆகியோர் வருகின்றனர்.)

பாரி: அமைச்சரே, பாண்டி நாட்டிலிருந்து வந்த அறிவருக்குத் தங்கத் தக்க இடம் முதலியவற்றை நல்ல முறையில் அமைத்துத் தந்தீர்களல்லவா?

அமை: வாழ்க எம் வேந்தே! பிற நாட்டுத் தூதுவர் தங்கும் பெரு மாளிகையில் அவர் தம் இருக்கை அமைந்துள்ளது. அவர்களும் தங்களைக் காணத் தற்போது வருவார்கள்.

பாரி: நல்லது. புலவர் பெருமானே, என்ன தாங்கள் ஏதோ ஆழ்ந்து எண்ணுவதாகத் தெரிகிறது.

கபிலர்: அரசனே! வாழ்வராயக! உன்னை நாடி ஏன் அந்தப் பாண்டியன் அறிவர்களை அனுப்பினான் என எண்ணினேன். பேரரசர்கள் உன்னிடம் பெற வேண்டுவது ஒன்றுமில்லையே. தற்போதே தமிழ் நாட்டு மூவேந்தரும் ஒன்றிய உளத்தினராய் வாழ்கின்றனர். அவர்கள் உன்னைக் காண அறிவர்களை அனுப்புவது என்றால் உன் புகழ் எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது என்று எண்ணுகின்றேன்.

**பாரி :** புலவர் பெருமானே, தாங்களுமா என்னைப் புகழ வேண்டும். வேண்டா, புகழ் ஒருவனைக் கெடுக்கும் தன்மை வாய்ந்தது. அதனால்தானே, ஏனோ பெரும் பாலோருடைய புகழ் அவர் மாய்ந்தபிறகே வெளிப் படுகிறது. புலவரே, என் போன்ற எளியனுக்கு எதிர் பாராத பெரும் புகழ் வந்தால்—அதுவும் தங்களைப் போன்ற தக்கார்வாய்ச் சொற் கேட்டால்—நிலை தடு மாறுவது இயற்கை. ஒருவன் தான் பெற்ற புகழை நினைத்துக் கொண்டால், கடமை மறந்து கயமை நிறைந்து கெட்டொழிவானன்றோ. தான் என்ற தருக்கும் அவனைச் சாருமே. ஆகவே, தாங்கள் என்னைப் புகழவேண்டா.

**கபிலர் :** அரசே! நான் உன்னை என்றும் புகழமாட்டேன். புகழ்கின்றவர்களைக்கூட அவர்கள் சொல்வது தவறு என்று கண்டிப்பேன். கொடை வள்ளல், கொடை வள்ளல் என்று உன்னை எல்லோரும் புகழ்வதைக் காண்பேன். நீ ஒருவன்தான் கொடையாளி என்று உலகம் போற்றும்; உலகப் புலவர்கள் புகழ்வார்கள். ஆனால் நானே அது தவறு என்று காட்டி, பாரி யன்றி வேறு ஒரு கொடையாளியும் இவ்வுலகில் உண்டு. ஆகவே அப் பாரியை மட்டும் புகழற்க என்று தடுத்திருக்கிறேனே.

**பாரி :** நல்லது அறிஞரே! அதுபற்றி மகிழ்ச்சியே கொள்ளுகிறேன். தாங்கள் அருகிருக்கும் வரையில் எனக்கொரு குறையும் வராது என்பதை நான் அறிவேன். அந்தணீர், நான் தற்புகழ்ச்சி விரும்ப வில்லை. ஆனால் மற்றொருவர் யார் என்பதை நான் அறியலாமா?

**அமைச் :** ஆமாம் பெரியீர், நன்கு விளக்கிச் சொல்லுங்கள்.

**கபிலர் :** பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே
(புறம். 107)

**பாரி :** ஆகா, என்னே தங்களது புகழாப் புகழ்ச்சி. ஆ! இப்படியா தாங்கள் என்னைப் புகழவேண்டும்.

**கபிலர் :** புகழவில்லையே. ஏன், உன் கொடை ஒருமைப் பட்டதன்று. வான் வழி வழங்கும் மாரியும் உண்டு என்றுதான் கூறினேன்.

**பாரி :** தங்கள் கவி நலன் வாழ்வதாக! அமைச்சரே, அதோ வருகின்றவர்கள் யார்?

**அமைச் :** அரசே வாழ்க! அவர்கள் தாம் மதுரை மன்னரால் அனுப்பப்பட்ட அறிவர்கள்.

**பாரி :** அறிவர்களே வாருங்கள். உட்காருங்கள். (அனைவரும் உட்காருகின்றனர்.)

**அறிவர் :** (கபிலரை நோக்கி) புலவர் பெருமானே, வணக்கம். (அரசரை நோக்கி) புகழ்சால் அரசே! வளர்க நின் கொற்றம்.

**பாரி :** அறிவர்களே, தங்கள் அரசர் நலமோ?

**அறிவர் :** நாடும் நாமும் நம் மன்னரும் அனைவரும் நலமே.

**பாரி :** தங்கள் வரவால் எங்கள் நாடு உயர்ந்தது. தாங்கள் எது குறித்து இங்கு வந்துள்ளீர்கள் என்பதை அறியலாமா?

**அறிவர் :** அதைக் கூறத்தானே வந்திருக்கின்றோம். என்றாலும் கூற அஞ்சுகின்றோம்.

**பாரி :** அறிவரே! அஞ்சுவதற்கு என்ன இருக்கின்றது?

வந்ததைப்பற்றி விளக்க உரையுங்கள். தனிமையில் பேசவேண்டுமா ?

அறிவர் : இல்லை, இங்குதான் யார் இருக்கிறார்கள்? புலவர் பிரானும் அமைச்சரும்கூட இருந்து பேசவேண்டிய ஒன்றுதான் அது.

கபிலர்: சரி, சுற்றிச் சுற்றிப் பேசாது வந்ததை விளக்குங் கள்.

அறிவர் : பாண்டியன் வயதில் இளையவன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள், அரசே! அவர், தமக்காக தங் கள் மகளார் இருவரையும் மணம் பேசுமாறு அனுப் பினர்.

பாரி : நல்லது இவ்வளவுதானே. இதற்கு ஏன் தயங்கு கிறீர்கள். உங்கள் கடமையை நீங்கள் செய்துதானே ஆகவேண்டும். ஆமாம், உங்கள் மன்னருக்கு முன் னமே மணமாகி யிருக்கவில்லையா ?

அறிவர் : ஆம், அறிவும் திருவும் அழகும் பொருந்திய மங்கை நல்லாளை மணந்துதான் இருக்கிறார்.

பாரி : பின் மறுபடியும் இவ்வாறு மணம் செய்துகொள்ள நினைத்த எண்ணம் ?

அறிவர் : நாங்கள் அறியோம். நாங்களும் தடுத்துத் தான் உரைத்தோம். என்றாலும் அரசர் விருப்பத் துக்கு மாறாக எங்களால் ஒன்றும் செய்ய இயல வில்லை. ஆகவே புறப்பட்டு வந்தோம்.

பாரி : (கபிலரை நோக்கி) புலவர் பெருமானே! இவர்கள் கூறியவற்றைக் கேட்டீர்களன்றோ! என்ன சொல் வது ?

கபிலர் : புலவர் பெருமக்களே! எல்லாம் அறிந்த தாங்களா இப்பணியை மேற்கொள்ளவேண்டும் ? கொண்ட

மனைவி ஒருத்தியிருக்க, அவளை விடுத்து வேறொரு பெண்ணை மணக்க விரும்பும் நும் மன்னருக்கு அறிவுரை கொளுத்தவன்றோ அறிவராகத் தாங்கள் உள்ளீர்கள். மன்னன் வழுக்கிவிழும் காலத்து, ஊன்றுகோல்போல் நின்று, இடித்து அறமுரைக்கும் ஏற்ற பெரு நெறியன்றோ தங்கள் பொய்யா நெறி. அதை விடுத்துத் தாங்கள் இங்கு வந்து கூறித் தகாதனக் கூறல் பொருந்துமோ? அழகிய மனைவியை விட்டு, முதலில் கொண்ட மனைவியை விட்டு மறுமணம் புரிந்து கொள்ள விழையும் தங்கள் மன்னனின் மனம் தான் எதை நாடுகிறது என்று அறிந்தீர்களா?

**அறிவர் :** புலவர் பெருமானே! அறிவுடை மன்னு! எங்களால் இயன்றவரை எடுத்துரைத்தும் அவன் கேளாமையினால்தான் நாங்கள் வர நேரிட்டது.

**கபிலர் :** அறிவரே, அதை என் உளம் ஏற்காது. உம் அறிவுரையை அவன் மறுப்பானுயின் அவன் மாநிலம் ஆளும் மன்னனுயினும் அவனைவிட்டு விலகி யிருக்க வேண்டும். புலவரை வருகவென அழைக்கும் நல்ல மன்னர்களுக்கு இன்னும் நாட்டில் பஞ்சம் உண்டாகவில்லை. அத்தகைய அறமுறை பிறழ்ந்த மன்னனிடம் மண்டியிட்டு வாழ்வதிலும் மாள்வதே மேல். அறிஞர்களே, எனக்கிருக்கும் உரிமை உணர்ச்சியில் இவற்றைக் கொட்டிவிட்டேன். பொறுங்கள். ஆம், உங்கள் மன்னன் மறுமணம் கொள்ளக் காட்டிய காரணம்தான் என்ன?

**அறிவர் :** அறிஞர் பெருமானே, பாரிமகளிர் தங்கள் பால் கலை நலமும், தமிழ்ப் பண்பாட்டு நெறியும் பயில்கின்றுர்களென ஔவை மூலம் கேட்டறிந்தார் அவர்.

மன்னிக்கவும் 45ம் பக்கம்

அத்துடன் அவர்தம் இயற்கை எழில் பற்றியும் அறிந்துள்ளார். எனவே கலை வளர்க்கும் கருத்தாளராகிய அவர் அத்தகைய செல்வியரை மணக்க விரும்புகிறார்.

பாரி : ஓ! அப்படியானால் இருவரையுமே மணம் பேசச் சொன்னாரோ!

அறிவர் : ஆம், அரசே!

பாரி : நன்று! நன்று! ஏன் இப்படிப் பாண்டிய மன்னர் மதியிழந்தார். கொண்ட மனைவியை அண்டையில் வைத்துக்கொண்டு, வேறு இரு பெண்களை ஒரு சேர மணக்க விரும்புகிறார்?

அறிவர் : அரசே! தங்களது கொடை நலத்தையும் புகழ் வளத்தையும் பல்லோர் வாய்க் கேட்டறிந்த பாண்டி மன்னன் எப்படியும் உங்களோடு தொடர்பு கொள்ளத் துடிக்கின்றார்.

பாரி : தொடர்புகொள்ள இதுதான் தக்க வழி யென்று கொண்டாரோ? நன்று நும் மன்னர் நாட்டிய கொற்றம். அறங்கோலாக அமைந்து அரசு செலுத்திய பாண்டியமரபிற் பிறந்த மன்னரா இப்படி மதி யிழந்தார்? கை குறைத்தும், உயிர் விடுத்தும் முறை செய்த மன்னர்தம் வரிசையிலே இத்தகைய மதியிழந்த மன்னரா பிறக்கவேண்டும். புலவர் பெருமானே, தாங்களே இதற்கு விடை தரவேண்டும்.

கபிலர் : விடைதர என்ன இருக்கிறது? அறிஞர்களே, தாங்கள் வந்த வழியே திரும்பிச் செல்லுங்கள்.

அறிவர் : எங்கள் அரசருக்கு எதைச் சொல்லவேண்டும்?

கபிலர் : சொல்வதற்கு என்ன இருக்கிறது? கற்ற புலவர் கழகத்தின் நடுவே அமர்ந்து அறம் கேட்கும் அரசனுக்கு இந்தச் செயல் சற்றும் ஏற்காதது என்று

சொல்லுங்கள். பாண்டிமாதேவியாராகிய பத்தினியார் அரண்மனையிலே அழகே உருவாக அமைந்திருக்க வேறு பெண்டிரை விரும்பும் மனம் மாசுற்றுக் கெடுவதாகும் என்பதை எடுத்துச் சொல்லுங்கள். வழிவழி பிழையாது அறம் போற்றும் திங்களஞ் செல்வனது செம்மை மரபில் வந்த நும் வேந்தர்க்கு இவ்வெண்ணம் வேண்டாம் என்பதைச் சொல்லுங்கள். சிற்றின்ப வெறியாலே செய்வதறியாது ஒருத்திக்குமேல் வேறு ஒருத்தியை மனைவியாக விரும்பும் கொற்றவர் தமிழ் நாட்டில் அமைதியை நிலை நாட்டமாட்டார் என்பதை அறிவுறுத்துங்கள். சிறக்க வாழும் செல்வராயினும், பிச்சையேற்கும் வறியராயினும், எக்குடிபிறப்பினும், யாவரேயாயினும் இப்பொன்னுன தமிழ் நாட்டில் பிறந்தவராயின், பிறந்த அப்பிறப்பில் இருமாதரைச் சிந்தையாலும் தொடாச் செவ்வறமே சிறந்ததென்பதை தெளிவுறுத்துங்கள். முன்னை மணந்த தேவியார் வாட, அவளைக் கல்லென நினைத்துக் கைவிட்டு, பிற பெண்களை மனைவியாக்க நினைக்கும் எண்ணம் பெரிதும் தவறுடையதென்பதனை எடுத்துக் காட்டுங்கள். இப்படி அறமில்லா வழியில் மாறுபட்டு வாழ நினைக்கும் அவன் நாட்டில் புலவர்—அறிவுரைக்கும் செந்தண்மை மிக்கவர்—இல்லாது சென்று விட்டார்கள் என்பதைத் தெளிவாக்குங்கள். கோப்பெருந்தேவியினும் அறிவிற் சிறந்தாரென்ற காரணத்தால் இப்பாரி மகளிரை விரும்புவானுயின், பின் இவரினும் மிக்காரைக் காணின் இவரையும் கைவிடத்தானே செய்வான் என்பதை எடுத்துக் காட்டுங்கள். பெற்ற தாய் அறிவற்றவள் என்பதற்காக, வேறொரு தாய் நாடும்

வேந்தர் தமிழ் நாட்டுக்குப் பெருந் தவறு செய்தவர் என்பதைத் தனியாக எடுத்துரையுங்கள். இருவர் உள்ளம் பொருந்த வாழ்வதே இல்லறம்; மற்றல்லா தன வெல்லாம் வேறு என்பதை எடுத்துக் காட்டி, கொண்ட கோப்பெருந் தேவியோடு, குடியோம்பி, பாண்டி நாட்டிற்குப் பழியுண்டாகாதவாறு பாது காக்கச் சொல்லுங்கள். போதுமா சொல்ல வேண்டி யவை.

**அறிவர்:** புலவர் பெருமானே! தங்கள் முன்னே நாங்கள் நிற்கவும் அஞ்சுகின்றோம். அஞ்சாது அறமுரைக்கும் அறிவும் திறமும் பொருந்திய தங்கள் முன் நாங்கள் கோழைகளே. எனினும் அறிஞர் பெரும! இதோ நாங்கள் சென்று தாங்கள் உணர்த்தியபடியே அறம் உணர்த்துகின்றோம். அப் பாண்டிய மன்னன் அந்த அறவழியில் செல்லாது மாறுபடுவானாயின் நாங்கள் அவன் அவைக் களத்தை விட்டுப் புறப்படுகின்றோம். மன்னர் மன்ன, தாங்கள் ஏதேனும் சொல்ல வேண்டியிருப்பின்...

**பாரி:** நான் வேறு சொல்ல வேண்டியது என்ன உள்ளது? இதோ புலவர் பெருமான் சொல்லிய அத்தனையும் என் உள்ளத்திலிருந்துவந்த சொற்கள் தாம். ஆகவே தாங்கள் சென்று நம் அரசருக்கு அறிவுறுத்தி அற வழி வாழச் செய்யுங்கள்.

**அறிவர்:** நல்லது. நாங்கள் சென்று வருகின்றோம். வணக்கம்.

**பாரி:** வணக்கம்.

**அறிவர் :** (கபிலரை நோக்கி) என்றென்றும் தங்கள் அறிவொளியில் நாங்கள் வாழ வழி காட்டுங்கள்.

**கபிலர் :** வாழ்க.

**அறிவர் :** சென்று வருகின்றோம், வணக்கம்.

(பாண்டியன் தனியிடத்தே உலவி வருகின்றான்.)

ஒரு சிறு தலைவன். நமது படைமுன் நிற்கமாட்டாது பறந்தோடும் பஞ்சை. அவனா எனக்கு அறிவு புகட்டுவது. இருக்கட்டும். அவன் ஆட்டத்தை அடக்குகிறேன். அது ஒரு புறம் கிடக்க, இந்த அறிவருக்குத்தான் ஏன் இப்படி மதி கெட்டது? அவர்கள் யார் எனக்கு அறிவுறுத்த? நான் என்ன ஒன்றும் அறியாதவனா? உணரும் அறிவற்றவனா? அவர்களைப்போல ஊர்தோறும் சென்று பாடித் திரியும் பாணர் கூட்டத்தைச் சேர்ந்தவனா? ஒழியட்டும். எனக்கு அறிவுறுத்த இருக்கிறார்களாமே அவர்கள். அவர்கள் சொன்னபடி கேட்காவிட்டால் பாண்டி நாட்டை விட்டே புறப்பட்டு விடுவார்களாமே. ஒழியட்டும். யாருக்கு அதனால் என்ன குறை? அவர்கள் ஒழிந்தால் நாடு என்ன கெட்டா போய்விடும்? அதையும் பார்க்கிறேன். உடனே புறப்படவேண்டும் என்பதையும் சொல்லி விட்டேன். ஆமாம், என்ன போன காவலாளி இன்னும் திரும்பவில்லை! சேரனும், சோழனும் இன்னும் வரக் காணோமே. (காவலாளி வருகிறான்: பின்னே சேரனும் சோழனும் வருகின்றனர்.) வாருங்கள் வாருங்கள்.

**சேரன் :** என்ன பாண்டியரே! ஏது முகத்தில் சீற்றம் தெரிகின்றதே. பாரியிடமிருந்து அறிவர்கள் வந்தனர் என்று கேள்விப்பட்டேன். என்ன விடை பெற்றீர்கள்?

**பாண்டி :** விடையாவது பெறுவதாவது. மக்களைத் தர முடியாது என மறுத்து விட்டானும். அத்துடன் அவன் நம்மையெல்லாம் வேறு பழித்தானும்.

**சோழன் :** ஓகோ, அவ்வளவுக்கு வந்து விட்டானு அவன்; இருக்கட்டும். அவன் கெட்டொழியக் காலம் கிட்டியது போலும்.

**பாண்டி :** அதுமட்டுமன்று நண்பரே. அவனுடைய அவையிலே யிருக்கிருரே புலவர், அவர் கூட அல்லவா நம்மை இகழ்ந்தாராம்.

**சேரன் :** இருக்காதா? ஊரார் வீட்டுச் சோற்றைத் தின்று உடம்பைப் பெருக்கும் அந்தப் புலவர்களுக்குத்தான் வேறு என்ன வேலை? அவன் சோற்றை அங்கே தின்பதற்கு வேறு என்ன செய்ய முடியும்? ஆகவே ஏதாவது உளறியிருப்பார்.

**பாண்டி :** அது மட்டு மன்று, நண்பரே. நம் அறிவர் மனத்தையும் மாற்றி விட்டார் அந்தப் புலவர்.

**சேரன் :** அப்படியா, இருக்கும். அவனைப்பற்றி முன்னமே கேட்டிருக்கிறேன். தானே மேதாவி என்று பேசுவானும். அவனை மிஞ்ச நாட்டில் யாருமில்லை என்ற எண்ணமாம். தன்னைப் பற்றித் தானே பெருமையாகப் பேசிக் கொள்வானும். அவன் கிடக்கிருன்.

**பாண்டி :** அப்படி விட்டு விடுவதற்கில்லையே. அவன் ஏதேதோ சொல்லி நம் அறிவர் மனத்தையே கலக்கியிருக்கிருன்.

**சோழன் :** அப்படி என்ன செய்து விட்டான்? அறிவர் என்ன சொன்னுர்கள்?

**பாண்டி :** சொல்வதற்கு என்ன இருக்கிறது? நான் இந்த

எண்ணத்தைக் கைவிட்டுவிட வேண்டுமாம். அதை விட்டால்தான் இங்கே இருப்பார்களாம்.

**சேரன்:** இன்றேல்?

**பாண்டி:** இன்றேல் என்ன. அவர்கள் நாட்டை விட்டே போய் விடுவார்களாம்.

**சோழன்:** அப்புறம் நாடு வாழாதா என்ன? எங்கே போகிறார்கள் அந்தப் பிச்சைக்காரர்கள். சுற்றிச் சுற்றி நம் மூவரிடம் தானே வரவேண்டும். பார்த்துக் கொள்ளலாம்.

**பாண்டி:** நான் அப்போதே அவர்களை வெளியேறுமாறு உத்தரவிட்டு விட்டேன். இந்நேரம் அவர்கள் புறப்பட்டுக்கூட இருக்கலாம்.

**சேரன்:** நல்லது செய்தாய் நண்பா! அது கிடக்கட்டும். இனிமேல் செய்ய வேண்டுவது என்ன?

**சோழன்:** வேண்டுவது என்ன இருக்கிறது? போர் தொடங்குவதுதான்.

**பாண்டி:** அது பற்றித்தான் நான் ஆழ்ந்து எண்ணியிருந்தேன். உடனே அவன்மேல் போருக்குப் புறப்படத் தயாராகப் போகிறேன்.

**சேரன்:** என்ன, நீ மட்டுந்தானு?

**பாண்டி:** நான் ஒருவன் போதாதா? நீங்கள் எல்லாம் ஏன் வீணாக என் பொருட்டு வருந்த வேண்டும்?

**சோழன்:** இதில் வருத்தம் என்ன இருக்கிறது? வருவது யாவருக்கும் ஒரு சேர வரட்டுமே.

**பாண்டி:** நான் அதற்காகச் சொல்லவில்லை. அந்த சிறு துரும்பை நசுக்க மூவேந்தரும் புறப்பட வேண்டுமா? நான் ஒருவன் போதாதா? நான் கூடப் போக வேண்டியதில்லை. நமது படைத்தலைவரே சென்று வெற்றி

யோடு அவனைச் சிறை செய்து வருவார் என்பது உறுதி.

**சேரன் :** நீங்கள் சொல்வது ஒருவகையில் உண்மையென்றாலும், யாரையும் அவ்வளவு எளிமையாக எண்ணிவிடலாகாது. 'வினைவலியும், தன்வலியும், மாற்றான் வலியும், துணைவலியும், தூக்கி' ஆராயும் மறவர் குடியில் வந்த நாம் இதையும் ஆய்ந்தே முடிவு செய்ய வேண்டும். போர்க்குப் புறப்படுமுன் ஒற்றரை அனுப்பி உற்றது அறியவேண்டும். அவன் நாடு மலையரண் உடையது. ஆகவே ஆய்ந்தே போர் தொடங்க வேண்டும்.

**சோழன் :** ஆமாம், சேரர் சொல்வது உண்மைதான். உடனே ஒற்றர் மூலம் வழித்துறை அறிய வழி காணுங்கள். பின் நம் மூவரும் கலந்து அவன் நாட்டை முற்றுகையிடுவோம். எப்படியும் வெற்றி கொள்வோம் என்பது உறுதி.

**பாண்டி :** எனக்கென்னவோ அவ்வளவு முன்னேற்பாடு தேவையில்லை என்று படுகிறது. நீங்களும் வீணாக ஏன் கவலை கொள்ள வேண்டுமெனக் கருதுகின்றேன்.

**சோழன் :** என்ன? உங்களுக்கு வந்த குறை நமக்கும் வந்த தன்றோ ! நீங்கள் அதுபற்றி எல்லாம் சிந்தை செய்ய வேண்டாம். நாங்கள் உடனே எங்கள் நாடுகளுக்குச் சென்று எம்மவரைப் போருக்குத் தயாராக்குகின்றோம். நீங்களும் உடனே ஆவன செய்யுங்கள். ஒற்றர்மூலம் உற்றதை அறியுங்கள். உங்கள் படைகளும் ஆயத்தமாகட்டும். என்ன சேரரே, சொல்லுவது சரிதானே ?

**சேரன் :** ஆகா! அதில் தடையென்ன? உடனே செய்ய வேண்டுவது அதுவே.

**பாண்டி :** சரி, உங்கள் விருப்பப்படியே ஆகட்டும். நானும் போருக்குப் புறப்படுகிறேன். ஒற்றர்கள் கண்டு வந்ததும் ஓலை அனுப்புகிறேன். குறித்த நாளில் புறப்பட்டு மூவரும் பறம்பு மலைச் சாரலில் காண்போம்.

**சேர, சோழர் :** நல்லது, வருகிறோம்.

## மூன்றும் அங்கம்

### காட்சி 1.

**ஔவை :** இதுதானே பாரியின் பறம்பு நாடு. ஆம், எவ்வளவு அழகாக இதன் இயற்கை வளம் அமைந்துள்ளது. தமிழ் நாடே இயற்கை வளத்துக்குப் பேர் போனதுதான். ஆனால் இப்பறம்பு மலையோ அதனினும் மேம்பட்டதாக அன்றோ விளங்குகின்றது. இத்தகைய அழகிய மலையில் வாழ்கின்ற பாரியின்உள்ளமும்இயற்கையாதல் இயல்பேயன்றோ. அதனால்தான் போலும் வாய் திறந்து வேண்டாத நிலையினும் தன் பொற்றேரை முல்லைக்கு விட்டு வந்தான் அந்தக் கோமகன். தற்போது அவனுக்கு ஏற்ற முறையில் அருகிலிருந்து அறமுறைக்க அந்தணளன் கபிலன் வேறு உடன் இருக்கின்றான். அவனை ஒத்த புலவரை உடன் வைத்திருக்கப் பாரி மன்னன் செய்த பெரும் பேறே பேறு. இயற்கையின் இடையிலே தன்னை மறந்திருக்கும் தனிப்பண்பு வாய்ந்த அக்கபிலனுக்கு ஏற்ற மலை இது. அவன் புகழ் பெற்று என்றும் மங்காது விளங்கத் தக்க வளனுர்

மலையிது. இந்த மலை நாடி நான் இத்துணை நாள் வாரா திருந்தது ஒரு பெருந்தவறேயாகும். நான் நரை மூதாட்டியாகிய அந்தக் காலம்வரை எத்தனையோ வரைகளைக் கண்டுதானே இருக்கிறேன். இதோ இப் பறம்புமலை போன்ற அழகார் மலையைக் கண்டதில்லை யன்றோ! என் மனம் இன்று ஏனோ பெரிதும் மகிழ் கின்றது. அதிகமான் அஞ்சியிடம் பல்நெடுநாள் நிலைத்து நின்றது பெருந் தவறாகிவிட்டது. இதுபோன்ற பாரிற் சிறந்த பெரு வள்ளலைக் காணுது காலம் கழித்தல் தவறு தானே. ஊர்தோறும் உழலும் வாழ்வில் புலவர் வாழ்ந்தா லும் அந்த உழலும் நெறில்தான் எத்துனே இன்பம்! எத்துணை இயற்கை உயிர் ஓவியங்கள் அவர்கள் முன் நிற் கின்றன. எத்தனைப் பேரரசுகள் அவர்களை வருக என்று வரவேற்கின்றார்கள். புலவர் வாழ்வு வறுமையில் இருப்பி னும் பெருமை நிறைந்த வாழ்வன்றே! புலவர் பாட்டுக்கு ஏங்கும் புரவலர்தான் நாட்டில் எத்துணைப்பேர்! பேரரசு களும் ஏழைப் புலவரை ஏற்ற முறையிலே போற்றுகின்ற னர். என் அருமைத் தமிழ்நாடே! உன் பெருமையே பெரிது. 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்பது உண்மையாயினும் அது புலவர் மாட்டு பொய்த்துவிடு கிறதே. புலவர் தமக்கெனச் சேர்த்து ஒன்றும் வைக்காது ஏழையினும் ஏழையாய் வாழ்ந்தாலும் அரசருக்கு அரச ராகவன்றோ நாட்டு மன்னரால் போற்றப்படுகின்றார். ஒரு ஏழைக் கிழவிக்கு இந்நாடு வணங்குகின்றது. இதை நான் பெருமையால் பேசவில்லை. தமிழ்நாடு புலவர்களுக்கு எவ் வாறு ஏற்றம் தந்து போற்றுகின்றது என்பதற்கு இத னினும் சிறந்த சான்று என்ன வேண்டும்? மாங்குடி மருதன் தலைவனாக நின்ற புலவர் வரிசை பாடாத பண் பினைக் கொடிய பண்பாக அன்றோ கருதினன் பாண்டி யன். முடியுடை வேந்தர் மூவர் மட்டுமின்றி, இப்

பாரி போன்ற குருநில மன்னரும்கூடத் தமிழ் வளர்த்த நெறியை எண்ணின் என்றென்றும் இக் கன்னித் தமிழ் பொன்னி நாட்டில் அழியாது வாழும் என எண்ணுகின்றேன்! வாழ்க தமிழ். ஆமாம், அதோ தெரிகிறதே, அதுதான் கபிலரது வீடு போலும்! அப்படித்தானே அந்த வழிப்போக்கன் சொன்னன்.

(ஒரு வீட்டின் அருகில் சென்ருர்) ஐயா! ஐயா!

**உள்ளேயிருந்து கபிலர்:** யாரது?

**ஔவை:** நான் ஒரு கிழவி. உங்களைப் பார்க்கவேண்டும்!

**கபிலர்:** கிழவியா? என்னைப் பார்க்க வேண்டுமா? இதோ வருகிறேன்.

(வெளியே வருகிருர். ஔவையைக் காண்கிருர். அப்படியே வீழ்ந்து பணிகிருர். ஔவை தூக்கி நிறுத்தி)

**கபிலர்:** அன்னுய்! வாழி நெடுங்காலம் தாங்கள் இப் படித் தெருவிலிருந்து என்னை அழைக்க வேண்டுமா? இது தங்கள் இல்லம்தானே. வாருங்கள் உள்ளே போகலாம். (இருவரும் போகின்றனர். உட்காருகின்றனர்.)

**ஔவை:** அப்பா, கபிலா. நீ வாழ்வாயாக. உன்னைக் கண்டுதான் எத்தனை நாட்களாயின? என்ன இப் படி நீ ஒரு சேரப் பாரியிடம் தங்கிவிட்டாயே?

**கபிலர்:** அன்னுய், நான் என் செய்வேன்? இங்கு வரும் போது அந்த எண்ணத்தோடு வரவில்லை நான். புலவர் உரிமைப் பறவைகளென ஓடித் திரியும் பண் பாளர் என்ற உணர்வில்தான் பறம்புமலை வரும் வரையில் இருந்தேன். ஆனல் இம் மண்ணில் கால்

இதுவே புத்தகம். ஜ்ம்
பாரதி

வைத்ததும் பாரியைக் கண்டதும் வேறு எங்கும் செல்ல உளம் இடம் தரவில்லை.

**ஔவை :** உண்மைதான். நான் அதிகனிடம் அகப்பட்டு அவன் அன்பில் திண்டாடவில்லையா? பிறவர்க்கு அஞ்சாத் தமிழினம், அன்பு ஒன்றுக்குத்தானே அஞ்சி வாழ்கின்றது. எத்தகைய ஆசைக்கும், ஆரவாரத்துக்கும், வெளிப்பகட்டுக்கும் கட்டுப்படாத இந்தச் சிறந்த தமிழ் இனம் உள்ள அன்பு ஒன்றுக்குத்தானே கட்டுப்படுகிறது. எதிர் வரும் எந்நாட்டு மன்னருக்கும் அடங்காத இந்தத் தமிழ் இனம் அன்பு ஒன்றுக்குத்தானே அடங்குகிறது. அறிந்தேன்; பாரியின் பண்பும் அன்பும் தனிப்பட்டவை எனப் பல்லோர் சொல்லக் கேட்டறிந்தேன்- அவன் அன்பில் வாழும் நீ மீளமாட்டாய் என்பதும் அறிவேன். நானும் அவனைக் காணத்தான் வந்திருக்கிருக்கிறேன். என்றாலும் விரைவில் திரும்பிவிட வேண்டும்.

**கபிலர் :** தாயே, தங்கள் விருப்பம்போல் செய்யலாம். என்றாலும் ஒரு முறை அவனிடம் பழகிவிட்டீர்களானல் மறுபடியும் இவனைப் பிரிய உங்களுக்கே விருப்பம் இராது. சரி, நாளைக்கு அவனைக் காணச் செல்லலாம். தாங்கள் தற்போது உணவு முதலியன கொள்ளலாமே.

**ஔவை :** அப்பா, சற்று போகலாம். நீ எப்படி இங்கே பிறவற்றையெல்லாம் மறந்து தங்கிவிட்டாய்.

**கபிலர் :** அன்னய். எல்லாம் தங்கள் அருள் தான்.

**ஔவை :** ஆமாம், அறிகிறேன். நீ பாடக்கூடிய குறிஞ்சி வளத்தின் நடுவில் சிக்கிக்கொண்டாயே? எப்படி

விட மனம் வரும்? அத்துடன் அன்புருவாய மன்னன். நல்லது; உன் தமிழ்ப் பணி உலகு உள்ள வரையும் நிலைத்து நிற்கும். வாழ்க.

**கபிலர்:** அன்னாய், என்றும் உங்கள் அன்பின் வாழ்த்தைப் பற்றியே வாழ்கின்றேன். நானே பாரியைக் காணலாம். வாருங்கள் உணவு கொள்ள. நல்ல இயற்கை உணவுகள். உடலுக்கு நலம் தரும் உணவுகள்.

**ஔவை:** அப்படியா. இதோ. (இருவரும் உணவு கொள்ளச் செல்கின்றனர்)

## காட்சி 2

(ஔவை வந்து சில காலம் பாரியோடும், கபிலரோடும் தங்கியிருந்தார். கடைசியில் ஊருக்குப் புறப்படு நாளில்)

**பாரி:** ஏன் இன்னும் அவர்கள் வரவில்லை. இன்று காலை சீக்கிரமே வந்து விடுவதாகவன்றோ சொல்லிச் சென்றார்கள். ஒருவேளை ஔவையார் ஊருக்குப் போவதாகச் சொன்னாரே; அப்படியே போய்விட்டார்களா? இல்லை அப்படியிருக்காது. நம்மிடம் சொல்லாமலா போய்விடுவார்? ஒருவேளை சொன்னால் நான் அனுப்ப இடங்கொடுக்க மாட்டேன் என்று கருதி அப்படியே சென்றுவிட்டும் இருக்கலாம். எதற்கும் பொறுத்துப் பார்ப்போம்.

ஆம், ஏன் என் நெஞ்சம் இப்படிப் புலவர்பால் ஓடுகின்றது? அந்த அம்மையாரோ, நாடெலாம் சுற்றிவரும் நல்லவர். நம் நாட்டில் மட்டும் இருங்களென்றால் அவர்கள் அதற்கு எப்படி இசைவார்கள்? தமிழ் நாட்டில் ஒழுக்காறு வாழும் உயர்ந்த கவிவாணர்கள் எப்படி ஒரு இடத்தில் தங்கியிருப்பார்கள்? உரிமையால் பறந்தோடிப்

பாடி ஆடும் பறவைகளுக்கும் இவர்களுக்கும் என்ன வேறுபாடு? இவர்களைக் கூட்டில் அடைப்பதுபோன்று ஒரே இடத்தில் தங்குக என வேண்டுவது தவறுதானே. ஆம், தவறுதான். உணர்கின்றேன். என்றாலும் ஔவையைப் பிரிய முடியவில்லை. கடந்த சில நாட்களாக ஔவையும் கபிலனும் என் அருகிருந்து உணர்த்திய அந்த அன்பு மொழிகளை மறப்பதா? என்றென்றும் இல்லாவிட்டாலும் இன்னும் சில நாட்களுக்காவது ஔவையை இங்கு இருக்குமாறு வேண்டிக்கொள்ளுவேன். அதோ, அவர்கள் வருகிறார்கள். (கபிலரும் ஔவையும் வருகின்றனர்) வாருங்கள் புலவர் மணிகளே!

**கபிலர் :** அன்பிற் பாரி, நாங்கள்வரச் சற்றுக் காலம் தாழ்த்தது. பொறுக்க.

**பாரி :** புலவர் பெருமானே, அமருங்கள். மூதாட்டியாரே, எங்கள் பறம்பு மலையும் நாடும் தங்கட்கு ஏற்றதாக அமைகின்றனவன்றோ.

**ஔவை :** ஆகா, அதிலென்ன ஐயம்! என்றென்றும் இங்கேயே தங்கிவிடலாம் போல் தோன்றுகின்றதே. இயற்கைக் காட்சிகளும், இயற்கை வகையில் பெறும் உணவும் பிற இயற்கை நலங்களும் உடலையும், உயிரையும் ஒரு சேர ஓம்பி வளர்க்கின்றனவே.

**பாரி :** ஆகவே நான் இனிக் கவலை வேண்டியதில்லை.

**ஔவை :** என்ன அப்படி? அப்போது இதுவரை கவலையில் இருந்தீர்கள் போலும்.

**பாரி :** ஆம் அம்மையே, தாங்கள் சில நாட்களாக எங்களை விட்டுச் செல்லப் போவதாகக் கூறிக்கொண்டு வருவதை எண்ண எண்ணக் கவலைதானே ஏற்படுகின்றது. இதுவரையில் கவலை கொண்டுதான் இருந்

தேன். கற்றறிந்த விற்பனராகிய தங்களைப் போன்ற நல்லவரை விட்டுப் பிரிவதால் பெறும் கவலையை விட வேறு கவலை எனக்கு ஏது அன்னாய்? இதோ இன்று அந்த இயற்கை நலங்களை யெல்லாம் கண்டு, விளக்கி, இங்கேயே இருக்கும் வகையில் தாங்கள் பேசியது என் கவலையைப் போக்கியது.

ஔவை : மன்னா! உன் அறிவும் திருவும் வாழ்வதாக! எத்தனை இயற்கையும் எழிலும் பொருந்தியிருப்பினும் என்போன்ற பறக்கும் பறவைக்கு அவற்றை அனுபவிக்க ஏது நேரம்? இதோ இன்று நான் புறப்படுவதாகவே முடிவு செய்து வந்திருக்கிறேன்.

பாரி : என்ன கொடுமையான சொற்கள்? அன்னாய், இன்னும் சில நாட்களாவது தாங்கள் இங்கு தங்கியிருப்பீர்களென எண்ணினேன். என் பொருட்டன்றியேனும், இதோ கபிலர் பெருமான் பொருட்டாகவாவது சில நாட்கள் தங்கியிருந்தால் நலமாகும்; என்ன பெருமானே!

கபிலர் : ஆம் மன்னா. நானும் அதுபற்றித்தான் நெடுநேரம் பேசினேன். அதனாலேதான் நான் இங்கு வருவதற்குக் கூடக் காலம் தாழ்த்தது. நான் எவ்வளவு சொல்லியும் அவர்கள் இன்றே புறப்பட வேண்டும் என்று முடிவு செய்துவிட்டார்கள். பின் நான் என்ன செய்வது?

பாரி : புலவர் பெருமானே, உணர்கின்றேன். அறிஞர் கருத்து அதுவாயின் என்போன்றோரால் செய்ய என்ன இருக்கின்றது? அன்னையீர், தாங்கள் இன்றே புறப்பட வேண்டுமா?

ஔவை : பாரி மன்ன, ஆம். வேறு என்ன செய்வது? இதோ இந்தக் கபிலர் உன்னிடம் நின்றுவிட்டது போன்று, நான் எப்படியோ அதிகமானிடம் அமைந்துவிட்டேன். அவனைக் காணவேண்டும் என்ற அவா தூண்டுகின்றது. அவன் நாட்டில் அமைதியை நாட்ட நான் அருகிருந்து அடிக்கடி ஆவன செய்ய வேண்டியுள்ளது. கபிலரை நீ பிரிந்தால் என்னவாய். அதே நிலையில்தான் இன்று என்னைப் பிரிந்து அதிகன் வருந்துவான். மன்ன, வேறு வகையாக எண்ண வேண்டாம். உன்னினும் அவன் உயர்ந்தவன் என்று கூறவில்லை. அல்லது உன்னிடம் என் மனம் பொருந்தாது என்று காட்டவில்லை. எப்படியோ அதிகனது அரசியலில் எனக்குப் பங்கு ஏற்பட்டுவிட்டது. ஏற்பட்ட பணியை இடையூறின்றிச் செய்து முடித்தல் தானே தமிழர் கடன். அது மட்டுமன்று. நேரே சென்று அதிகனைக் கண்டு, பிறகு வடநாடு செல்ல நினைத்துள்ளேன். தமிழ் நாட்டு வடவெல்லைவரையிற் சென்று வளம் காணவேண்டுமென்பது என் எண்ணம். நான் வடநாடு சென்று பல ஆண்டுகள் ஆயின. ஆகவே அதையும் மனதில் வைத்தே உடன் புறப்பட வேண்டும் என விழைகின்றேன்.

பாரி : கபிலர் பெருமானே, அன்னையாருடைய முடிவு அது வாயின் நாம் என்ன செய்யக்கூடும்? ஏதோ இன்னும் சில நாட்களாவது இங்கிருப்பார்களென எதிர்நோக்கினேன். பயனில்லை.

கபிலர் : ஆம், பேசுவதிற் பயனில்லை, அவர் செல்வதற்கு ஆவன செய்.

பாரி : அப்படியே, இதோ அமைச்சர்மூலம் பொன்னும் மணியும் பிறவும் அம்மையாருக்கு அளிக்க ஏற்பாடு

செய்கின்றேன். அவை வந்ததும் நானே கொடுத்து, காலின் ஏழடி பின்சென்று வழிவிடுகிறேன். புலவர் பெருமானே, நேரமாகிறது. உணவு கொ... ...மே.

**கபிலர் :** நன்று. (அனைவரும் செல்...

TC LIBRARY
9658

## காட்சி 3

(காட்டிடத்தே தனிமையில் ஔவையார் பொன்னும் மணியும் கொண்டு செல்கின்றார்.)

**ஔவை :** என்ன அன்பு? என்ன இனிமை? இப்பாரியை விட்டுப் பிரியவே தோன்றவில்லையே. எப்போதும் அவனிடமே இருந்துவிடலாம் போன்று தோன்றுகின்றதே. பொய்யா நாவிற் கபிலனும் அதனாற்றானே அப்படி அவனுடன் கலந்து உறைகின்றான். நான் அதிகனிடத்துக்கு விரைந்து செல்லவேண்டும் என்பதற்காகத் தானே புறப்பட்டேன். இன்றேல் இன்னும் சில நாட்களாவது அவனுடன் தங்கியிருக்கலாமே. ஆகா, அவன் கடைசியில் விட்டுப் பிரியும் காலத்து எப்படிக் கலங்கினான்? அவனது அன்பு மழையில் நனைந்த என் உளத்தே இன்னும் ஈரம் உலரவில்லையே. இதோ தெரிகின்றதே அவன் மலை. ஆகா, அந்த மலையில் தான் எத்தனை இயற்கை வளம்! இதைக் கபிலன்தான் எவ்வளவு அழகாகப் பாடியிருக்கிறான். அவன் பாட்டை மறுபடியும் எண்ணிப் பார்க்கலாம்.

> ஒருசார் அருவி ஆர்ப்ப ஒருசார்
> பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
> வாக்க வுக்க தேக்கட் தேறல்

Acc. 9658.
031:X
1493.1

கல்அலைத் தொழுகும் மன்னே பல்வேல்
அண்ணல் யானை மூவேந்தர்க்கு
இன்னன் ஆகிய இனியோன் குன்றே. (புறம் 115.)

ஆம். என்ன அழகிய பாடல். பகைவர்க்கு இன்னாயினும், என் போன்ற புலவர்க்கு இனியவனாகிய அப் பாரியின் பறம்பைப் பாட இவரினும் சிறந்த புலவர் யார் இருக்கிறார்கள்? தேன் பெருக் கெடுக்கும் சிறந்த மலை இதனினும் யாது உளது? பாரியும் கபிலனும் இப்பறம்பு மலையும் வாழ்வதற்கா! (தூரத்தே சிலர் வருகிறார்கள்.) யாராது! இப்படி ஓடி வருகிறார்களே. கள்ளர் போல் தெரிகிறதே. கையில் கத்தி முதலியன. என்ன இது, பறம்பு நாட்டிலுமா— பாரியின் அறவாழி ஆணை செலுத்தும் இந்த அரிய நாட்டிலுமா—இப்படிக் கொள்ளைக்காரர்கள். இருக்காது.

(வேடுவர் அருகே வருகின்றனர்.)

ஒருவேடு: ஏ பாட்டி! எங்கே போகிறே?

ஔவை: யாரப்பா நீங்கள்? என்னையேன் கேட்கிறீர்கள்?

மற்றொரு வேடு: பாட்டி, வேண்டுமென்றுதான் கேட்கிறோம் ஆமாம், நீ இப்போ எங்கே போகிறே?

ஔவை: நான் எங்கோ போகிறேன். எனக்கே தெரியாதே.

வேடு: பாட்டி, நல்லாயிருக்குதே நீ பேசறது. உனக்கே தெரியாத ஊருக்கு எதுக்காகப் போவனும், பாட்டி?

ஔவை: அதுதான் அப்பா எனக்கும் தெரியவில்லை.

வேடு: தெரியவில்லையா? ஆமாம், அதோ ஒரு மூட்டை வைச்சிருக்கிறயே அது என்ன?

**மற்றொரு வேடு:** பாட்டி, போட்டுக்க கொஞ்சம் வெத்திலே பாக்கு இருந்தா கொடேன்.

**ஔவை:** வெற்றிலே பாக்கு என்னிடம் கிடையாதப்பா.

**வேடு:** டே, அந்தப் பாட்டிகிட்டே அதெல்லாம் இருக்காது. நிறைய நகையிருக்கும்.

**மற்றொரு வேடு:** போடா பயித்தியம்! இந்தக் கிழத்திண்டே ஏதுடா நகை. ஐயோ பாவம்! அதுமாட்டும் போகட்டும். நமக்கு என்னத்துக்கு இந்த சிழவிகிட்ட விளையாட்டு.

**வேடு:** பாட்டி, இந்த முடிச்சிலே என்ன வைச்சிருக்கே பாட்டி?

**ஔவை:** அப்பா, அதுதான் எனக்கும் தெரியவில்லை.

**வேடு:** பாட்டி, பார்த்தியா பொய் சொல்றே. அதிலே வைச்சிருக்கிறதே உனக்குத் தெரியல்லே எண்ணு நீ ஏன் அதை எடுத்துண்டு போகணும்.

**ஔவை:** அப்பா. யாரோ முடிந்து கொடுத்தார்கள். கொடுத்ததை வேண்டாம் என்று சொல்லக்கூடாதே என்று எடுத்து வந்துவிட்டேன்.

**வேடு:** சாப்பாட்டு மூட்டையாயிருக்குமா?

**மற்றொரு வேடு:** அட பயித்தியமே. சாப்பாடு மூட்டையல்லடா இது. இதில் ஏதோ நிறைய பணம் இருக்கத்தான் வேணும்.

**ஔவை:** நீங்கள் யார்? ஏன் இதுபற்றியெல்லாம் கேட்கிறீர்கள்?

**வேடு:** நாங்களா, நாங்கள் இந்தக் காட்டிலே இருக்கிற வேடருங்கோ. எங்கள் தொழில் வழிப்பறி கொள்ளை. அதனாலேதான் உங்களிடம் இருக்கிறதையும் கொள்ளை அடிக்கலாம் என்று வந்தோம். உங்களை,

பார்த்தா ரொம்ப நல்லவங்களா தெரியுது. அதனலே தான் பேசிண்டிருக்கோம்.

மற். வேடு : ஆமாம் பாட்டி, ஆமாம். வேறு யாராவது இருந்தா இந்நேரம் தப்பு திப்பு என்று இரண்டு போட்டு, மூட்டையோடே ஓடிவிட்டிருப்போம். நீங்க நல்லவங்களா யிருக்கிறதனலே, நல்லபடியே மூட்டை வாங்கலாம்னு முடிவு கட்டிட்டோம்.

ஔவை : என்ன இது? பாரி ஆளும் இப்பறம்பு நாட்டிலுமா இந்தக் கொடுமை! நாகரீகம் வாய்ந்த பாரி மண்டலத்திலா இந்த அநாகரிகக் கொள்ளை! அவன் நாட்டில் பட்டினியால் வருந்துபவர் இருந்தால் அல்லவா கொள்ளை. அப்பா, நீங்கள் ஏன் இப்படிக் கொள்ளை அடிக்கிறீர்கள்? உங்களுக்கு வேறு பிழைப்பே கிடையாதா?

வேடு : உண்டு உண்டு. என்றைக்காவது ஒரு நாளைக்குத் தேவையானல் இப்படி வருவோம். ஆமாம், நாழியாகிறது. கொடுங்கள் உங்கள் மூட்டையை.

ஔவை : கொடுக்காவிட்டால் என்ன செய்வீர்கள்?

வேடு : கொடுக்காவிட்டால் கொள்ளை அடிக்கிறோம். எத்தனையோ விரோதிகளையெல்லாம் வெட்டி வீழ்த்திய எங்களுக்கு கிழவியாகிய உன்னை வீழ்த்துவதுதான பெரிது.

ஔவை : அப்போது என்னை விடமாட்டீர்களா?

வேடு : பொருளைக் கொடுத்துவிட்டால் உங்களை ஒண்ணும் செய்யமாட்டோம் (ஔவை சுற்றிப் பார்க்கிறர்)

வேடு : என்ன! நல்ல மாதிரி கேட்டால் கொடுக்கமாட்டீர்களா? யாராவது துணைக்கு வருகிறர்களா என்று பார்க்கிறீர்களா? அதெல்லாம் ஒன்றும் கிடைக்காது. உம், கொடுங்கள் மூட்டையை. (மூட்டையைப்

பற்றிக் கொண்டு வந்த கள்வர் மூவரும் சென்று மறைகின்றனர். ஔவை தனிமையில்)

**ஔவை :** என்ன இது கொடுமை! வயிற்றுக்குக் கஞ்சி யில்லாது வாடும் மக்களது அநாகரிக நாட்டிலன்றோ இது போன்ற கொள்ளையும் கொலையும் நடக்கும். எல்லோருக்கும் வாழ வழி வகுத்தும், இயற்கை நல்கும் இனிய உணவுப்பொருள்களோடு செயற்கை யால் கைவருந்திப் பாடுபட்டால் விளையும் உணவுப் பொருள்களையும் மக்கள் பொருட்டு வாரி வழங்கும் வள்ளல் பாரி நாட்டிலுமா இந்தக் கொள்ளையும் கொடு மையும்? எங்கேயோ தவறு இருக்கிறது! பாரி மன்னன் தவறுடையவனுமல்லன் அல்லவா அவன் நாட்டில் இத்தகைய கொடுமைகள் நிகழும். அவன் கொடிய னென்றோ, கெட்டவனென்றோ யார் சொல்லக் கூடும்? அத்தகைய தூய மன்னன் ஆளும் இந்த நாட்டிலும் கொள்ளை நடக்கிறது என்றால் இதன் உண்மையை அறியாது செல்லலாகாது.

ஆமாம், நான் ஒரு பெருந்தவறு செய்தேன்! எனக்கு ஏன் இத்துணைப் பொன்னும் மணியும். வேண்டாத ஒன்றை—எனக்குத் தேவை யில்லாத ஒன்றை—தேவை என்று எண்ணிக் கொண்டு, ஏன் அவற்றை நான் சுமந்து வர வேண்டும்? பறவை யெனத் திரியும் புலவர் எனப் பேசிக் கொள்கிறோமே. பறவைக்கு இதுபோன்ற பற்று உண்டா? பிறகு ஏன் நான் அதைச் சுமந்தேன். தன்னந் தனியளாய்ச் சுற்றித் திரியும் எனக்கு இந்தத் தொல்லையேன்? சென்றவிட மெல்லாம் உணவுக்கு இத்தமிழ் நாட்

டில் பஞ்சமில்லை. பிறகு வேறு என்ன வேண்டும் எனக்கு. என் பொருள் போனதும் ஒரு வகை நல்லது தான். அந்த மட்டும் அந்தக் கள்வர்கள் இந்த அளவோடு எனக்கு அறிவுறுத்தினார்களே!

ஆனால், பாரி நாட்டில் இந்தக் கொள்ளை நடப்பது எனக்குப் பிடிக்கவில்லை. என்னைப்போல் எத்தனை பேர் இந்தக் கள்வர் கையில் அகப்பட்டுக் கவலையுற்றனரோ. ஆகவே உடனே திரும்பிச் சென்று எப்படியும் பாரிக்கு இக்கொடுமைகளை எடுத்துரைத்து இனியாவது கொள்ளையும் கொலையும் நாட்டில் நிகழாதவாறு பார்த்துக் கொள்ளச் சொல்ல வேண்டும். எந்த நாட்டில் கொள்ளையும் கொடுமையும் மலிந்துள்ளதோ, அந்த நாடு வேறு வகைகளில் பெரு நலன்கள் பெற்றிருந்தாலும் பயனில்லை. ஒரு குறையுமற்ற பாரியின் பறம்பு நாட்டிலே இச்சிறு குறை காண என் மனம் கவல்கின்றது. ஆம், உடனே திரும்பிச் சென்று பாரி மன்னனுக்கு இந்தக் கொடுமையை எடுத்துரைத்து, மேலும் இவ்வாறு நடைபெறாதபடி தடுத்தல் வேண்டும்.

(திரும்பிச் செல்கின்றார்.)

## காட்சி 4

பாரி : (புன்சிரிப்போடு அமர்ந்திருக்கின்றான். பக்கத்தில் கபிலர் இருக்கின்றார். தூரத்தே ஔவை வருகிறார்.)

யாரது? ஔவையாரா வருவது? புலவர் பெருமானே, அவர்கள் இன்னும் ஊருக்குச் செல்லவில்லையா? அதோ வருகிறார்களே.

**கபிலர் :** ஆம். அவர்கள்தான். ஆனால் அவர்கள் முன்னமே ஊருக்குப் புறப்பட்டுச் சென்றுர்களே. (அருகில் வர) வாருங்கள், வாருங்கள். உட்காருங்கள்.

**ஔவை :** உட்காருகிறேன். ஒரு முக்கியமான பொருளைப் பற்றிப் பேசிச் செல்லவே உங்களிடம் வந்தேன். நீங்கள் இருவரும் ஒன்ருயிருப்பது நன்ருகிவிட்டது. (உட்காருகிருள். இருவரும் அமருகின்றனர்.)

**பாரி :** என்ன அப்படிப்பட்டது? ஆமாம், தாங்கள் கொண்டுசென்ற பொருள்கள் எங்கே?

**ஔவை :** பொருள்களா? அவை யாருக்குத் தேவையோ அவர்களைச் சென்று சேர்ந்தது. அது பற்றித்தான் நானும் உங்களோடு பேசவந்தேன்.

**கபிலர் :** அம்மையே, என்ன இது? தாங்கள் சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லையே.

**ஔவை :** அப்பா, நான் நீங்கள் கொடுத்த பொன்னையும் பொருளையும் எடுத்துக்கொண்டு போகும் வழியில் நடந்த ஒரு செயல் பற்றிக் குறிப்பிடவே இங்கு வந்தேன். உன் பறம்பு மலைச்சாரலிலுள்ள இனிய காட்டு வழியே நான் நடந்து கொண்டிருந்தேன். எங்கிருந்தோ மூன்று வேடுவர் வந்து என்னிடம் ஏதேதோ பேசினர். என்னிடம் உள்ள பொருளை அவர்கள் எப்படியோ அறிந்திருக்கத்தான்வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் ஏன் என்னிடம் வரப் போகிருர்கள்.

**பாரி :** அந்தோ. பிறகு?

**ஔவை :** பிறகு என்ன? வந்தவர்கள் ஏதேதோ பேசி என்னிடமிருந்த அந்த முடிச்சைக் கொள்ளைகொண்டு சென்றுவிட்டனர்.

**கபிலர் :** என்ன, கொள்ளை கொண்டா? இப்பறம்பு நாட்டிலுமா கொள்ளை நடக்கிறது? பாரி ஆளும் நேரிய ஆட்சியிலுமா கொள்ளை? இல்லை, இதில் ஏதோ சூது கலந்திருக்கிறது. ஆராயத்தான் வேண்டும்.

**பாரி :** (புன்சிரிப்போடு) பெரியீர்! மன்னிக்க வேண்டும். எனது நாட்டிலும் கொள்ளை நடக்கிறது என்பதை என்னாலேயே நம்பமுடியவில்லையே. அன்னாய், வருந்த வேண்டா. நான் எப்படியும் கொள்ளைக்காரரைக் கண்டுபிடித்து உங்கள் முன் கொண்டுவந்து நிறுத்து கிறேன்.

**ஔவை :** எனக்கு இதுபற்றி ஒன்றும் வருத்தம் இல்லை. ஆனால் உனது அறநாட்டிலும் இம்மறநெறி இன்னும் வாழ்கிறதே என்பதை எண்ணித்தான் நான் வருந்து கிறேன். நாடு நாடாக இருக்கவேண்டுமானால் எல் லோரும் எல்லாச் செல்வமும் எய்த வழிகாண வேண் டும். தனி ஒருவனும் உணவில்லை என்று வாடலா காது. இவையெலாம் நீ அறிந்தவையே. முல்லையின் வாட்டங்கண்டதும் தேரைக் கொடுத்த உனக்குப் பிற உயிர்களின் வாட்டத்தை நான் விளக்க வேண்டிய தில்லை. மன்னா, எனினும் இக்குறை தோன்றிய கார ணத்தையும் நீ ஆராயவேண்டும்.

**பாரி :** அன்னாய், கபிலர் பெருமானே, மன்னிக்க வேண் டும். இக்கொள்ளையை நான் விட்டுவிடவில்லை. ஆராய்ந்து, அன்னையார் வருவதன் முன்பே கொள்ளை செய்தவரைக் கொள்ளைப் பொருள்களுடன் கொண்டுவந்துள்ளேன். (பணியாளனைப் பார்த்து)

அப்பா அந்த மூன்று கொள்ளைக்காரரையும் அழைத்து வா. (மூன்று கொள்ளைக்காரரும் முடிச்சுடன் முகங்கவிழ்ந்து முன் வந்து நிற்கின்றனர்).

**பாரி :** அம்மையீர், இவர்கள் தானே தங்களது முடிச்சைக் கொள்ளை அடித்தவர். இதோ இதுதானே தங்கள் முடிச்சு.

**ஔவை :** ஆகா! பாரி மன்னு! நின் கொற்றம் வாழ்வதாக! எப்படி நீ இக்கொள்ளையை அறிந்து அவர்களைக் கைப்பற்றியதோடு பொருளையும் நான் வந்து கூறுவதற்கு முன் கொண்டுவந்து விட்டாய். உன் அறமே அறம். இத்துணைத் திறம்பட ஆணை செலுத்தும் நீ அக்கொள்ளை அடியோடு நாட்டிலேயே கால் கொள்ளாத வழித் தொலைத்துவிட்டால் எவ்வளவு நன்ருக இருக்கும்.

**கபிலர் :** பாரி மன்ன! இது என்ன செயல்? எனக்கும் ஒன்றும் விளங்கவில்லையே?

**பாரி :** அன்னய், புலவரே! இதற்கெல்லாம் காரணம் நானே.

**கபிலர் :** நீயா? எப்படி?

**ஔவை :** குடிகள் குற்றத்தை தன்மேற்கொள்ளும் கொற்றவனன்றோ பாரி. எனவே, அக்குற்றத்தையும் தன்மேல் ஏற்றிச் சொல்கின்ருன். உன் நேரிய வழி அறிந்தேன். ஆமாம், இவர்கள் எப்படி அகப்பட்டார்கள்.

**பாரி :** அன்னய், இதற்கு நானே காரணம் என்று கூறினேன். ஆம், என் நாட்டில் மறந்தும் இதுபோன்ற கொள்ளைகள் நடக்காது என்று உறுதி கூறுகிறேன். ஆனல் இந்தக் கொள்ளைக் கூட்டத்திற்கு நானே

தலைவன். அன்னாய், மன்னிக்க வேண்டும். தாங்கள் என்னோடு இன்னும் சில காலம் இருங்கள் என்று வேண்டியும் விரைந்து புறப்படவே இந்த ஏற்பாட்டினைச் செய்தேன். வழியில் தங்கள் பொருளைப் பறித்து வந்தால், தாங்கள் எப்படியும் திரும்பிவந்து அறமுரைத்து, இன்னும் சில காலமாவது தங்குவீர்கள் என்ற உறுதியோடு நானே இக் கொள்ளைக்கு ஏற்பாடு செய்தேன். இதோ நிற்பவர் வேறு யாருமல்லர். தங்களைக் கொள்ளை கொள்ள யாரை அனுப்புவது. இந்த மூவரில் இவர் எனது அமைச்சர். அவர்கள் இருவரும் சேனைத் தலைவர்கள். (மூவரும் மேல் உடை களைந்து இயற்கைத் தோற்றத்தோடு வணங்குகின்றனர்.) இவர்களையே தங்களிடம் அனுப்பினேன். நான் செய்வது தவறு என்பதை அறிவேன். என்றாலும் உங்களைவிட்டு நீங்க விரும்பாத என் ஆசையினால் அவ்வாறு செய்தேன். புலவர் பெருமானே! இதுபற்றித் தங்களிடம்கூட ஒன்றும் கூறவில்லை. என்னை மன்னிக்க வேண்டுகிறேன். தாங்கள் இத்தகைய செயலுக்கு ஒருப்படமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். என்றாலும் என் அவாவினால் இக்கொடுந் தொழிலைச் செய்தேன். அன்னாய், தாங்கள் கொடுக்கும் தண்டனை எதுவாயினும் ஏற்றுக் கொள்கிறேன். (விழுந்து வணங்குகிறான். ஔவையார் தூக்கி நிறுத்தி)

**ஔவை :** அப்பா. உன் அன்பின் எல்லை கண்டேன். அந்த அன்பின் ஆழத்தை அறியாத நான் உடனே புறப்பட்டது எனக்கு வருத்தத்தை அளிக்கின்றது. உன் அருமைச் செல்வியரோடு இன்னும் சில நாள் இருப்ப

தாக இதோ முடிவு செய்துவிட்டேன். புலவர் பெரு மானே, உமது மன்னன் அன்பே அன்பு.

**பாரி :** அன்னையீர் தாங்கள் இன்னும் சில நாள் இருப்பதை எண்ண மகிழ்கின்றேன். பெருமானே, நம் வாழ்வு இன்னும் சிறப்புற்றது. அன்னய், தாங்கள் அந்தப் புரம் சென்று என் அருமை மகளிரோடு இருக்க வேண்டுகிறேன்.

**ஔவை :** நல்லது, அப்படியே செய்கிறேன். (போகிறார்)

**பாரி :** புலவர் பெரும! தங்களைக் கலக்காது செய்த இச் செயலை மன்னிக்க வேண்டுகிறேன்.

**கபிலர் :** மன்னிக்க என்ன இருக்கிறது? இச் செயல் உலகம் உள்ளளவும், நீ தமிழ் மீதும், தமிழ்ப் புலவர் மீதும் கொண்ட அன்பையன்றோ காட்டிக் கொண் டிருக்கும். நல்லது, நான் சென்று வருகிறேன். (இருவரும் பிரிகின்றனர்.)

## நான்காம் அங்கம்

### காட்சி 1

(சேர, சோழ, பாண்டியர் மூவரும் பறம்பு மலையை முற்றுகையிட்டிருக்கின்றனர்.)

**சோழன் :** நண்பரே, முற்றுகை இவ்வளவு நாட்களுக்கு நீடிக்குமென்று கருதவில்லையே. என்ன கடினமாக இருக்கிறது?

**சேரன் :** ஆம், நான்கூட இப்படியிருக்குமென எண்ண வில்லை. ஏதோ இன்னும் சில நாட்கள் முயலலாம்.

**பாண்டியன் :** முயல்வது என்ன? எப்படியாவது அவனை முறியடித்து, பறம்பு நாட்டையும், அவன் மக்களையும் கைப்பற்றாது நான் செல்லப் போவதில்லை என்பது

உறுதி. நீங்கள் மட்டும் இன்னும் சில நாட்கள் என்னுடன் சளைக்காமல் முயன்றால் வெற்றி பெறலாம்.

**சேரன் :** ஆமாம், இத்துணை நாட்கள் நாம் முற்றுகையிட்டிருக்கிறோமே. வெளியிலிருந்து ஒரு பொருளும் உள்ளே செல்லவில்லையே. இத்தனை பேருக்கும் எப்படி உணவு முதலியன கிடைக்கின்றன. அதை எண்ணினால் பெரும் வியப்பாக இருக்கிறதே!

**சோழன் :** வியப்புக்கு வழி இல்லை. இந்தப் பறம்பு மலை நல்ல இயற்கை வளம் வாய்ந்தது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கே எல்லாப் பொருள்களும் விளையும் போலும்.

**பாண்டி :** அதுமட்டுமல்ல, நண்பரே. நாம் நாள்தோறும் எவ்வளவோ பறவைக் கூட்டங்களைக் காண்கிறோமே! அவைகள் வாயில் நெற்கதிர்களைக் கொண்டு செல்கின்றனவே. அவையும் ஒரு வேளை உணவுக்குப் பயன்படுகிறதோ என்னவோ!

**சோழன் :** இருக்கும். அரணுள் இருக்கும் காலத்தில் உணவு சேர்க்கும் முறையில் அதுவும் ஒன்றுதானே.

**பாண்டி :** நண்பர்களே, இதோ இத்தனை நாட்கள் ஆகிவிட்டன என்று கவலாமல் உடனே நம் மூவர் சேனைகளையும் ஒருமுகப்படுத்தித் தாக்கச் சொல்ல வேண்டும். உங்கள் சேனைத் தலைவர்களுக்கு உடனே ஆணையிடுங்கள். அவர்களுக்கு என்னென்ன வேண்டுமோ அத்தனையும் நான் கொடுக்கக் காத்துக் கிடக்கிறேன். நண்பர்களே! இடையில் விட்டுச் செல்லும் எண்ணத்தை மட்டும் மறந்து விடுங்கள். ஒரு பெண் காரணமாகப் பெருவேந்தர் மூவரும் ஒரு சேரப்

படையெடுத்தும், முற்றுகையிட்டும், பயனற்றுத் திரும்பிவிட்டனர் என்று உலகம் நம்மைப் பழிக்கும் என்பதை மனதில் எண்ணிப் பாருங்கள். சற்றும் தளராது முற்றுகையை முடுக்குங்கள். நமக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அதோ என் நாட்டிலிருந்து வந்து சேர்வதற்குத் தகவல்கள் முன் எச்சரிக்கையாகவே வந்துவிட்டன. இனி உணவு பற்றியும் கவலையில்லை.

**சோழன் :** ஆமாம், எல்லாம் சரிதான். எப்படி உள்ளே செல்வது என்பதே புரியாத புதிராகவன்றோ இருக்கிறது. ஒரு நல்ல அரணப்பா இது! அகழி இல்லை. சுற்றுக்காவல் இல்லை. எப்படியோ இந்த மலை அவனுக்கு ஏற்ற இயற்கை அரணாக அமைந்துவிட்டது.

**சேரன் :** எல்லாம் அவன் கொடுத்து வைத்ததுபோலும். முடியுடைவேந்தர் இருக்கின்ற இந்தத் தமிழ் நாட்டிலே மூலை முடுக்குகளிலெல்லாம் நம் நாடுகளிலும் கூட நம்மை விட்டு, இவனைப் புகழ்வார்களா மக்கள். அத்துடன் இவன் அருகிலேயே பெரிய புலவன் ஒருவன்—கபிலன்—எப்போதும் அமர்ந்திருக்கிறான். நம் சபைகளுக்கு நல்ல கவிகள் இல்லையே என நாம் ஏங்கியிருக்க, இப்படி ஒரு சிறு தலைவனிடம் பெரும் புலவராகிய கபிலர் இருக்கிறாரே.

**பாண்டி :** இல்லை. அவர்கூட அன்று வந்த அறிவரை மனம் மாற்றி யிருக்கலாம். விரைவில் முற்றுகை முடிந்தால் அந்தப் புலவரையும் கூடக் கட்டிப் பிடித்துப் பழி வாங்கலாமே.

**சேரன் :** என்ன எண்ணமிது? புலவரைக் கட்டிப் பிடிப் [illegible]தா. அவர் இந்நேரம் எந்தப் பக்கமாக ஓடி

விட்டாரோ. புலவர் போருக்குப் புறங்காட்டி ஓடுபவ ரன்றே.

**சோழர் :** என்ன நண்பர்களே, இப்படி அறியாது பேசு கிறீர்கள். நம் நாட்டுப் புலவர்தம் சிறப்பு நீங்கள் அறியாததா? எத்தனைப் புலவர்கள் போர்க்களத்தில் வந்து சந்து செய்திருக்கின்றனர். எத்தனைப் புலவர் கள் தூது சென்று பெரும் போர்களைத் தடுத்திருக் கின்றனர். தமிழ்ப் புலவர்கள் எதற்கும் அஞ்சாத ஆண்மையாளர் என்பதை மறந்து விட்டீர்களா? இப் பாரியின் இந்தச் சிறந்த பாதுகாப்புக்குக் கபிலர் கூடக் காரணமோ என நான் ஐயுறுகின்றேன்.

**பாண்டி :** ஆம், சோழர் சொல்வது உண்மையாகக் கூட இருக்கும். ஆகவே உள் புகுந்ததும் முதலில் புலவ ரைத்தான் கட்டிப் பிடிக்க வேண்டும்.

**சோழன் :** நண்பரே அந்த எண்ணம் மட்டும் வேண்டாம். புலவர் புகழுக்கு ஏங்கிக் கிடந்த பாண்டியன் மரபில் வந்த உங்களுக்கு ஏன் இந்தக் கொடுமையான எண் ணம். சரி முதலில் முற்றுகை முடியட்டும். பிறகு பார்த்துக் கொள்வோம். (மதில்மேல் கபிலர் உலவு கிருர்.)

**பாண்டி :** யாரது! அதோ யாரோ இவ்வளவு ஆண்மை யுடன் நம் அம்புக்கும் அஞ்சாது மதில் மேல் உலவு கின்றனரே.

**சோழன் :** அவர்தான் கபிலர். புலவரே, வணக்கம்.

(கபிலர் வணங்குகிருர்)

**கபிலர் :** ஐயா, தாங்கள் யார்?

**சேரன் :** புலவரே, நாங்கள் யார் என்று தெரியவில்லை

**கபிலர் :** தெரிந்தால் யார் என்று கேட்பேனு?

**சோழன் :** நாங்கள்தான் தமிழ் நாட்டு முடியுடை மூவேந்தர்கள். நான் சோழன். இதோ இவர் சேரர். அவர் பாண்டியர்.

**கபிலர் :** ஆ, அப்படியா. உங்கள் மூவரை ஒருசேரக் காண்பதுவே ஒரு பெரு வியப்பாக உள்ளதே. ஆமாம், மூவரும் ஒன்று சேர்ந்து இங்கே என்ன செய்கிறீர்கள்?

**பாண்டி :** என்ன, தெரியாததுபோல் கேட்கிறீர்கள்? எல்லாம் இப்பறம்பு மலையைப் பிடித்து உங்களையும் கைது செய்து கொண்டு போவதற்குத்தான். (சோழன் அவன் வாயைப் பொத்துகிருன். கபிலர் சிரிக்கிருர்.)

**கபிலர் :** பாண்டி மன்னு, நீ உன் ஆணவத்தால் கெடுகின்ருய். கொண்ட மனைவி யிருக்கப் பாரி மகளிரை மணம் பேசியதே குற்றம். இன்றோ அவன் மலையை முற்றுகையிடத் தொடங்கிவிட்டாய். நல்ல காரியங்கள் செய்வதற்குத் தமிழ் நாட்டில் ஒற்றுமையில்லாவிடினும், இதுபோன்ற கொடுமை செய்வதற்கு நீங்கள் மூவரும் ஒன்றுபட்டீர்கள் போலும்.

**பாண்டி :** என்ன சொன்னீர்? போதும், உங்கள் வாயை மூடுங்கள்.

**கபிலர் :** நான் என் வாயை மூடத்தான் போகிறேன். நீங்களும் முற்றுகையை முடித்து ஊருக்குத் திரும்பத்தான் போகிறீர்கள்.

**பாண்டி :** நண்பர்களே, என்ன ஆணவம் இந்த நாடோடிப் புலவருக்கு. உடனே முடிக்குங்கள். சில மணி நேரத்தில் பறம்பு தவிடு பொடியாவதைக் காட்டுங்கள்.

**கபிலர் :** நீங்கள் செயலாற்றுவதில் எவ்வளவு வீரர் என்பதை இத்தனை நாட்களாகப் பார்த்து விட்டேனே.

**பாண்டி :** என்ன ! எங்களால் ஒன்றும் முடியாதென்று சொல்லுகிறீர்கள், இதோ பாரும்.

**கபிலர் :** பார்க்கிறேன், சிலமணி நேரத்தில் நீங்கள் திரும்பிச் செல்லும் காட்சியைப் பார்க்கத்தான் போகிறேன். முடி சூடி நாடு புரக்கும் மூவேந்தர்களே ! உங்களுக்கு அவ்வளவு எளிதாகப் பறம்பு நாடு கையகப் படாது. மற்றும் அந் நாட்டு முன்னூறு ஊர்களையும் பரிசிலர் பெற்றுவிட்டனர். இக் குன்று மட்டும் உண்டு. அதை வேண்டுமானல் நீங்கள் பரிசாகப் பெறுங்கள். (சற்றுச் சிந்தித்து) என்ன ஆழ்ந்து எண்ணுகிறீர்கள். முடியுடை மன்னராகிய நமக்கே இப் பறம்பின் முற்றுகை அரிதாயின் வேறு யாரால்தான் இப் பறம்பைக் கைக்கொள்ள முடியும் என்று எண்ணுகிறீர்களா ? நாமே வெற்றி பெறுது திரும்பிவிட்டால் பின் யார்தான் இப்பாரியின் கொட்டத்தை அடக்கிக் குன்றைக் கைக்கொள்வது என்ற எண்ணமா உங்களுக்கு? நீங்கள் உங்கள் ஆயுள் முழுதும் முற்றுகையிட்டாலும் இப் பறம்பைக் கொள்வது அரிது. ஆனல் ஒரு பாடும்-பெண் மிக எளிதாகத் தன் பாட்டால் இப் பறம்பைப் பரிசாகக் கொள்வாள்.

**பாண்டி :** புலவரே-. அவ்வளவு ஆணவம் வேண்டாம். எப்படியும் இந்த முற்றுகையில் நாங்கள் வெற்றிபெற்றே தீருவோம். வெற்றி யில்லாவிட்டாலும் வீழ்ந்தே மாளுவோம். பிற நெறி அறியாத் தமிழ் மரபு எங்களுடையது என்று உங்கட்குத் தெரியாது போலும்.

**கபிலர் :** அரசர்காள், தமிழர் நெறியை நான் நன்கு அறிவேன். ஆனல் இப்படிக் கொண்டவள் இருக்க மற்ரெருத்தியை மணம் பேசுவதும், மகள் மறுத்தால் எல்லோரும் சேர்ந்து கொண்டு படையெடுப்பது மாகிய இந்த முறை தமிழ் மரபின் பாற் பட்டது தானே? (மூவரும் முகம் கவிழ்கின்றனர்.) அரசர் பெருமக்களே, நீங்கள் ஏன் இப்படி வீணுகக் கவலை கொள்ளவேண்டும். நீங்கள் எத்தனை நாள் முற்றுகை யிடினும் இப் பறம்பைக் கொள்ளமுடியாது. ஆகா, என்ன, மரந்தோறும் யானைகள், புலந்தோறும் தேர்கள். ஐயோ பறம்பைக் கொள்ளுவதற்கு இத்துணை ஆரவாரம் எதற்கு? என்னைக் கேட்டால் நான் மிக எளிதாக ஒருவழி உங்களுக்கு உணர்த்தி யிருப்பேனே.

**பாண்டி :** அப்படியா, இப்போதுதான் சொல்லுங்களேன்.

**கபிலர் :** சொல்லுகிறேன் கேளுங்கள். பாரியின் பறம்பு மலை பகைவர்களுக்கு அவ்வளவு எளிதாகக் கொள்ள முடியாதது. அல்லது முற்றுகை யிட்டாலும் என்றும் சளைக்காதது. இந்த மலை வெளியிலிருந்து நாங்கள் ஒன்றும் எதிர்பார்க்கமாட்டோம். உழவாலன்றி, இயற்கையாகவே எங்கட்கு நால்வகை உணவும் கிடைக்கும். மலைவளம் பெருக்கும் மூங்கில் நெல்லும், இனிய பலாப்பழமும், வளமிகுந்த வள்ளிக்கிழங்கும், தித்திக்கும் தேனும் நாங்கள் என்றும் பெற்று வாழும் இனிய உணவுப் பொருள்கள்.

இத்தகைய வளமார்ந்த பறம்பு மலையை உங்கள் பெரும் படையோடு நீங்கள் மூவிரும் ஒரு சேரக் கைக் கொள்ள நினைப்பின் அது முடியாது.

கொள்ளும் வழி. ஆம். அதுதானே உங்களுக்கு வேண்டும். உடனே போரை நிறுத்துங்கள். புறப் படுங்கள் உங்கள் நாடுகளுக்கு. பிறகு உங்களுக்கு உரிமையான மகளிரை அழைத்துக் கொண்டு திரும்பி வாருங்கள். நீங்களும் உங்கள் மகளிரும் பாணர்களா கவும் பாடினியராகவும் ஆடிப்பாடி இம்மலை அடி சார்ந்து, மன்னனை அடைந்து, அவனிடம் பிச்சை கேட்டீர்களே யாயின் அவன் இப்பறம்பு மலையே யன்றி வளமார் நாட்டையும் ஒருசேர வழங்குவன். என்ன சரிதானே! சொல்லுங்கள் சீக்கிரம்.

**பாண்டி :** என்ன இது? இதுவா வழி. நாங்களென்ன பிச் சைப் பயல்களா? நண்பர்களே, பார்த்தீர்களா அந்தப் புலவன் செருக்கை? எப்படியும் அவன் கொட்டத்தை அடக்கித்தான் தீர வேண்டும்.

**கபிலர் :** அப்பா, கோபம் வேண்டாம். உள்ளதைத்தான் சொன்னேன். இன்றில்லாவிட்டாலும் என்றைக்கா வது நீங்கள் அப்படி வரத்தான் போகிறீர்கள். அன் றைக்கு நாடும் குன்றுமட்டு மன்றோ; அவன் தன்னையே உங்களுக்குக் கொடுப்பான். நல்லது, உங்களோடு பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. சென்று வருகிறேன். (மதிலிலிருந்து மறைகின்றார்)

**பாண்டி :** நண்பர்களே, அப்புலவனது வாய்த்துடுக்கைப் பார்த்தீர்களா! நம்முடைய பெருமையென்ன? அந்த அற்பப் பாரியின் சிறுமை என்ன? நாம் நம் உரிமை மகளிர் பின் வரப் பிச்சைப் பாட்டு பாடிச் செல்ல வேண்டுமாமே! அதை உரைக்கத்தான் அவனுக்கு எவ்வளவு உள்ளூறம்! என்ன எண்ணுகிறீர்

கள்? சிந்தனை பிறகு; செயலில் இறங்குவோம். முயன்று முடுக்கி, பறம்பைக்கொண்டு, அவர்களைச் சிறைப்பிடித்து, அன்று இக்கபிலனை நம்முன் அழைத்து பழி வாங்கலாம். உடனே உங்கள் சேனையைப் போரின் முற்றுகைக்கு முடுக்குங்கள்.

**சேரனும்**
**சோழனும்** } (உளமில்லையாயினும்) இதோ, உம் விருப்பம் போல.

## காட்சி 2

**பாண்டி :** என்ன இத்தனை நாட்களாகியும் ஒரு துளியும் பயன்பெறவில்லையே. இனி என்ன செய்வது? அந்தப் புலவன் சொன்னபடி யல்லவா ஆகிவிட்டது. நண்பர்களே, இனிச் செய்வது என்ன?

**சோழன் :** செய்வது என்ன இருக்கிறது? நான் அப்போதே நினைத்தேன். நம்மால் ஒன்றும் நடைபெறுது என்று. கபிலர் அவ்வளவு திண்மையாகச் சொல்லிய பின்னும் நாம் முற்றுகையிட்டது நம் அறியாமையை அன்றோ காட்டுகிறது. அன்று அவர் சொல்லியபடி யாவது திரும்பிச் சென்றிருந்தால் புலவர் வாய்மொழிப்படி நடந்தோம் என்ற புகழாவது உண்டாகியிருக்குமே.

**சேரன் :** அது பற்றி இப்போது எண்ணிப் பயன் என்ன? நடந்தது நடந்து விட்டது. இனி மேல் செய்ய வேண்டுவது பற்றியல்லவா சிந்தை செய்யவேண்டும்.

**பாண்டி :** ஆம், அதுதான் நானும் எண்ணிக் கொண்டிருக்கிறேன். எப்படியும் இப்பறம்பு மலையை நாம் கொள்ள வேண்டும். பாரி, கபிலர் இருவர் தம் கொட்டங்களையும் அடக்க வேண்டும்.

**சோழன்** : இன்னுமா அந்த எண்ணம்! அது இனி நடவாத ஒன்று.

**பாண்டி** : ஏன் அப்படி! அந்தப் புலவன் சொன்னனே. அப்படியாவது செய்து பார்த்து விட்டால்?

**சேரன்** : எதைச் செய்து பார்ப்பது?

**பாண்டி** : ஆடியும் பாடியும் செல்லும் அந்த முறை.

**சோழன்** : என்ன, பாண்டி மன்னரே! இப்படி உங்களையும் மறந்து நீங்கள் பேசுவீர்களென்று நான் நினைக்கக் கூடவில்லை. நாள்தோறும் பல்வேறு புலவர்களுக்கு வரிசை வழங்கும் நீங்களா மற்றவனிடம் மண்டியிட்டுப் பிச்சை கேட்கப் புகுவது. மிக நன்றாக இருக்கிறது உங்கள் செயல். என்ன சேரரே அது தங்கள் உடன் பாடு பெறுமா?

**சேரன்** : நன்று சொன்னீர். அதனினும் கேவலமானது உலகில் வேறு என்ன இருக்கிறது? ஈயென இரத்தல் இழிந்தது என அறிந்தும் அத்தொழிலைக் கொள்வதா? நான் ஒருபோதும் உடன்படேன்.

**பாண்டி** : என்ன நண்பரே, இதுதானா உங்கள் உதவி. உங்கள் உடன் துணையாலல்லவா இவ்வளவு தூரம் நான் போர் புரிய முனைந்தேன். அந்தோ இன்று என்னைத் தாங்கள் கைவிடுவீர்களானல் நான் என்னுவது? கொண்ட கருத்தை முடிக்காது மாள்வதா? அந்தோ, எடுத்த காரியம் யாவினும் வெற்றி பெறும் இப்பாண்டி மன்னன், ஒரு குறுநிலத்தானேடு தோற்ரேடினன் என்ற பின்னும் வாழ்வதா? நண்பர்களே! எப்படியாவது அவன் நாட்டையும் மலையையும் கைக்கொள்ள உதவுவீர்களென எதிர் நோக்குகிறேன்.

**சோழன் :** நாங்கள் செய்ய வேண்டிய உதவிகளெல்லாம் செய்தாகிவிட்டன. இனிமேல் எங்களால் என்ன செய்ய இயலும் ?

**பாண்டி :** அந்தப் புலவன் சொன்னனே, அப்படியே நாம் மூவரும் சென்று பறம்பு மலையைப் பெற்ருல்...?

**சோழன் :** என்ன யாசித்தா ? சீச்சீ ! இதனினும் இழுக்கு வேறு என்ன உண்டு ?

**பாண்டி :** இப்போது தோற்றுத் திரும்பிச் சென்ரும் என்பதைக் காட்டிலும் வேறு இழுக்கு என்ன வந்து விடப் போகிறதோ ?

**சேரன் :** சோழரே ! சற்று சிந்தித்துப் பார்த்தால் பாண்டியர் சொன்னது சரி என்றுதான் படுகிறது. மானம் இழந்து இப்படித் தோற்றுத் திரும்புவதைக் காட்டிலும் பிச்சை ஏற்றுவது வெற்றி கொண்டோம் என்ற பெயர் மேலல்லவா ! அது மட்டுமன்று. நாம் பிச்சை எடுத்தோமென்ற பெயர் நமக்கு வராது. நாமென்ன ஏழைகளா பிச்சை எடுப்பதற்கு? மூவேந்தரும் சூட்சியில் வல்லவர் என்றும், பகைவனைச் சூழ்ந்து வென்ருர் என்றும் பேரும் புகழும் பெறலாம். இதற்கெல்லாம் நம் நிலையில் அரசர்க்கு இன்றியமையாது வேண்டப்படும் சூழ்ச்சி என்ற பெயரே பொருந்தும். ஆனல்,

**பாண்டி :** ஆனல் என்ன ?

**சேரன் :** புலவன் சொன்னபடி போவதாயின் உரிமை மகளிர் எங்கே ?

**பாண்டி :** அது பற்றிக் கவலை வேண்டாம். நான் எனது காதற் பரத்தையர் மூவரை வரச் சொல்லுகின்றேன்.

**சோழன் :** ஏன், அப்போது நீங்கள் பிச்சை எடுப்பது என்றுதான் முடிவு செய்துவிட்டீர்களோ?

**பாண்டி :** நண்பரே, அதற்குப் பிச்சையென்று பெயரல்ல. ஆம், சேரர் கூறியது போன்று அதற்குச் சூழ்ச்சி என்றுதானே பெயர்.

**சேரன் :** ஆம், சோழரே. இத்துணையும் நடந்த பிறகு, இங்கள் கணக்கில் முற்றுகையிட்டும் வெற்றிபெறுது திரும்புவதிலும் அந்தச் சூழ்ச்சியில் வென்றால் உண்மையில் நம் பேரும் புகழும் ஓங்கும்.

**சோழன் :** என்ன, உன் மதியுமா இப்படி மங்கவேண்டும்? சேரனே, யாருக்கும் தலை வணங்காத் தறுகண்மையில் வாழ்ந்த தமிழன் இன்று மற்றவன் முன் வணங்கிப் பிச்சை கேட்பதா? வேண்டாம் நண்பர்களே, என்னை விட்டு விடுங்கள்.

**பாண்டி :** விட்டு விடுவதா? இப்படி நம்மினவர்களை நட்டாற்றில் விட்டுச் செல்வதுதான் தமிழர் அறமோ! நண்பரே, சேரர் கூறியபடி இது பிச்சையாகாது. சூழ்ச்சியாகவே முடியும் என்பது உறுதி. உரிமை மகளிருக்கும் நான் காதற்பரத்தையரை ஏற்பாடு செய்கின்றேன். அவர்கள் நம் பின் வருவார்கள்.

**சேரன் :** ஆம் சோழரே, இவ்வளவு தூரம் வந்து இனி இதற்குப் பின்னடையலாகாது. அந்த முயற்சியில் நாம் திட்டமாக வெற்றி பெறலாம். அதன்பின் உண்மையில் நம் புகழ் ஓங்கும். என்ன, உன் காவிரிக் கரையிலே, உன்னால் பெரும் பயன் பெறுகின்ற உன் குடிகள் உன்னை விட்டு, இந்தப் பாரியைப் புகழ்வதைக் கேட்டுமா உன் உள்ளம் துடிக்கவில்லை. அத்தகைய புகழ்ப் பகைஞனாகிய இந்தப் பாரியை

ஒழிக்கவல்லவா நீங்கள் முதலில் பணியாற்ற வேண்டும். ஆற்றுனீர்கள். ஆனல் எந்த வகையி லாவது அது முற்றுப் பெற வேண்டாமா? இப்படியே தோல்வியுற்று நாடு திரும்பின், உங்கள் நாட்டு மக்கள் இன்னும் அதிகமாகவன்றோ பாரியைப் புகழ்வார் கள்.

**சோழன் :** ஆம், அதுவும் ஒரு வகையில் சரிதான். சரி உங்கள் விருப்பப்படி செய்யுங்கள். நான் உடன் வருகிறேன்.

**பாண்டி :** அப்படிச் சொல்லுங்கள்! சோழரே. பாரியை ஒழித்து விட்டோம் என்பது உறுதி.

**சேரன் :** அதுமட்டுமல்ல, பாரிமகளிர் பாண்டி மன்னரின் அந்தப்புரத்துக்கு வந்துவிட்டார்கள் என்பது உறுதி.

**பாண்டி :** போதும் உங்கள் விளையாட்டு. மேல் நடப்ப தைப் பார்ப்போம்.

## காட்சி 3

(மூவேந்தரும் பாணர் உருவம் தாங்கி, பறம்பு நாட்டி னுள் புகுந்து பாரியின் மாளிகைக்கு வருகின்றனர். மூவர் மகளிர் பின்னே ஆடிப்பாடி வருகின்றனர். தூரத்தே மாளிகையின் உச்சியில் கபிலர் இவர்கள் வருவ தைக் காண்கின்றார்.)

**கபிலர் :** ஆ! யார் அவர்கள். ஆம், அவர்கள் தான். சற்றும் ஐயமில்லை. ஐயோ, இப்படியும் பாணர் உருவத் தோடு அவர்கள் வருவார்களென்று நான் எதிர் பார்க்க வில்லையே. நானல்லவா அவர்களுக்கு இவ்வாறு வரவேண்டும் என்று சொன்னேன். ஐயோ! இனி அவர்கள் நினைத்ததை முடித்துவிடு வார்களே. என்ன கொடுமையிது? அவர்கள் கேட்டால்

பாரி தன்னையும் கொடுத்து விடுவானே. பிறகு என்னு வது? நாம் சென்று பாரியிடம் இவர்களின் வஞ்சனை யைச் சொல்லலாமா? அந்தோ, சொன்னாலும் அவன் கேட்கமாட்டானே. அவனுக்கென்ன உயிர் வெல் லமா! தன் உயிர் போயினும் போக என்று தன்னையே அவர்களுக்கு வழங்கிவிடுவானே. முடிவு! அவர்களால் கொல்லப்படுவதன்றி வேறு என்ன! அந்தோ! இந்த மூவேந்தர்க்கும் இப்படியா மதி கெட்டுப் போகவேண்டும். உயர்ந்த ஒழுக்க நெறி தவறாது, செம்மை நிலை திரியாது, அறங்கோலாக அவனியாண்ட அறத்தமிழ் மன்னர் குலத்தில் இத்தகைய வஞ்சனையாளர்களா பிறக்கவேண்டும்? சொல்வதென்ன வெனவே தெரியவில்லையே. அரச அவை சென்று பாரிக்கு இவர்களின் வஞ்சனையைச் சொல்லலாமா? பயன்? அவன் தன்னைக் கொடுத்து விடுவானே. இனி செய்ய வேண்டியது ஒன்றுதான் போலும். அவனைப் பரிசாகப் பெற்று, அவனை அழித்த பின் அந்த வெறியர்கள் கோட்டையுள் புகுந்து அந்தப்புரத்திலுள்ள பாரி மகளிரையும், பிற பெண்களையும் கைப்பற்ற நினைப்பார்கள். ஆகவே உடனே ஓடிச் சென்று, அந்தப் பதர்கள் உள் நுழைவதன் முன் அவர்களை எப்படியாவது அப்புறப் படுத்தி நாட்டுக்கு வெளியே கொண்டு செல்ல வேண்டும். அந்தோ, அரசியார் அழைத்தாலும் வாரார்களே. எப்படியும் பாரி இறப்பின் அவர்களும் தீப் பாய்வார்களே. பிறகு அவர் மகளிர் நிலை! ஆம். அவர்களை நான்தான் காத்துத் தக்கவருக்கு மணம் செய்விக்க வேண்டுமா? அந்தோ, ஒன்றும் விளங்க

வில்லையே. சரி, ஓடிச் சென்று ஆவனவற்றை அரசியோடு ஆராயலாம். அரசனைக் கண்டு செல்லலாமா? ஆ! பாரி! உன் முடிவு இப்படி ஆகும் என நான் எண்ணவில்லையே? உயிர் கொள்ளும் இயமன்களாக மூவர் வருவதை நீ அறியாய். (ஓடுகிறான். மூவரும் செல்கின்றனர்.)

**சேரர் :** நண்பரே! அப்படி அவன் நம்மிடை அகப்பட்டானானால், என்ன செய்வது?

**பாண்டி :** அப்படியே அங்கேயே வாளுக்கு இரையாக்கி வஞ்சம் தீர்த்துக்கொண்டால் போகிறது.

**சோழன் :** ஐயா, என்ன பதட்டம்! அது நடைபெறக் கூடிய காரியமா! சற்றே சிந்தியுங்கள்.

**சேரர் :** பின் என் செய்யலாம் சொல்லுங்கள்.

**சோழன் :** செய்வது என்ன இருக்கிறது? அவனையும் நம்மோடு அழைத்து வந்து நாட்டுக்கு வெளியே நம் சேனைகள் இருக்கும் இடம் சென்று, பிறகு அவனைக் கைதியாக்கிச் சிறையிடை வைக்கலாம்.

**பாண்டி:** ஆம். அதுவும் நல்லதுதான். அங்கேயே ஏதாவது தவறாக நாம் செய்தால் மக்கள் நம்மை விடமாட்டார்கள். அவனை அழைத்துச் சென்று நம் சேனையிடையிருத்திக் கைதி செய்து, பிறகு நம் சேனையை உடன் அனுப்பி நாட்டை நமது என்று முரசறைய வேண்டும். பிறகு அந்தப்புரத்திலுள்ள மகளிரையும், பிற மந்திரி முதலானவர்களையும் கைதி செய்ய வேண்டும்.

**சோழன் :** ஏதாவது செய்யுங்கள். ஆனால் யார் உயிருக்கும் இன்னல் விளைத்தலாகாது. பாரியின் உயிர் நீக்கப்படுமானால் இந்தப் பெருங்களம் உள்ளமட்டும் நம்முடைய பழி நீங்காது என்பதை எண்ணிக் கொள்

ஞங்கள். அவன் தன்னை வழங்குவான் என்பது உறுதி. அந்தச் செம்மை முறைக்கேற்ப அவனை நாம் நடத்த வேண்டும்.

**சேரன் :** ஆமாம், அவ்வாறே செய்யலாம். முதலில் அவனைச் சிறை செய்து பிறகு நாட்டைத் தமதாக்கி மகளிரையும், மற்ற மந்திரி முதலியவர்களையும் சிறை யிட்டு நம் புகழ் நாட்டுவோம். என்ன பாண்டியரே!

**பாண்டி :** ஆம். அதுவே சரி. நாழியாகிறது. வாருங்கள் அரச மண்டபத்துள் செல்வோம்.

(பாரி அரச மண்டபத்துள் வீற்றிருக்கிறர். மூவரும் உரிமை மகளிரோடு பின் செல்கின்றனர்.)

**பாரி :** வாருங்கள். வாருங்கள். புலவர் பெருமக்களே! உங்கள் வரவு நல்வரவாகுக.

**மூவரும் :** வாழி மன்னு! வளர்க நின் கொற்றம்!

**பாரி:** வாருங்கள், உட்காருங்கள், (உட்காருகின்றனர்.)

**ஒருவர் :** கொடைவள்ளால்! உங்கள் புகழ் நாடெங்கும் கேட்பதைத் தாங்கள் அறியீர்கள். எங்கெங்கு மக்க ளினம் உண்டோ அங்கெல்லாம் பாரியின் புகழ் பரவியுள்ளது. ஓரறிவுயிராகிய முல்லைக்குத் தேரீந்த திறன் பாடாத புலவரில்லை. பேசாத புலவரில்லை. வாழ்த்தாத நாவில்லை. அரசே! உங்களைக் காண நாங்கள் எங்கள் குடும்பங்களுடன் வந்திருக்கின்றேம். உம் புகழ்பாடி எம் தலைவியர் ஆடல் புரிவர். அதைத் தங்கட்குக் காட்டவே இங்கு வந்துள்ளோம். தங்கள் திருவுள்ளம் எதுவோ.

**பாரி :** நல்லது, உங்கள் பாட்டெல்லாம் கேட்கப் போரா வம் உள்ளவன் தான் நான், எனினும் என் புகழ்

பற்றி நான் கேட்க வேண்டுமா? அதைவிடுத்து வேறு பாடுங்கள், கேட்போம்.

**ஒருவர் :** அரசே! எங்கள் விருப்பம் அது. நாங்கள் பாட, எங்கள் மகளிர் ஆட அதைக் கண்டு தாங்கள் மகிழ, அந்த மகிழ்ச்சியில் நாங்களும் கலந்து கொள்ள வேண்டுமென்பதே எங்கள் எண்ணம்.

**பாரி :** சரி, உங்கள் விருப்பப்படி ஆகட்டும்.

(மூவரும் பாடுகின்றனர். மகளிர் ஆடுகின்றனர்.)

**பாரி :** மிக அழகாக உள்ளன பாடலும் ஆடலும். நம் நாட்டில் உங்களைப் போன்ற 'நல்லாரால் கலை என்றென்றும் வாழும் என்பது உறுதி. புலவர் பெரு மக்களே! தமிழர் தம் சிந்தையைக் கவரும் இந்த ஆடலும் பாடலும் உங்கள் வாழ்வை வளம்படுத்துவதாக. தாங்கள் இன்று எனக்குப் பெருமகிழ்வை விளைவித் தீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும்? என்னால் ஏதேனும் உதவி செய்யக் கூடுமாயின் செய்கிறேன். பல நாள் இங்கேயே தங்கி வேண்டிய பொன்னும் மணியும் பெற்றுச் செல்லுங்கள்.

**பாண்டி :** அரசர் பெரும! நாங்கள் நாடோடிகள். நாங்கள் எங்கும் தங்குவது கிடையாது. நாங்கள் வேண்டும் பொருளைக் கொடுத்தால் பெற்றுச் சென்று விடுகிறோம்.

**பாரி :** அப்படியா, நல்லது. என்ன வேண்டுமோ அதைக் கேளுங்கள்.

**பாண்டி :** கேட்டால் பின்னர் இல்லை என்னுது தர வேண்டும்.

**பாரி :** புலவரே! யார் முன்னின்று பேசுகிறீர்கள் என்பதை மறந்தீர்கள் போலும். என்னைப் பற்றிய தற் பெருமையல்ல இது! இப் பாரி தான் கொடுத்த

வாக்கை மீறுன். தன் உயிரேயாயினும் பிறர் கேட்டால் தயங்காது ஈவான் என்பது உறுதி. இதோ, என்னையே கேட்டாலும் நான் உங்களுடன் வருகிறேன்.

**பாண்டி :** ஆம், அதுதான் எங்களுக்கு வேண்டும். நீங்கள் எங்களுடன் வரவேண்டும். வேறு ஒன்றும் வேண்டாம்.

**பாரி :** என்றும் உங்களோடு இருக்கவா? சிறிது நேரத்திற்கா?

**பாண்டி :** என்றும்.

**பாரி :** ஆகா! என்ன மகிழ்ச்சி! உங்களைப் போன்ற புலவர்களோடு இருப்பதினும் சிறந்த மகிழ்ச்சி வேறேது? இதோ புறப்பட்டு விட்டேன். ஆம், அமைச்சரே! கபிலர் எங்கே?

**அமை :** அவர் ஏனோ இன்று வரவில்லை.

**பாரி :** நான் அவரைக் கண்டுவிட்டு வரலாமா?

**பாண்டி :** உடனே எங்களோடு வரவேண்டும்.

**பாரி :** அப்படியா நல்லது. அமைச்சரே, புலவருக்கும், மனைவி மக்களுக்கும் இதோ நான் இந்தப் பாணரோடு செல்கிறேன் என்று சொல்லுங்கள். மற்ற வற்றைத் தாங்களே பார்த்துக் கொள்ளுங்கள். நான் இவர்கள் இசைவு பெற்று விரைவில் திரும்பிவருவேன். வராவிட்டாலும் வருந்த வேண்டாம். கடமை யாற்றுங்கள்.

**பாண்டி :** சரி, வாருங்கள் போகலாம்.

**பாரி :** இதோ! இதோ!

## காட்சி 4

**கபிலர் :** அன்னுய், இதுபோன்று நடக்குமென்று நான் எண்ணவேயில்லை. எவ்வளவு விரைவில் மன்னர் தன்னை அவர்களிடம் ஒப்படைத்தார். நான் இங்கு வந்து உங்களுக்கெல்லாம் முன் எச்சரிக்கையாக இருக்கச் சொல்லிவிட்டுச் செல்வதற்குள்ளாக வன்றோ அவர் அப்படி அவர்களுடன் புறப்பட்டுச் சென்று விட்டார். பாவிகள் அவரைச் சிறையிலாவது வைத்திருக்கலாகாதா? அம்மா, எண்ணவும் நெஞ்சம் அஞ்சுகிறது. தமிழ் மக்கள் மரபிலே வந்த பாதகர்களா அவர்கள்! எப்படித்தான் மன்னனைக் கொல்ல மனம் வந்ததோ, அந்தோ! அக் கொடியர் கையில் அவர் எப்படித்தான் வருந்தினரோ? அம்மா அதைப் பற்றி எண்ணி பயன் ஒன்றும் இல்லை. அதோ, அவர்கள் மலையின் எல்லைக்குள் புகுந்துவிட்டார்கள் என்ற செய்தி நமக்கு எட்டிவிட்டது. இனி அவர்களைத் தடுப்பார் யார்? அன்பால் ஆண்ட அண்ணலின் போர் வீரர் அக் கொடியவர் கையில் விரைவில் சிக்கிக் கொள்வார். அம்மா, இந்த நிலையில் தாங்களும் இங்கு இப்படி வருந்தி உட்கார்ந்து இருப்பது நல்லதன்று. உடனே இவ்விடத்தை விட்டுப் புறப்பட வழி காண வேண்டும். பாண்டியன்-பாவி-நேராக இங்கேதான் வருவான். நம் மக்களை அவன் மணம் பேசிக் கொடாத காரணத்தாலன்றோ இக்கொடுமையெல்லாம். எனவே, அன்னுய், தாங்கள் அம் மக்களை அழைத்துக்கொண்டு உடனே எங்கேயாவது வெளியே செல்லத்தான் வேண்டும்.

**தேவி :** புலவர் பெருமானே, தாங்களா இவ்வாறு பேசு

வது. கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என்று அவன் அடியில் வீழ்ந்து அப்போதே இறந்த கற்புடைப் பெண்டிர் பிறந்த நாட்டில் நானு மறைந்து ஓடிச் சென்று உயிர் வாழ்வது? வாழ்விலும் தாழ்விலும் ஒன்றென ஒன்றிய இவ்வுளத்துடன் நானு வெளியே சென்று வேறொருவரை அண்டிப் பிழைப்பது? பாராண்டு, கொடை மடம் பட்டுத் தன்னையே கொடுத்துத் தரணியை என்றென்றும் புகழால் ஆண்ட பாரி மன்னன் மனைவியா மாற்று உடை பூண்டு, மறைந்து, மானமிழந்து, மற்றவர் நாட்டில் மதியிழந்து வாழ்வது? புலவரேறே! இந்தச் சுடு சொல் சொல்ல உங்கள் தூய உள்ளந்தான் எப்படி இடம் கொடுத்தது? கற்புக் கடம்பூண்ட காரிகையர் வழியில் வந்த, இந்தத் தமிழ்ப் பெருங்குடியில் பிறந்த நானு தீப்புகப் பின்னடைவது. புலவரே! ஆம், நீங்கள் சொல்வது உண்மைதான். பாரி இறந்தான் என்பதைக் கேட்ட உடனே இறந்து மறைந்திருக்க வேண்டிய நான் இதோ இதுவரை உங்களோடு உரையாடிக் கொண்டிருக்கிறேனே. ஆம், இதுவரையில் வாழ்ந்த உயிர் இனியும் தான் வாழட்டுமே என்று எண்ணுகிறீர்கள் போலும். அதுவும் ஒரு முறை தான். ஆம், நான் தமிழ் நாட்டுக் கற்புடைப் பெண்டிர் வரிசையிலிருந்து வழுக்கி வீழ்ந்தவளானேன். தன்னுயிர் கொண்டு மன்னுயிர் தேடிச்சென்ற மாபெரும் பத்தினிப் பெண்டிர் மரபில் வந்த நான் தவறிழைத்தேன். புலவரேறே, அறிந்தேன் என் பிழையை. மன்னன் இறந்தான் என்பதைக் கேட்டும் நான் சாகாதிருக்கின்றேனே. போதும் புலவரே!

என்னைக் கொல்லாதீர்கள். இதோ! இதோ! இதோ! நான் தீயிடை மூழ்க ஏற்பாடு செய்துவிட்டேன். அதோ அங்கே பாருங்கள்! அன்பெனும் கடவுள் கொழுந்துவிட்டெரிகின்றான். என்ன எண்ணுகிறீர்கள்? உங்களுக்கு முன்னமே இச் செய்தியை ஒற்றரால் அறிந்த நான் அதற்கு ஏற்பாடு செய்துவிட்டேன், இனி! இனி!

**கபிலர் :** அன்னையீர்! தங்கள் கற்பின் திறம் என்றும் கறைபடியாது என்பதை நான் அறிவேன். ஆயினும் அருமை மக்கள், அதோ அழுது ஏங்குகின்றார்களே, அவர்களுக்கு யார் துணை? அன்னை, தந்தையைப் பிரிந்த வெந்துயரில் உருகும் அந்த இளஞ் செல்வியர்களுக்காவது தாங்கள் பரிவு காட்ட வேண்டாமா? தன்னையே உலகுக்குக் கொடுத்துத் தரணி யாண்ட ஒரு மன்னவன் குலம் இப்படியும் பாழ்பட்டுப் போக வேண்டுமா? ஆகா! இதையெல்லாம் நான் கண்டு கொண்டிருக்க வேண்டுமா? அந்தோ? நான் என்ன புலவன்? பாரியின் அருகிருந்தும், அவனைப் பாவிகள் கையில் ஒப்படைத்தேனே? இதோ இந்த இளங் கொழுந்துகள் இனி எப்படி வாட இருக்கின்றனவோ! அம்மா! அதோ வருகிறார்கள் அவர்கள். அவர் தம் முகம் நோக்கியாவது இரங்குங்கள். இன்னும் சில நாள் அவர் பொருட்டாகவாவது தாங்கள் வாழுங்கள். (மக்கள் இருவரும் அருகில் வருகின்றனர்.)

**மக்கள் :** அம்மா! அம்மா! என்ன கொடுமை இது? இப்படி வஞ்சகம் செய்து பாவிகள் அப்பா உயிரைப் பறிப்பார்கள் என்பதை அறியாது போனோமே. அம்மா அம்மா! நீங்களும் என்னசெய்யத் துணிந்தீர்கள்?

ஆ! அதோ தீ கொழுந்துவிட்டெரிகின்றதே. ஆமாம், நெருப்பே நன்கு எரி. நீ எவ்வளவு வெம்மை உடையவனாயினும் அந்தப் பாவிகள் உள்ள வெம்மை உன்னைச் சுட்டெரிக்கும். உளத்தே நஞ்சுவைத்து, வெருப்படக்கி, மானமின்றி விறலியோடு வந்தார்களே பாவிகள்-பாராளும் மன்னர்கள். அம்மா! அம்மா! என்ன இது நீங்களுமா தீப்பாயப் போகிறீர்கள்? ஐயோ! பிறகு எங்கள் கதி. சரி நாங்களும் உங்களுக்குமுன் அந்த அங்கியங் கடவுளுக்கு இரையாகிவிடுகின்றோம். இதோ! (இருவரும் ஓடுகிறார்கள், கபிலர் இருவரையும் அணைக்கின்றார்.)

கபிலர்: என் அருமைக் குழந்தைகளே! இது என்ன கொடுமை. நீங்கள் இவ்வாறு செய்தல் சற்றும் முறையன்று. தந்தையார் இறந்ததும் அன்னையார் உடன் தீப்பாய்தல் முறை. அதுதான் இயற்கையும் கூட. ஆனல் இளங் குழந்தைகளாகிய நீங்கள் ஏன் இந்த எண்ணம் கொண்டீர்கள்? இனி இந்தப் பறம்பு மண்ணில் உங்கள் வாழ்வு இல்லை என்பது உண்மைதான். என்றாலும் விரிந்த உலகம் உள்ளது உங்களை ஏற்றுக்கொள்ள. நீங்கள் பெரும் துன்பத்தினும் என் துன்பம் இன்னும் பன்மடங்காகவே உள்ளது. எனினும் பொறுக்க வேண்டியவனாகியுள்ளேன். செல்வியீர்! உங்கள் இளஞ் செவ்விகள் எவ்வகையினும் வாட்ட முறலாகாது. நான் எப்படியும் உங்களுக்குத் தக்க இடம் தேடி மணம் செய்து வைப்பேன். உங்கள் மகிழ்ச்சியைக் காணும் வரை எனக்கு வேறு வேலை ஏது?

தேவி: அன்பின் புலவீர்! நான் மேலும் மேலும் பேசிக்

கொண்டிருக்க விரும்பவில்லை. இனியும் காலம் தாழ்ப் பின் அந்தப் பாவிகள் கையில் அகப்பட நேரும். அவர்கள் கையில் நாம் சிக்கின் நம் நிலை என்னுகும் என்பது தாங்கள் அறிந்த ஒன்றுதானே. அந்தோ! இந்த இளங்கொழுந்துகள் எப்படியாவது தப்பி வாழ வேண்டும் என விழைகின்றேன். இவர்களை அந்தப் பாவிகளின் கண்களில் சிக்க விடாதீர்கள். புலவரே, உங்களுக்கு நம் மலையிலுள்ள பல்வேறு கொடி வழிக ளெல்லாம் தெரியும். அவர்கள் கண்ணில் படாதபடி உடனே, புலவர் பெரும, இவர்களை அழைத்துக் கொண்டு செல்லுங்கள். நான் இதோ இந்த அக்கியங் கடவுளின் மடியில் வீழ்ந்து விளையாடப் போகிறேன். எப்படியும் அவர் உயிரைச் சென்று பற்றுவேன்.

**கபிலர்:** (அழுதுகொண்டே) அன்னய், நான் பறம்பு மலைக்கு வரும்போது மகிழ்ச்சி உணர்வோடு வந்தேன். அந்தோ! இதன் இறுதி இப்படி முடியும் என்று சற் றுக்கூட எண்ணவில்லையே. அருமைச் செல்வங்களே! இனி நீங்கள் எங்கெங்கு செல்லவேண்டுமோ. இனி யும் எண்ணிக் கொண்டிருப்பதில் பலனில்லை என் பதை அறிகின்றேன். கோட்டை வாயிலுக்குள் பகை வர் புகுந்து விட்டனர் போலும். உடனே புறப்பட்டுத் தான் ஆகவேண்டும். ஆகவே ஒருநொடி காலம் தாழ்த்தினும் காரியம் கெட்டுவிடும். ஆனல், அன் னய்! அன்னய்!

**தேவி:** புலவர் பெருமானே! நீங்களுமா இப்படி உள முடையவேண்டும். இதோ நான் தீப்புகப் போகின் றேன். அதற்கு முன்னே நீங்கள் செல்லவேண்டும். இந்த நிகழ்ச்சியைக் கண்டபின் செல்வியர் கலங்குவர். பிறகு தயங்குவர். அதற்குள் ஒருவேளை பகைவர்

உட்புகினும் புகுவர். பிறகு நீங்கள் தப்புவது கடிது. (செல்வியர் இருவர் கையையும்பிடித்து) செந்தண்மை பூண்டொழுகும் அந்தணீர்! இதோ, இவர்கள் உங்கள் அடைக்கலம். தக்கவரைக் கண்டு, இவரை மணவியராக்கிப் பின் உங்கள் வழி வாழுங்கள். உடனே புறப்படுங்கள். இனி ஒரு நொடியும் காலம் தாழ்த்த வேண்டாம். (கலங்கும் கன்னியரைப் பார்த்து) அரசில் வளர்ந்த அருமைச் செல்வியர்களே, வருந்தாதீர்கள். எது வரினும் கலங்காது ஏற்று நிற்பவர் தமிழர். அஞ்சாமை வேண்டும். அறிவு சான்ற உங்களுக்கு நான் அதிகம் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. புலவர் பெருமானே, உடனே புறப்படுங்கள். (அனைவரும் கண்ணீர் விடுகின்றனர்) புலவரே, நீங்கள் இம்மாளிகையின் எல்லையைக் கடப்பதன் முன்னமே என் உயிர் பிரிந்திருக்கும். பிறகு அந்தப் பாபிகள் வந்து என்ன செய்யினும் என்? உடனே புறப்படுங்கள். (கபிலர், செல்வியர் இருவரையும் கையில் பற்றிக் கொண்டு செல்கின்றார். மூவரும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே செல்கின்றனர்.) (அரசியார் வளர்த்த தீயின் அருகில் செல்கின்றனர்.)

அரசி: பறம்பு மலையே! பாரியாண்ட பெருநிலமே! அருமைத் தமிழ் நாடே! பரந்த உலகமே! இதோ, உன்னை விட்டு நான் பிரிகின்றேன். என் ஆருயிர்க் காதலன் அரிய உயிரைத் தேடி என்னுயிர் செல்கின்றது. உடல் பிறந்த இடத்திற்கே வருகின்றது. அருமைத் தமிழ்நாடே! செல்லுமுன் உனக்கு ஒரு வார்த்தை. இதோ, எனக்கும் என் குடும்பத்துக்கும் இத்துணைக் கேடு செய்தவர் யார் என்று நினைக்கிறாய்? ஆம், உன்

மண்ணிலே பிறந்து உன்னை ஆள்கின்ற ஒப்பற்ற மூவேந்தர்கள் தாம் இந்தக் கொடுமைக்கு முதற் காரணர். ஆம், நாடாளும் நல்லவர்தான் இக்கொடுமை இழைக்கின்றனர். அறத்தாறு வாழவேண்டியவர் தாம் அறம்திரும்பி, நெறிகோடி இந்த அல்லல் இழைத்தனர். வாழ்வை நாட்டுக்கு வழங்க வேண்டியவர்தான் இத்தாழ்வை எங்கள் குடிக்குத் தேடித் தந்தனர். எழிலார் தமிழ்நாடே. இதற்கெல்லாம் காரணம் என்ன? ஆம். என் தலைவன்—தன்னை மறந்த பாரி — கொடைமடம் பட்ட கொற்றவன் புகழ் ஏணியின் உச்சியில் சென்றான் என்பதன்றோ! எத்துணைப் பெருஞ் செல்வம் பெற்றினும் தம் புகழ் மூவரும் புகழும் சேர்ந்து— இந்த ஒரு குறுநில மன்னன் புகழ் முன் நிற்கவில்லையே என்ற பொறாமை தானே காரணம். ஆமாம். அறிந்தேன். அத்துடன் காமவெறி தலைக்கேறிய கசடர் அவர்கள், ஒரு மனைவியைக் கொண்டு இல்லறம் வாழத்தெரியாத அவர்கள், மறுமணம் பேசி என் மக்களை விரும்பினர். இந்தக் கொடுமைக ளெல்லாம் ஒன்று சேர்ந்தல்லவா வள்ளல் வாழ்க்கையை மாய்த்தது. பறம்பு பாழாயிற்று. குடி குலைந்தது. மக்கள் நிலைகுலைந்து செல்லுமிடமறியாது தேங்கிச் செல்கின்றனர். புனலழுக்கற்ற புலவரும் பொருமி அழ ஏற்பட்டது.

என் அருமைத் தமிழ்நாடே, உனக்கு ஒரு எச்சரிக்கை. உலகில் நீ தான் மிகப்பழைய மண் என்று பெருமை கொள்கின்றாய். ஆனால், உன் நாட்டில் நடவாத போர்கள் இல்லை. நாட்டுப் போர்களில் பல உடன் பிறந்தவர்களுக்குள்ளே தான் நடக்கின்றன.

ஒரு தாய் வயிற்றுச் சேயர்தான் போர்கள் நடத்து கின்றனர். உள்ளத்தை இழக்கின்றனர். பிறகு உள்ளம் ஒடிக்கின்றாய். தமிழனாய், அத்தனைக்குக் காரணம் அவர்களை ஆட்டிப் படைக்கும் பொறாமை சுயநலம் என்பனவே. தமிழன் இவற்றின் அடிமை யாக உள்ளவரையில் நீ தலைதூக்கமாட்டாய். ஆயி ரம் ஆயிரம் ஆண்டுகள் கழியினும் இந்தப் பொறாமை யும் சுயநலமும் இங்கு வாழும் வரையில் உன்வாழ்க்கை கானல் நீர்தான். தன் உடன் பிறந்தவன் நல்ல பெருமை பெற்று புகழுற்றோங்கப் பொறாத தமிழன் நாட்டில் வாழ்கின்றானே! உடன்பிறந்த உற்றரெல் லாம் வாடினும் தான் மட்டும் உயர்ந்தால் போதும் என்று எண்ணும் தமிழன் இதோ உலவுகிறானே. அந்தச் சுயநலத்துக்காக, பொறாமை வெறிக்காகத் தன்னையும் மனிதத் தன்மையையும் மறந்து பல கேடு கள் இழைக்கின்றானே. இதோ மண்ணாண்ட மன்னர் வாளிற்கொள்ளவழியில்லாராய் பாணராகி வந்த னரே. அப்பப்பா அவர்களுக்குக் கொல்லத்தான் எப் படி உளம் வந்ததோ! தமிழ்நாடே இவர்கள் பரம் பரை நாட்டில் இனி வாழ்ந்து கொண்டுதான் இருக் கும். அவர்களிடம் நீ எச்சரிக்கையாக இருக்கவேண் டும். என்று அந்தச் சுயநலக் கூட்டம் பொறாமைக் கும்பல் உன்னை விட்டு—உன் மடியைவிட்டு ஒழிகின் றதோ அன்றே நீ உயர்வாய். அன்றே நீ உரிமை நாடாகி விளங்குவாய். அதுவரையில் ஏதாவது ஒன் றிலே எப்படியாவது அந்நியருக்கு அடிமைப்படத் தான் வேண்டும். அதோ பகைவர் முரசம் அண்மை யில் கேட்கிறது. இனியும் நான் காலம்கழிக்கலாகாது. வருகிறேன். தமிழ் நாடே! வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு வாழும் மாந்தர் இனத்தை வளர்ப்பாய்.

இப்பாவியர் மூவேந்தர் குடி வாழ்வை வரலாற்றளவே வைத்து விடு. இக்கொடியவர் ஒழிந்து நாட்டில் அமைதியும் அன்பும் பெருக வழிசெய். நல்லவர் நாடொறும் பெறுக ஆக்கப்பணி யாற்று. அருமைத் தமிழ்நாடே! புலவர் பெருமானே! செல்வியரே! பெரியோர்களே! மக்களே! சென்று வருகின்றேன். அதோ என் அருமைப் பாரி! என்னை அழைக்கிறீர்களா......இதோ. இதோ வந்துவிட்டேன். (தீயில் மூழ்குகிருள்.)

## ஐந்தாம் அங்கம்

### காட்சி 1.

(தனித்த சோலையில் பாரி மகளிர் தங்கியிருக்கின்றனர். கபிலர் சற்று தனித்து உட்கார்ந்திருக்கின்ருர். நிறை நிலா ஒளி வீசுகின்றது.)

**கபிலர் :** என்ன கொடுமையிது? இந்த இளம் பெண்கள் இப்படியா இன்னலுற வேண்டும்! இந்தக் கொடுமை இவர்களுக்கு வரும் என்று நான் கனவிலும் கருதவில்லையே. அதோ தூரத்தே தெரிகிறதே தண்பறம்பு நாடு. எவ்வளவு எழிலோடு அது விளங்கிற்று. இன்றே அது பகைவர் கையிலகப்பட்டு நிற்கின்றதே. இனி அது சிறக்குமென்று யார் சொல்வர்? இந்நேரம் பகைவர் அதைச் சுட்டுப் பொசுக்கிச் சூரையாடியிருப்பர். அவர்களும் இம்மலையும் நாடும் அழிந்தால்தான் என்ன கவலை? இவை மறைந்தால் பாரியின் பேரும் புகழும் ஒரே வழி மறையும் என்ற எண்ணத்திலே அல்லவா அவர்கள் கொடுமை இழைப்பார்கள்,

அப்பா! அந்தமட்டும் இளம் பெண்களையாவது மீட்டு வந்தோமே. அந்தோ! அவர்தம் ஆசையெல்லாம் எங்கேயோ அடங்கிவிட்டனவே. குடிசையுள்ளே சுருண்டு கிடப்பார்கள் பாவம். அதோ தந்தையின் மலை,

(மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்
வயலகம் நிறையப் பிதிர்ப்பூ மலர்
மனைத்தலை மகவை யீன்ற அமர்க்கண்
ஆமா நெடுநிரை நன்புல் ஆரக்
கோல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல் பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்த்தொடி அரிவையர் தந்தைநாடே) (புறம். 117]

ஆகா தேர்வலம் புரியும் செவ்வியோன் குன்று இன்று இப்படிக் கேட்பாரற்றுக் கிடக்கின்றதே. களிறு கழித்த கவளம் போன்றல்லவா நலன் கெட்டு, வளன் கெட்டு, பிற பயன் எல்லாம் கெட்டு நிற்கின்றது! ஆம் நேரமாகிவிட்டது. நாம் அருவியில் நீராடிவிட்டு வருவோம். (பாரி மகளிரை அழைக்கின்றார்) அம்மா இங்கேயே சற்று இருங்கள், நான் இதோ அருகே தெரியும் அருவியில் நீராடி வந்து விடுகின்றேன்.

**மகளிர் :** புலவர் பெருமானே, விரைந்து வாருங்கள், புது இடத்தில் ஒன்றும் தெரியவில்லை.

**கபிலர்:** ஆம், அறிவேன். இதோ நொடியில் திரும்பி வந்து விடுகின்றேன்.

(கபிலர் செல்கிறார்)

**சிறியவள்:** அக்கா, அதோபார், அந்த நிறைநாட் திங்கள் எவ்வளவு ஒளி வீசுகின்றது.

**பெரியவள்:** தங்காய், அதைக்கண்டு ஏன் உணர்ச்சியை வேறு கிளறுகிறாய்? ஆம் இனிய திங்கள்தான்: ஏன்? நமக்கா அது இனியது. அந்தோ அதை நினைத்தாலும் நெஞ்சம் புண்ணாகிறதே.

**சிறிய:** அக்கா. சென்ற திங்கள் நிறைநாளிலே நாம் நமது மாளிகையில் அப்பா, அம்மாவோடு எவ்வளவு நன்ருக நிலா இன்பத்தைத் துய்த்துக் கொண்டிருந்தோம்.

**பெரிய:** செல்வி! அதை மறுபடியும்நினைக்காதே.அந்தோ அதை நினைத்தாலும் என் நெஞ்சம் வெடித்து விடும் போலன்றோ இருக்கிறது. சென்ற திங்களின் நிறை நாளிலே நாங்கள் இருந்த வாழ்வும், இதே நிறை நாளிலே இன்று நாங்கள் பெறும் அல்லலும் யார் அறிவார்?

(இருவரும் கண்ணீர் விட்டுக் கலங்கும் போது, கபிலர் திரும்பிவருகின்ருர். இருவரையும் வாரி அணைத்து) என் அருமைச் செல்வங்களே! நீங்கள் இவ்வாறு வருந்துவீர்களென்று தெரியும். சிறிது தூரம் சென்ற பின்தான் அதுபற்றிச் சிந்தை செய்தேன். திரும்பி வந்து விட்டேன். குழந்தைகளே, இனி அதுபற்றி எண்ணி வருந்துவதில் பலனென்ன? அம்மா, நாமும் எவ்வளவோ முயன்ருேம். அன்னையை உடன் கொண்டுவர. அது முடியவில்லை. கொடைமடம்

பட்ட மன்னனை எந்த வகையாலும் மீட்டிருக்க முடியாது செல்வங்களே. என்றாயினும் ஒரு நாளைக்கு ஒருவரை ஒருவர் பிரிய வேண்டியதுதானே. அது நமக்கு இந்த முறையில் வந்தது. நடந்தது நடந்துவிட்டது. நான் உங்கள் அருகிலிருக்கும் வரையில் உங்கட்கு ஒரு குறையும் வாராமல் பார்த்துக் கொள்வேன். நண்பனோடு இறக்க நினைத்தபோது உங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணத்தினால்தான் அந்த எண்ணத்தை விடுத்தேன். உங்களைத் தக்க மன்னருக்கு மணம் செய்விக்கும் வரையில் நான் ஓய்வு கொள்ளமாட்டேன். எப்படியும் இன்னும் சில நாட்களில் நான் மன்னர்களையும், குறுநில மன்னர்களையும் காணப்போகிறேன். எப்படியும் உங்கள் இருவருக்கும் நல்ல இடமாக அமையும் என்பது உறுதி. செல்வக் குழந்தைகளே. சிறிது ஆற்றியிருங்கள், காலம் மாறும். வாருங்கள். மாலை கொண்டு வந்த பழங்களை உண்ணலாம். (அழும் இருவரையும் அணைத்தபடியே கொண்டு செல்கிறார்)

## காட்சி 2

**கபிலர் தனிமொழி :** பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது எவ்வளவு தெளிவாகியுள்ளது. பாரி பறம்பு நாட்டை ஆண்டுக் கொண்டிருந்த அந்த நாளிலே அவன் மகளிரை மணம் பேச வந்த மன்னர் எத்தனைபேர்? பாண்டி மன்னன் முதல் பல மன்னர்கள் மகள் கிடைத்தால் போதும் என்று வேண்டிக் கொண்டுதானே இருந்தார்கள். ஆகா! அப்பாரி இருக்கும் போது இந்த இளம் பெண்கள் தான் எத்துணை வகையில் இன்பம் துய்த்திருந்தார்கள். இன்று

கேட்பாரற்று மூலையில் முடங்கிக் கிடக்கும் சிறு பிண்டங்களாக அல்லவோ ஆழ்ந்துவிட்டனர். உற்ற தாய் தந்தையரை இழந்து, பெருவளஞ் சுரக்கும் பறம்பு நாட்டையும் பறிகொடுத்து உற்றுர் ஒருவருமின்றி, இந்தப்புலவனே அடைக்கலமாக வந்திருக்கும் இம் மக்களுக்கு என்னுலானவரை முயன்றும் மணமக்கள் கிடைக்கவில்லையே! என்னைப் பெரும் புலவன் என்று தெரிந்திருந்தும், என்வாய் மொழிக்கு மறுப்பு சொல்லக்கூடாது என்ற உளமிருந்தும், ஏனே இப் பாரி மகளை ஏற்க அச்சிற்றரசர்கள் பயப்படுகிருர்கள். ஆம், அவர்கள் மிகச் சிறியவர்கள், குறுநிலம் ஆளும் கொற்றவர். இவர்களோ மூவேந்தருக்கு முரண்பட்ட பாரிமகளிர். ஒரு வேளை இப்பெண்களைத் தாங்கள் மணந்தால் அதனல் போர் முதலியன வரின் மூவேந்தரை எதிர்ப்பார் யார் என்று அஞ்சி இருக்கலாம். இருக்கட்டும், அதுவும் ஒருவகையில் சரிதானே. விச்சிக்கோன், இருங்கோவேள் என்ற இந்த இருவரிடத்தும் நான் சென்று இரந்தேனே. வேறு யாரிடத்திற்கும் என் வாழ்வின் தேவைக் கென்றுகூட இரக்காத, தலைநிமிர்ந்த என் புலமைத் தன்மையையும்விட்டு 'யானே' பரிசிலன் மன்னும் அந்தணன், என்றும், அந்தணப் புலவன் கொண்டுவந்தனனே, என்றும் சொல்லிச்சொல்லி இரந்தேனே, அவர்கள் இருவரும் ஒருசேர இவர்களை ஏற்றுக்கொள்ள இணங்கவில்லையே. இருவரும் இரு மகளிரையும் ஏற்றுக் கொண்டிருந்தால் இந்நேரம் நான் வாழ்வில் விடுதலை பெற்று, நண்பன் பாரி சென்ற வழியில் நானும் சென்றிருப்பேன். அந்தோ! இம் மகளுக்காக அன்றோ நான் இதுவரை உயிர் வாழ்வது. ஆகா, அவர்கள் இம் மகளிரை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கவலை இல்லை.

இவர்களை அனுதையென்றும், ஆதரவற்றவர்களென்றும் பழித்துரைத்ததை எண்ண எண்ண என் மனம் புண்ணுகிறதே. அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையென்ன. இன்று, அந்தோ! எண்ணவும் நெஞ்சு நடுங்குகிறது, பொருளற்றவர் நாட்டில் வாழமுடியாது என்பது எவ்வளவு உண்மையாகிவிட்டது. அவர்களுக்கு எப்படியும் பொருள் இருந்துத்தானே ஆகவேண்டும்.

நல்ல வேளையாக இத்திருக்கோவலூர் அந்தணர்கள் அவர்களை வைத்து ஆதரிக்க இசைந்தமை என் சுமையில் பெரும் பகுதியைக் குறைத்துவிட்டது. செந்தண்மை பூண்டொழுகும் செம்மை திறம்பா அவ்வந்தணர்க்கு நான் செய்தது என்? செய்யப்போவது தான் என்? பாழ்பட்ட பறம்புமலைத்தலைவன் பாரியின் மகளிர் அவர்கள் என்று கூறியதுதான். என்ன மகிழ்வோடு அவர்களை ஏற்றுக்கொண்டார்கள்! ஆம், இந்தச் சில நாளில்தான் அந்த இளங் கொழுந்துகள் சற்றுத் தெளிவடைந்து காண்கின்றனர். அங்கே அவர்கள் இன்னும் சில காலம் இருக்கலாம். அதற்குள் நான் எப்படியாவது பொருள் பெற்று வந்தாகவேண்டும். இதோ அவர்களுக்கு மணம் ஏற்பாடு செய்துவிடின் நான் நண்பனை நாடி வடக்கிருந்து உயிர்விடுவேன். ஆகவே என் வாழ்நாளுக்குப் பொன்னும், பொருளும் தேவையில்லை. ஆனால், அந்த இளம் பெண்களது வாழ்வை வளப்படுத்தற்கு எப்படியும் பொருள் தேவை தான். அதை நான்தானே தேடித் தருதல் வேண்டும். எங்கு சென்று கேட்பது? (சிந்தித்து) புலவரைப் போற்றும் பொற்பார் குணமுடைய சேர நாட்டு வட பகுதியை ஆளும் செல்லக் கடுங்கோ

லாழியாதன் இருக்கின்றன். அவனிடம் நான் சென்றால் தட்டாமல் வேண்டும் பொருள் கொடுப்பான் என்பது உறுதி. அத்தகைய நல்லவர் ஒரு சிலராவது இருப்பதால்தான் நாடுகாடாகாமல் நாடாக மக்கள் வாழ்வுக்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளது. இவர்களைக் காக்கும் பொறுப்பும் தற்போது சற்றுக் குறைந்திருக்கிறது. ஆகவே, இப்போதுதான் நாம் வாழியாதனைக் காணமுடியும். பெரும் பொருள் பெற்று வந்து அவர் தம் மண விணைக்கு உரியதைச் செய்து முடிக்க வேண்டும். அவர் தம் மணம் முடிந்தது என்ற சொல்லறியின் நான் வடக்கிருந்து வாழ்வை ஒறுப்பேன். உடனே சென்று அவர்களிடம் சொல்லிச் சேர நாட்டுக்குப் புறப்பட வேண்டும். (செல்கிறுர்.)

## காட்சி 3

(தங்கையும், தமக்கையும் தனிமையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர். சிறு தூறல்)

**தங்கை :** அக்கா ! எங்கே நம் புலவர் கூட நம்மை விட்டு விட்டுப் போய்விட்டாரே ! அவர் திரும்பி வருவாரா, வரமாட்டாரா ? போய் நாட்கள் கூட ஆயினவே.

**தமக்கை :** செல்வி! அவரை அவ்வாறு எண்ணுதே. அவர் எப்படியும் உடனே திரும்பிவிடுவார். நமக்காகவன்றோ அவர் சென்றிருக்கின்றுர். பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை என்பதை நீ அறியாயா ? நாம் தந்தையோடு இருக்கும்போது எத்தனை மதிப்போடிருந்

தோம். எவ்வளவு பணியாட்கள்! இன்று இதோ கேட்பாரற்றுக் கிடக்கின்றோமே. ஏதோ இந்த அந்தணர்களாவது இவ்வளவு மனம் இரங்கி நமக்கு இருக்க இடம் முதலியன தந்து காப்பாற்றுகிறார்கள். பெருமன்னரெல்லாம் கூட நம்மைப் பார்க்கவும் அஞ்சும்போது, இப்பார்ப்பன முதுகுடி மக்கள் நம்மை ஏற்று ஆதரிப்பது ஒரு பெருஞ் செயலன்றோ. நமது ஏழ்மை நிலை கருதித்தான் அவர் யாரோ ஒரு தக்கவரிடத்தில் பொருள் பெற்றுவரச் சென்றிருக்கின்றார். சென்று நாட்களாயின. இன்று நாளை திரும்பி வந்து விடுவார். (மழையில் ஔவையார் நனைந்துகொண்டே வருகின்றார்.)

**இருவரும் :** பாட்டி, பாட்டி! இப்படி வாருங்கள். ஐயோ! மழை பெய்கிறதே. நீங்கள் இப்படியும் மழையில் நனைந்து கொண்டு வரலாமா? உள்ளே வாருங்கள். உடம்பு குளிரால் நடுங்குகிறதே. எங்கேயாவது மழைக்குத் தங்கி வரக்கூடாதா?

**ஔவை :** அம்மா! குழந்தைகளே! எங்கே தங்குவது? வழியில் அகப்பட்டுக் கொண்டேன். ஆகவே நடந்து கொண்டே இருந்தேன். வேகமாக நடக்க முடியவில்லை. இந்தக் கோடியில் வந்த பிறகுதான் இந்தச் சிறுவீட்டைக் கண்டேன். குழந்தைகளே! குளிர் அதிகமாக இருக்கிறது. ஆடையோ நனைந்து விட்டது. வேறு ஏதாவது ஆடையிருந்தால் தருகிறீர்களா?

**தமக்கை :** பாட்டி, அதற்கென்ன? செல்வி, ஓடிச்சென்று அந்த நீலச் சிற்றாடையைக் கொண்டு வா. (கொண்டு

வந்து கொடுக்க) எங்களிடத்தில் பெரிய புடவையாக ஒன்றும் இல்லை. இதோ இந்தச் சிற்றுடை இருக்கிறது. ஈரம் புலரத் துடைத்துக் கொண்டு இந்த ஆடையை உடுத்திக் கொள்ளுங்கள். (ஔவை நீலச் சிற்றுடையை உடுத்துக் கொண்டு) அப்பா, குளிர் ஒருவாறு நீங்கிற்று. குழந்தைகளே! உங்களுக்கு பெருஞ் செல்வம் வருவதாக! நீங்கள் தக்க கணவர் மாரோடு நெடுங்காலம் உலகில் வாழ்வீர்களாக! அம்மா, நானும் எத்தனையோ இடத்தில் பேரும் புகழும் பல பரிசுகளும் பெற்றிருக்கின்றேன். இந்தச் சிற்றுடை இப்போது எனக்கு இன்பம் தருவது போன்று எதுவும் தந்ததில்லை. ஆம்.

'பாரி பறித்த பறியும், பழைய னூர்க்
காரி அரத்த கனைகொட்டும்—சேரமான்
வாராயோ என்றழைத்த வார்த்தையும் இம்மூன்றும்
நீலச் சிற்றுடைக்கு நேர்.'

(பெண்கள் இருவரும் கண்களில் நீர் மல்கப் பார்க்கின்றனர்.)

**ஔவை:** அம்மா, என்ன இப்படி இந்தப் பாட்டைக் கேட்டதும் கலங்குகிறீர்கள். அம்மா, நீங்கள் யார்?

**இருவரும்:** புலவர் செல்வமே! எங்களை உங்களுக்குத் தெரியவில்லையா? நாங்கள் யாரென்று உங்களால் அறிய முடியவில்லையா? (அழுகின்றனர்)

**ஔவை:** (இருவரையும் அணைத்து) அம்மா! ஐயோ! உங்களை யார் என்று தெரியவில்லையே. ஏன் இப்படிக் கதறி அழுகிறீர்கள்? உங்களைப் பார்த்தால் நல்ல குடிப் பெண்களாகத் தெரிகின்றதே. உங்

களுக்கு என்ன இடர் வந்தது? என்னே நீங்கள் அறி வீர்களா? அப்படியா? நீங்கள் யார்?

**தமக்கை:** பாட்டி! இன்னும் தாங்கள் எங்களை அறிந்து கொள்ளவில்லையா? ஆம், எப்படி அறிந்துகொள்ள முடியும்? அன்று நாங்கள் இருந்த இன்ப வாழ்வில், எழிலார் செல்வத்தில் எங்களைக் கண்ட கண்கள் இந்த ஏழ்மைக் கோலத்தில் எப்படி எங்களை அறிந்து கொள்ள முடியும்? புலவரே! நாங்கள் அந்தப் பறி பறித்த பாரியின் மக்கள் என்பதைத் தாங்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லையா?

**ஔவை:** ஆ! பாரியின் மக்களா நீங்கள்? (கசிந்து) என்ன கொடுமையிது? உங்களை அங்கு பறம்பு நாட்டில் நான் பார்த்த கோலமென்ன? இன்று காண்கின்ற முறை என்ன! இத்தனை வேறுபாடா! அறிவேன் பாரி வஞ் சிக்கப்பட்டதை. என்றாலும் என் அருமைச் செல் வங்களே, உங்களுக்கு இத்துணை இடர் வருமென்று நான் கனவில்கூட கருதவில்லையே. உங்கட்கு இந்தக் கொடுமையா வரவேண்டும்? இன்னார் இனியார் என்று எல்லார்க்கும் எதையும் வாரிவழங்கிய வள்ளற் றன்மைக்குப் பயன் இதுதானா? தமிழ் நாட்டுத் தனிப் பெரு வள்ளல் பாரியின் மகளிர் இப்படி வாடுவதை நான் பார்த்துக் கொண்டிருப்பதா! அம்மா, உங்க ளோடு வேறுயாரும் வரவில்லையா? பறம்பு மலையை விட்ட பிறகு நீங்கள் இங்கு எப்படி வந்தீர்கள்?

**தமக்கை:** பாட்டி! அது ஒரு பெரிய கதை. தந்தையார் மூவேந்தரால் வஞ்சித்துக் கொல்லப்பட்டபின் தாயும் தீப்புகுந்தாள். புலவர் பிரான் கபிலர் எங்கள் இரு வரையும் அழைத்துக் கொண்டு தனி வழியாகக்

காட்டிடைப் புகுந்து வெளியே கொண்டு வந்து விட்டார். பறம்பு நாட்டு எல்லையைக் கடந்தபின் சில சில இடங்களில் தங்கினேம். பிறகு இங்கு வந்தோம்.

**ஔவை :** ஆமாம். உங்கள் மணம் பற்றிக் கபிலர் ஒரு ஏற்பாடும் செய்யவில்லையா?

(இருவரும் அழுகின்றனர்.)

**ஔவை:** குழந்தைகளே, கவலை வேண்டாம். அவர் முயன்றிருப்பார். இல்லாவிட்டாலும் நான் எப்படியும் முயன்று மணமுடிக்கிறேன்.

**தமக்கை:** பாட்டி ! கபிலர் தம்மாலானவரை எங்கள் மணம் பற்றிப் பெருமுயற்சி செய்தார். இரு சிற்றரசர்களிடம் சென்று எங்களை மணந்துகொள்ளுமாறு வேண்டினர். யாரையும் எதையும் சென்று வேண்டாத புலவர் பெருமான் எங்களுக்காகச் சிற்றரசர் வாயிலெல்லாம் கடந்து மணம் வேண்டினர். விச்சிக்கோன், இருங்கோவேள் என்ற இருவரிடம் சென்று இரந்தார். அவர்கள் எங்கள் ஏழ்மைநிலை கருதியும், மூவேந்தர் பகைக்கு முன் நிற்கவேண்டுமென்று அஞ்சியும் எங்களை ஏற்காது விட்டனர். பொருளில்லாதவராகிய எங்களை மணம் செய்து கொள்ள யாரும் முன்வரமாட்டார் என்பதை அறிந்த புலவர் பெருமான், தமக்கு அறிமுகமான ஒரு மன்னரிடம்சென்று பெரும் பொருள் பெற்று வருவதாகப் புறப்பட்டுச் சென்றர். நல்ல வேளையாக இவ்வந்தண மக்கள் அவரால் அடைக்கலப் பொருளாகக் கொடுக்கப்பட்ட எங்களை ஏற்று இது வரை உணவும் உறையுளும் கொடுத்து ஓம்பி வருகின்றனர். புலவர் பெருமான் சென்றும் நாட்களாயின. அவர் இத்துணைநாள் வந்திருக்கவேண்டும். ஏதோ இன்னும் காணவில்லை.

ஔவை : கண்மணிகளே! கவலை வேண்டாம். இனி உங்கள் மணத்தை முடித்துவைக்கும் பொறுப்பு என்னுடையது. (திரும்பிப் பார்த்து) அதோ கபிலரும் வருகிறாரே. பெரும் பொருளோடுதான் வருகிறார்போல் தெரிகின்றது.

இருவரும் : ஆம், ஆம். புலவர் பெருமானே தான். வாருங்கள், வாருங்கள். எங்களை இத்தனை நாள் விட்டுச் சென்றீர்களே.

கபிலர் : குழந்தைகளே வழியிடை வந்த வருத்தத்தால் தங்கித் தங்கிவர நேர்ந்தது. அன்னாய்! தாங்கள் எப்போது வந்தீர்கள்! வாருங்கள்.

ஔவை : கபிலரே! நானும் சற்று முன் தான் வந்தேன். செல்வியர் வாயிலாக எல்லாவற்றையும் கேட்டறிந்தேன். பாரியின் மகளிருக்கு இத்துணைத் துன்பம் வரும் என்று நான் என்றும் நினைக்கவில்லை.

கபிலர் : அன்னாய், நடந்தது நடந்துவிட்டது. இனி அவர் தம் மணம் பற்றித்தான் ஆவன செய்யவேண்டும். நானும் அதற்கேற்ற பொருள் பெருவதற்கே செல்லக் கடுங்கோலாழியாதனிடம் சென்றிருந்தேன். பெரும் பொருள் தந்தான்.

ஔவை . நல்லது புலவரே! பிறவற்றையும் குழந்தைகள் சொன்னார்கள். இளவிச்சிக்கோவும், இருங்கோவேளும் கூட மறுத்ததை அறிந்தேன். இப்பொருள் இவர் தம் வாழ்வுக்குப் போதும். இதோ நானே முயன்று இவர்கள் மணத்தை முட்டின்றி முடித்து வைக்கிறேன்.

**கபிலர்** : அன்னாய், யாரிடம் இவர்களுக்கு மணம் பேசப் போகிறீர்கள் ?

**ஔவை** : என்ன திருக்கோவலூரிலிருந்து கொண்டா அது பற்றிச் சிந்திக்கிறீர்கள். இதோ இந்நாட்டு மன்னன் காரியின்ற மக்கள் இருவர் உள்ளனரே. அவர்களுக்கு இவர்களை உரிமைத் தலைவிய ராக்குவேன். அவர்களும் வள்ளல் மரபில் வந்தவர்கள். இவர் தம் பொற்புக்கும் புகழுக்கும் ஏற்ப அமைந்த குடியே அது.

**கபிலர்** : அவர்கள் மறுத்தால்?

**ஔவை** : புலவரே ! அவர்களாவது மறுப்பதாவது ! இளமையில் தமது வாழ்வே புலவரால் மீட்கப்பட்டதை அறிவார்கள் அவர்கள். புலவர் சொல்லே அவர் தம் வாழ்வு நூல். இருவரும் மிக நல்லவர். என் சொல்லைத் தட்டமாட்டார்கள். எப்படியும் மணத்தை விரைந்து முடித்துவிடலாம்.

**கபிலர்** : நல்லது, ஆனல் மூவேந்தர் எதிர்த்தால்...?

**ஔவை** : புலவரே, அதுவும் நடவாத ஒன்று. இவர் தம் திருமணத்துக்கு அம்மூவேந்தரையுமே நான் அழைக்கப் போகிறேன். எப்படி வராது போவார்கள் ?

**கபிலர்** : அன்னையே ! நான் என் பெரும் சுமையை இறக்கியவனுனேன். எதிர்பாராது தாங்கள் வந்து இங்கே எங்களுக்கு உடன் துணையாக அமைந்ததை எண்ண எண்ண மகிழ்ச்சி பிறக்கிறது. இனி நான் விடுதலை பெற்றவன் ஆனேன்.

**ஔவை** : ஒரு குறையும் வராது. (செல்வியர் இருவரும் உணவு ஏற்பாடு செய்ய உள்ளே செல்கின்றனர்.)

**கபிலர் :** அன்னய், அவர்கள் மணம்பற்றித்தான் நான் இத்துணை நாள் வாழ்ந்து வந்தேன். இன்றேல் அன்றே பாரியோடு தீப்பாய்ந்தோ, வடக்கிருந்தோ உயிர் விட்டிருப்பேன். இன்று தாங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டீர்கள். ஆகவே எனக்கு விடுதலை தர வேண்டுகிறேன்.

**ஔவை :** என்ன கபிலரே! ஆமாம், விடுதலை பெற்று என்ன செய்யப் போகிறீர்கள்?

**கபிலர் :** வடக்கிருந்து உயிர் துறக்கப் போகிறேன்.

**ஔவை :** வேண்டாம். ஏன் அந்தக் கொடுமை? இவர்கள் மணம் முடிந்தபின் உங்கள் விருப்பம்போல் பரந்த தமிழ் நாட்டில் சிறந்த புலவராக உலவி வரலாமே.

**கபிலர் :** அன்னய், தாங்கள் சொல்வது உண்மைதான். என்றாலும் பாரியோடு பழகிய நட்பின் திறன் அவ்வாறெல்லாம் எண்ணத் தோன்ற வில்லையே. அன்றே அவனேடு மடிந்திருப்பேன். ஆனால், இந்த இளஞ் செல்வியர்தம் மணநலம் காரணமாகத்தான் இதுவரை உழன்றேன். இதோ பெரும் பொருள் கொண்டு வந்திருக்கிறேன். மணம் முடிக்க நீங்கள் உறுதி கொண்டீர்கள். இனி எனக்கு என்னகுறை? நான் வடக்கிருக்கப் போகிறேன்.

**ஔவை :** நட்பின் திறம் போற்றக் கூடியதே. ஆயினும் மணம் முடியும் வரையாவது இருக்கலாகாதா?

**கபிலர் :** அன்னய், நான் விரைந்தே வடக்கிருக்கத் தொடங்கவேண்டும். தாங்கள் விரைந்து மணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள். என் உயிர் பிரிவதற்குள் அவர்கள் மணம் முடிந்தது என்று கேட்டுவிட்டே

இறப்பேன். தாங்கள் உடன் துணை இருக்கும்போது இனி எதற்காக நான் அஞ்ச வேண்டும்?

**ஔவை :** என்றாலும் மணம் முடிந்த பின் உம் செயலை மேற்கொள்ளல் நலமெனக் கருதுகிறேன்.

**கபிலர் :** நல்லது அன்னை, என்றாலும் மக்கள் மனம் தளர்ந்ததுதானே. இதோ, ஆழியாதனிடம் சென்றபோது அவன் என்னை அங்கேயே இருக்குமாறு எவ்வளவோ வேண்டினான். ஒரு வேளை இவர்தம் மணம் முடிந்து அங்கே கூடச் சென்றுத் தங்கி விடலாமா என்றது என் பேதை நெஞ்சம். இனி இந்த மணத்துக்குப் பல மன்னர் வருவர். அவரவர்தம் வாய் மொழி கேட்பின் உள்ள உரம் கெடினும் கெடும். நான் என் நட்பின் கடமையிலிருந்து தவறியவன் ஆவேன். ஆகவே மறுக்காது நான் வடக்கிருக்க உத்தரவு தாருங்கள். எப்படியும் ஒரு திங்களாவது நான் உயிருடன் ஊசலாடிக் கொண்டிருப்பேன். நான் உங்களை வேண்டிக் கொள்வதெல்லாம் அதற்குள் இருவர்தம் மணத்தையும் முடித்துவிட வேண்டுமென் பதுதான். அவர்தம் மணம் முடிந்தது என்பதைக் கேட்டுக்கொண்டே நான் உயிர் துறப்பேன்.

**ஔவை :** நல்லது. அது உமது உளமானால் அப்படியே செய்க. நான் நேரில் சென்று காரி மக்களிடம் மணம் முடித்து மன்னர்களுக்குக் கடிதம் எழுதி விட்டு வருகிறேன். விடியப் பதினெட்டாம் நாள் நல்ல நாள். அன்றே மணம் வைத்துக் கொள்ளலாம்.

(செல்வி வந்து.)

**தமக்கை :** அன்னை, புலவரே! உணவுக்கு வரலாமே,

9658

ஔவை : நல்லது. (அனைவரும் உணவு கொள்ளச் செல்கின்றனர்.)

## காட்சி 4

(காரியின் மைந்தர் இருவரும் பாரி மகளிர் இருவரும் மண மக்களாக வீற்றிருக்கின்றனர். மூவேந்தர் உள்ளிட்ட தமிழ் நாட்டு மன்னர் பலர் மணப்பந்தலில் இருக்கின்றனர். மணம் நடைபெறுகிறது. மணச் சடங்குகள் எல்லாம் நிறைவேறிய பின்பு)

ஔவை : தமிழ் நாட்டுப் பெருந் தலைவர்களே! உங்கள் எல்லோரையும் இங்கு ஒரு சேரக் காணத்தக்க பேற்றை நான் பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்கின்றேன். இதோ உள்ள மணமக்களை வாழ்த்த நீங்களெல்லாம் இங்கு வந்துள்ளீர்கள். மண மக்களைப்பற்றி நான் ஒன்றும் கூறவேண்டியதில்லை. கொடைமடம் பட்டு, தன்னையே கொடையெனக் கொடுத்த பாரிமகளிர் மணப் பெண்கள். மற்றொரு வள்ளல் காரியின் மைந்தர் மணத்தலைவர். அவர்தம் மணம் காணத் தமிழகமே இங்கு திரண்டு வந்திருப்பதை நோக்கி நான் மகிழ்கின்றேன். தமிழ் நாடு இதுபோன்றே என்றும் இருக்கவேண்டும் என்பது என் ஆசை. தமிழ் நாட்டுப் பெருவேந்தரும், சிறு மன்னரும், குறுநிலச் செல்வரும் அடிக்கடி போரிட்டுத் தம்மிடையுள்ள ஒற்றுமையைக் குலைத்துக் கொண்டு, மாற்றருக்கு இடங் கொடாவகையில் வாழ வேண்டும் என்பது என் விருப்பம். வருங் காலத்தே நாட்டில் பல வேறுபாடுகள் தோன்ற வழி பிறக்கலாம். ஒன்றுக்கும் செவி கொடாது நாமெல்லாம் தமிழ் இனம் என்ற உணர்வோடு வாழப் பழகிக்

கொள்ளுங்கள். செல்வத்தாலோ, புகழாலோ. பிற வகையாலோ ஒருவருக் கொருவர் பொருமை கொண்டு போரிடாதிருக்க வேண்டுகிறேன். இதோ இம் மணமகளிர் தந்தையார் வரலாறு இனிவரும் எதிர்காலத்துக்கும் தமிழன் இரண்டு படக்கூடாது என்பதை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கும். ஆம் நமக்குள் நாம் பிரிகின்றோம் என்றால் நம் கண்ணை நாமே குத்திக் கொள்ளுகிறோம் என்பதுதானே பொருள். ஆகவே பெரியோர்களே, மன்னர்களே, எக்காலத்தும், எக்காரணத்துக்கும், எவ்வாற்றானும் தமிழினம் பிரிந்து வாழக்கூடாது என்பதை எண்ணத்தில் வைத்து அதற்கேற்ற முறையில் நாட்டையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும் அமைத்து வாழுங்கள். நிற்க,

இதோ மணம் புரியும் செல்வங்களை யார் என்று சொன்னேன்? அவர்கள் தமிழர் அறமுறைப்படி இன்று இல்லற வாழ்வை மேற்கொள்ளுகின்றனர். தமிழர் வாழ்விடைக் கொண்ட பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். அவற்றிற் கெல்லாம் அடிப்படையாக அமைவது இல்லறமாகும்.

ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்தொருமித்து—ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு’

என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இந்நான்கினையும் ஒரு சேரப் பெறுவதற்கு ஏற்ற வாழ்வு இல்லற வாழ்வுதான். இல்லறத்தே இன்பம்

FF43F19

உண்டு. இல்லறத்தானே மற்றவர்களுக்கு அறமாற்றுபவன், அவனே பொருள் தேடவும் தக்க வல்லவன். அவன் வாழும் வளமார் நெறியினுல் வீடு அவனைத் தேடிவரும். எனவே, தமிழர், இல்லறத்தைப் பிற அறங்கள் அனைத்தினும் மேலாகக் கொண்டனர். தமக்காகவும் பிறர்க்காகவும் ஒரே வாழ்வில் வாழ வழி காட்டும் இல்லறத்தை மேற்கொள்ளும் இருமணச் செல்வங்களும் நில உலகில் நீடு வாழ்க என வாழ்த்துகின்றேன். அவர்கள் குலமும் நலமும் வழி வழிச் சிறப்பதாக! உங்கள் அனைவருடைய நல் வாழ்த்தும் பொருந்தப் பெற்ற அவர்கள் என்றும் சிறப்பார்கள் என்பது உறுதி. வாழ்க பாரி மகளிர். வாழ்க காரி மைந்தர்! வாழ்க வள்ளல்தம் மக்கள்! வாழ்க அவர் தம் மண அறம்! வாழ்க அறம் மலிந்த தமிழ் நாடு! வளர்க தமிழ்ப் பண்பாடு! வாழ்க உலகெலாம்! வளர்க இன்ப அன்பு!

TC LIBRARY
9658
THIAGARAJAR COLLEGE LIBRARY MATHURAI
Acc. No. 9658
Date
SVC 12-8-59
The Library Thiagarajar College
Location No.
The Library Thiagarajar College

19